# ஞானச்சுடர்

ஆடி 2018

247 ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம்.

**பொருள்:** கொலைக்கருவியைக் கையிலெடுத்தவருடைய மனம் நல்ல காரியங்களைச் செய்யாததுபோல பிற உயிரின் ஊனை உண்டு சுவை கண்டவர் நல்ல காரியம் செய்யமாட்டார். (253)

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல்.


**பொருள்:** அருள் என்பது ஒரு உயிரையும் கொல்லாமை; அருளின்மையென்பது கொல்லுதல்; ஆகவே கொலையால் வரும் ஊனை உண்ணுதல் பாவமாகும். (254)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### யோகமறியேன்



சென்னிக் கணியுன்றாள் சேவித்து நிற்றலே
பண்ணுக் கணியுன்னைப் பாடுதலே – கண்ணுக்
கணியுன் வடிவுகண் டானந்தங் கொள்ளல்
பணியை யணிந்தாய் பரம் 06

பரவுமடி யார்க்கருளைப் பாலிக்கும் ஐய!
இரவுபகல் காணாநின் றேத்த – வரமருள்வாய்
வாய்விட்டுச் சொல்ல வகையெனக்கிங் கில்லையே
நீவிட் டிடாதே நினை 07

நினைவி னினைவாகி நீயிருக்க நாயேன்
வினைவழியே சென்று மெலிகோ – எனையும்
இடுக்க ணெனக்கில்லை நின்செயலே யாவும்
நடுக்கமெனக் குண்டோ நவில் 08

நவிலு மறைநான்கு மாகமமுந் தேடி
நவில முடியாத நாத – தவமுடையார்
தம்மனத்தாய் நாயடியேன் சாற்றுங் கவிக்கிரங்க
எவ்வமுண்டோ கூறா யினி 09

இனிப்பிறவா நன்னெறிக்க ணெய்தினார் சேவைக்
கினிப்பிறக்க வென்னைப் பணியாய் – இனித்ததிருக்
கோலத்தா லைந்தொழிலுங் கூட்டிக் குனித்தருளுஞ்
சீலத்தாய் தில்லைச் சிவ! 10

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 247

2018 ஆடி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தொழில்நுட்பமும் இறை... | திருமதி ந. பரமேஸ்வரி | 01 -07 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 08 -10 |
| விநாயகர் | திருமதி பொ. திலகவதி | 11 -13 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 14 -18 |
| ஆகமம் என்ற சொல்லின்... | க. கணேசதேவா | 19 -21 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 22 -24 |
| தானம் செய்வோம் | யூ.பி. ஆனந்தம் | -25 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 26 -27 |
| சுட்டபழம் தெட்டபழம் | ஆழ்கடலான் | 28 -30 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 31 -32 |
| ஈழத்து ஈஸ்வரங்களும்... | அ. சுப்பிரமணியம் | 33 -38 |
| மண்டூர்க் கந்தசுவாமி கோயில் | மூ. சிவலிங்கம் | 39 -42 |
| சிவபெருமான் சோதிப்... | எம்.பி. அருளானந்தன் | 43 .-44 |
| விதி | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 45 -46 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 47 -49 |
| ஆடிப்பிறப்பன்று, கூடிப்... | கே.எஸ். சிவஞானராஜா | 50 -51 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 52 -57 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய... | உற்சவகால நிகழ்வு | 58 -59 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 60 -62 |
| ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமி... | வல்வையூர் அப்பாண்ணா | 63 -64 |
| வட இந்திய யாத்திரை | மோகனதாஸ் சுவாமிகள் | 65 -66 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் ஆனிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

ஞானச்சுடர் 246ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை பிரம்மஸ்ரீ கு. தியாகராஜ சர்மா (நீர்வைமணி) அவர்கள் மேற்கொள்ள இருந்தவேளை அவரது சார்பாக வந்திருந்த ஆசிரியர் திரு க. கணேசராசா அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தமது உரையில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளின் பயன்பற்றி சபையில் இருந்த அடியார்களுக்கு எடுத்துக்கூறியதோடு ஞானச்சுடர் மலரில் இடம்பெறும் கட்டுரைகளின்மூலம் பல விடயங்களை அறியக்கூடியதாக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இறுதியாக எமது வடபுலத்தில் இடம்பெறும் கலாச்சார சீர்கேடு, மாணவர் களிடையே ஏற்பட்டுள்ள போதைப் பழக்கம், கல்வி வீழ்ச்சி பற்றியும் அதனால் ஏற்பட்டுள்ள தாக்கங்கள்பற்றி எடுத்துக்கூறி அதனை எவ்வகையிலாவது சரிசெய்ய வேண்டும் என்ற தனது மன ஆதங்கத்தோடு வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

ஆனி மாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பில் உள்ளவரும் இளைப்பாறிய ஆசிரியர் திரு க. நவரத்தினம் அவர்கள் மேற் கொண்டார்கள்.

ஆசிரியர் அவர்கள் தமது மதிப்புரையில் ஞானச்சுடர் மலரில் இடம்பெற்ற கட்டுரைகளை தரம்பிரித்து அதனடிப்படையில் தனக்கேயுரிய பாணியில் சபையில் உள்ளோருக்கு விளக்கிக் கூறினார். ஆச்சிரமத்தில் இவ்வகைச் செயற்பாடு இடம்பெறும் காரணத்தினால் தாமும் சந்நிதி வேலவனை வணங்குவதற்கு இம்மலர் வெளியீடு ஒரு காரணமாய் அமைந்துள்ளது என்று கூறியதோடு, வெளியீட்டுரை ஆற்றவந்த ஆசிரியர் கூறிய கருத்துக்களின் தாக்கம் தம்மையும் பாதித்துள்ளதாகக் கூறி இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள இவ்வகைச் செயற்பாடுகளை களைவதற்கு நாம் எல்லோரும் முயற்சிக்க வேண்டும் எனும் கருத்தை வலியுறுத்தினார்.

அவர்கள் கூறிய கருத்துக்களை வலியுறுத்தி இம்மாத (ஆடி) சுடர் தரும் தகவல் எனும் பகுதியில் எமது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளோம். ஆவன செய்வதற்கு முயற்சிப்போமாக.

# சுடர் தரும் தகவல்

"கல்வியில் முதலிடம்" என்கிற நிலைமை மாறி, இன்று. வகைதொகையின்றி போதைப் பொருளின் ஊடுருவல் தலைதூக்கி தமிழர்களின் எதிர்காலச் சந்ததியை சூனியமாக்கி வருகிறது.

போருக்குப் பின்னரான தமிழர்களின் வாழ்வியல் திட்டமிட்டுத் திசை திருப்பி தமிழ் இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் போதைப் பொருட்களைத் தாராளமாகப் புழக்கத்தில் விட்டு ஒட்டுமொத்த சமூகத்தின் எதிர்காலத்தையே சீரழித்துச் சின்னாபின்னமாக்கும் முயற்சியில் வெற்றி கண்டிருக்கிறார்கள்.

ஒரு இனத்தின் இருப்பை சிதைக்க வேண்டுமெனில் அதன் கட்டமைப்புக்கள், கலாசாரங்களை, பண்பாடுகளை இல்லாதொழித்தால் அந்த இனம் விரைவிலேயே தனக்கான தனித்துவத்தை இழந்துவிடும் எனும் உண்மை தமிழ் இனத்தின் தற்போதைய போக்கில் தென்படுவது வேதனைக்குரியது.

கல்விப்புலத்தில் கொடிகட்டிப் பறந்த யாழ் கல்விச் சமூகத்தைக் குறிவைத்து போதைப் பொருட்கள் பரப்பப்படுவதன் பின்னணிகள் குறித்து நாம் இன்னும் தாமதிப்போமாக இருந்தால் எதிர்காலத்தில் வன்முறைமிக்க இளைய தலைமுறையை ஈழத்தில் உருவாக்குவதற்கு நாம் காரணமாகி விடுவோம்.

வடக்கு மக்கள் காலம் காலமாக இடப்பெயர்வுகளையும் சொத்தழிவுகளையும் சந்தித்த போதெல்லாம் அதிலிருந்து மீண்டெழ தமிழர்களின் மனோபலமே காரணமாகி நின்றது. இந்த மனோபலத்தை உடைக்கும் தந்திரோபாயமாக போதைப் பொருளை ஒரு கருவியாகக் கொண்டு வடக்கில் ஆழ ஊடுருவி தமிழ் இளைஞர் சமூகத்தை சீரழிக்கும் முயற்சிகள் அரங்கேற்றப்படும் இன்றைய நிலையில் இதிலிருந்து இளைஞர் சமூகத்தை மீட்பதற்கு யாருளர்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 08. செருக்களத் தலகை வகுப்பு

குதிரைத் திரள்பட் டபிணத் தையெடுத்
துதிரப் புனலிற் குளிக்கு மொருதிரள்
குருதிக் கடலைப் பெருகப் பருகிக்
குணலைத் திறனிற் களிக்கு மொருதிரள்
கொடுகொட் டிபடத் துடிகொட் டிநடத்
தடமிட் டுவளைத் திருக்கு மொருதிரள்
குடரைப் புயமிட் டுடலைச் சிறுகக்
குலையிட் டதிரச் சிரிக்கு மொருதிரள்:,

சதையைச் சிலகைக் கொளமற்றதனைச்
சருவிச் சருவிப் பறிக்கு மொருதிரள்
தறுகட் சிறுகட் டவளக் கவளத்
தமரத் திமிரப் பனைக்கை மதமலை
தலையுக் குளநற் றருணக் கிரணத்
தரளத் திரளைக் குவித்த டியெனுரல்
தனிலிட் டதனைத் தகுகைத் தலமுற்
றிடுநெட் டைமருப் புலக்கை முறைமுறை:,

எதிரிட் டதுகுத் திமுடித் தலையொப்
பவடுப் பெனவைத் தெலுப்பு விறகினை
எரியிட் டெரியிட் டுருவத் துடனெட்
டுலைவைத் துணைவைச் சமைக்கு மொருதிரள்
இருள்செற் றதடித் தினையொத் திடுகட்
கமெடுத் தெறியத் தெறித்த தலைகளை
இதெனக் கதெனக் கதுமற் றதனுக்
கெனமொய்த் துலவிப் பொறுக்கு மொருதிரள்:,

அதரத் துவிரற் படலைத் துமிகுத்
தரவத் தொடுகொக் கரிக்கு மொருதிரள்
அமுதொத் தநிணத் தசைமுக் கியறத்
தவசத் துயிலிற் கிடக்கு மொருதிரள்
அடவிப் புனமுற் றகுறத் திருவுக்
கமைவுற் றமணிப் புயத்த னறுமுகன்
அடன்மிக் கதயித் தியர்பட் டுவிழப்
பொருதிட் டசெருக் களத்தி லலகையே.

# ஆடிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

ந. ஜவகர்லால்நேரு
(லண்டன்)
மாதர்க்கரசி பொன்னுத்துரை
(கொழும்பு)
K. கனகசபேசன்
(கனடா)
செல்வி தம்பு சரோஜா
(சங்கீத முதன்மை இளை. ஆசிரியர், நெல்லியடி)
இ. பேரின்பநாயகன்
(நாவலர் பாலர் பாடசாலை ஸ்தாபகர், சுதுமலை)
Dr. V. ஸ்ரீஸ்காந்தன்
(ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக், சுதுமலை)
சி. பஞ்சலிங்கம்
(லிகிதர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)
வே. பாராளன்
(தொழில் நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)
S. தர்மரெத்தினம்
(அதிபர், சிறுப்பிட்டி)
ச. நவரத்தினராசவேல்
(அதிபர், வேல்பதி, புத்தூர்)
நா. இராசலிங்கம்
(இளை. அத்தியட்சகர்)
திருமதி கலாநிதி முரளிதரன்
(யாழ்ப்பாணம்)
ந. சேகர்
(கிராம சேவையாளர், வீரபத்திரர்கோயிலடி, உடுப்பிட்டி)
கு. ஸ்ரீமுருகமூர்த்தி
(கிளை முகாமையாளர், உடுப்பிட்டி, ப.நோ.கூ. சங்கம்)
சு.பொ. நடராசா
(அண்ணா தொழிலகம், இணுவில்)

த. கந்தசாமி
(இருபாலை வீதி, கோண்டாவில்)
செல்வி இ. வல்லிபுரம் ஆசிரியை
(நவக்கிரி)
செ. ஈஸ்வரன்
(சித்தங்கேணி)
சுப்பிரமணியம் அருளானந்தசிவம்
(அல்லாரைவீதி, மீசாலை கிழக்கு)
பாலசுப்பிரமணியன் ராகுலன்
(யாழ்ப்பாணம்)
ச. இராசரத்தினம்
(நாவலர்வீதி, யாழ்ப்பாணம்)
திருமதி மாலதி இராஜேஸ்வரன்
(உடுப்பிட்டி)
த. திருஞானசம்பந்தர்
(ஏழாலை வடக்கு)
புஸ்பநாதன் பிரதீபன்
(உரும்பராய் வடக்கு)
க. குணசிங்கம்
(சாவகச்சேரி)
இ. சிவஞானம் J.P
(புத்தூர்)
N. குலசேகரம்
(வருணன், அச்சுவேலி)
க.ம. செல்வரெத்தினம்
(நவாலி கிழக்கு, மானிப்பாய்)
சி. தனபாலசிங்கம்
(புலோலி)
ஆ. குலசிங்கம்
(இணுவில்)
சிதம்பரப்பிள்ளை அனுஜா
(அல்வாய்)
செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை
(பொலிகண்டி)

திருமதி உ. பேரானந்தம்
(தெல்லிப்பழை)
வி. சிவபாலசிங்கம்
(கரன் பான்சி, சுன்னாகம்)
க. ஸ்ரீஸ்கந்தராசா
(கிராமசேவகர், சிறுப்பிட்டி கிழக்கு)
ந. இராமரூபன்
(நீர்வேலி)
மு. இராஜேந்திரன்
((முருகையா கோவிலடி, புலோலி)
பொன். சற்குணநாதன்
(வேம்பன் வீதி, உரும்பராய்)
சொ. செல்லத்துரை
(பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை)
நா. தெய்வேந்திரம்
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
வி. தவத்துரைராசா
(மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்)
சு. அனுஷியாதேவி
((முருகவாசா, சித்தங்கேணி)
சி. கணேசமூர்த்தி
(அல்வாய்)
தயானந்தன் சுஜந்தன்
(அச்சக வீதி, கொக்குவில்)
உரிமையாளர்
(சுந்தர்சன்ஸ், மானிப்பாய்)
ச. சூரியப்பெருமான்
(ராகுலசூரியன், பருத்தித்துறை)
மா. அருட்செல்வம்
(எழுதுவினைஞர், புலோலி வடமேற்கு)
ச. சிவரூபன்
(சிறுப்பிட்டி)
செல்லையா சர்வேஸ்வரன்
(செல்வநங்கம், இணுவில்)

ஆ. மகேந்திரலிங்கம்
(வேம்போலை, இணுவில்)
உரிமையாளர்
(நாதன் அன் பிறதேர்ஸ், இணுவில்)
கணேசலிங்கம் ஞானாமிர்தம்
(குப்பிளான்)
செல்வன் சி. கௌதமன் C/O சி. சிவபாலன்
(யாழ்ப்பாணம்)
உரிமையாளர்
(ரேவதி நகைமாடம், யாழ்ப்பாணம்)
செ. வாமதேவன்
(இணுவில் மேற்கு, இணுவில்)
V. சேனாதிராசா
(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)
பிறேமதாஸ் சசிகலா
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
செல்வி தர்மினி ரவிச்சந்திரன்
(கட்டுடை, மானிப்பாய்)
க. சிவஞானசுந்தரம்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
திருமதி பொ. இரத்தினசோதி
(கதிரவேற்பிள்ளை வீதி, பருத்தித்துறை)
ச. கிருஷ்ணமூர்த்தி
(கணாதிபன் அச்சகம், கரணவாய்)
செ. அட்செயலிங்கம்
(ஆசிரியர், அல்வாய்)
மூ.சிவலிங்கம்
(காரைக்கால் வீதி, இணுவில்)
க. விகர்ணன்
(குமரகோட்டம், கோண்டாவில்)
R. பொன்னுராசா
(வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை)
S. தர்மலிங்கம்
(கமலபதி மாதர்சங்க வீதி, சித்தங்கேணி)
சி. குகநாதன்
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)

# தொழில் நுட்பமும் இறை நுட்பமும்

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

எழுத்தறிவித்த இறைவனே என்குருவே விநாயகா
பழுத்த மனத்தடியார் மனம்மகிழநின் றுண்ணறிவின்
எழுச்சி மிக்க எண்ணற்ற புதுமைகளை
எழுத்தில் வடிக்க வந்தேன் என்கருத்தில் கலந்திடுவாய் கணபதியே

நற் குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்கும் சரக்கன்று காண்

நல்ல இளம் யானைக் கன்றுபோன்ற அழகிய தோற்றமுடைய பால விநாயகன் எம் எண்ணக் கருவில் கலந்துவிட்டால் உலகில் கலைகளால் உண்டாகும் ஞானமாகிய மெய்யறிவு கற்றுணரமுடியாத ஒரு பொருள் அல்ல. அது இயல்பாகவே வந்தமையும் என்றவாறு.

இன்றைய காலகட்டத்தில் தொழில் நுட்ப அறிவு மேலோங்கி மக்களிடையே புதுமைகள் புகுந்து விளங்குவதை யாவரும் அறிவர். வேகமாகச் சுழலும் உலகில் விரைந்து செய்யவேண்டிய பணிகளைச் செய்யத் தொழில் நுட்ப அறிவு மனிதனுக்கு மிக உதவியாக அமைகின்றது. பொதுவாக உலகமுழுவதும் செறிந்து வாழும் மக்களுடன் தொடர்பு கொள்ளவும் அவர்களின் தேவைகளை உடனுக்குடன் அறிந்துகொண்டு உதவவும் தகவல் தொழில் நுட்பம் மிகவும் உதவியாக அமைகின்றது. எங்கு எது நடந்தாலும் விரைவில் அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பை இத் தொழில்நுட்பம் தந்துள்ளது. இன்றைய விஞ்ஞான வளர்ச்சியும் தொழில் நுட்ப அறிவும் அதிசயமான அற்புதமான அறிவாற்றலை மக்களிடையே வளர்த்துள்ளது. பரந்து விரிந்த இவ்வுலகம் முழுவதும் ஒரு கைக்குள் அடங்கும் அளவிற்கு கையடக்கத் தொலைத் தொடர்புச் சாதனங்கள் உருவாகியுள்ளன. நமது எண்ணங்களை நல்ல சிந்தனைகள் கருத்துக்களை உலகத்தோடு பகிர்ந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இத்தகைய வசதிகள் இருக்கும்போதே அவற்றைப் பயன்படுத்தி நல்லதோர் உலகத்தை உருவாக்கி சாந்தமும் அமைதியும் ஒற்றுமையும் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்து பிறந்த பயனை அனுபவிக்க நாம் முயல வேண்டும். இத் தொழில் நுட்ப அறிவின்மூலம் உலகில் நடந்ததை நடப்பதை அறிந்து கொள்கின்றோம். நடக்கவிருப்பதையும் யூகித்து ஓர் அளவிற்கு அறிந்துகொள்ள முடிந்தாலும், நிகழ்வதைத் தடுக்கவோ அல்லது நினைத்தபடி நிகழ்வுகளை உருவாக்கவோ இவ்வறிவு பயன்படுகிறதா? என்றால் இல்லையென்றுதான் கூறவேண்டும். உலகம் ஒரு வலைப் பின்னலுக்குள் சிக்கிவிட்டது. கவர்ச்சிகரமான விளம்பர மோகத்தில் இளைய சமுதாயம் சிக்கிக்கொண்டு திண்டாடுகின்றது. எல்லாம் வெட்ட வெளிக்கு வந்தபின் இவர்களுக்குத் தீயவற்றைப் பார்க்காமல், தீண்டாமல், கேட்காமல் எப்படி மறைத்து வைக்க முடியும்? கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று

*ஊக்கத்துடனும் துணிவுடனும் எந்த ஒரு செயலையும் தொடங்கவேண்டும்.*

நவநாகரீகம் என்ற போர்வையில் அநாகரீக மான செயல்களெல்லாம் உலகம் முழுவதும் பரவியுள்ளது. நன்மை தீமையைப் பகுத்தறி யும் ஆற்றல் கொண்டு பயன்படுத்த முடியாத அவசரம். இந்த அவசர புத்தியின் விளைவு அவலம் துன்பம் என்பவையே.

நாம் கண்டறிந்த அற்புதமான இத் தொடர்பாடல் சாதனங்களை பணமீட்டும் கருவி களாக மட்டும் பயன்படுத்தாமல் மக்கள் நலன் காக்கும் கருவிகளாகவும் பயன்படுத்தினால் நாமும் நம் சந்ததியும் அமைதியாக ஆரோக் கியமாக நிம்மதியாக வாழலாம். நிம்மதியான வாழ்விற்குப் பணம் மட்டும் போதாது. நன்மை தீமைகளைப் பகுத்தறியும் அறிவும் தேவை. முன்பு கல்வி முறை அறிவை வளர்க்கப் பயன்பட்டது. இன்று பணம் சம்பாதிப்பதை முன்னுரிமையாகக் கொண்டே கல்விமுறை அமைந்துள்ளது. பணத்தை மட்டும் கருத்திற் கொண்டால் நாம் அழிவுப்பாதையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம் என்று அர்த்த மாகும். அறிவிற்கு முன்னுரிமை கொடுத்து நம்மை வளர்த்துக்கொண்டால் வாழும் கலையை அறிந்து வாழ்வைச் செப்பனிட்டுக் கொள்ளமுடியும்.

மனிதன் தன் நுண்ணறிவால் எதை யும் சாதிக்கலாம் என்ற பெருமையும் கர்வ மும் மனித குலத்தை விலங்கியல் வாழ்க்கைக் குத் தள்ளி மனிதனை மிருகமாக்கும் நிலைக்கு வளர்த்துவிட்டது என்பதுவே உண்மை. இத் தகைய உயர்ந்த ஆற்றல் படைத்த மூளை யால் நோய்கள் வராமல் தடுக்க முடிகின்றதா? ஒரு நோய்க்கான காரணத்தை ஆராய்ந்து அதற்கான சிகிச்சையை மேற்கொள்ள அது இன்னொன்றாக உருவெடுக்கின்றது. இப் படியே நோய்கள் புதுப் புதுப் பெயருடன் தோன்றிக்கொண்டேயிருக்கின்றது. வைத்திய சாலைகள் பெருகப் பெருக நோயாளர் கூட்ட மும் பெருகிக்கொண்டே போகின்றது. தனியார் மருத்துவமனைகள் அரசினர் வைத்திய சாலைகள் எங்கு பார்த்தாலும் நோயாளர் கூட்டம் இட நெருக்கடி. சந்தோசமாக வாழ வேண்டிய அருமையான நேரங்கள் மருத்துவ மனைகளில் வெறுப்புடன் கழிகின்றன. எந்த நேரமும் நோயைப் பற்றியே சிந்திப்பதால் எந்த நேரத்தில் எந்த நோய் வருமோ என்ற அச்சமே மனிதனை நோயாளியாக்குகின்றது.

மனிதனின் இயல்பு ஆரோக்கியம், எந்த நோய்க் கிருமிகளையும் எதிர்க்கும் ஆற் றல் மனிதனுக்கு இயல்பாகவே உள்ளது. உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருந் தால் எந்த நோய்க் கிருமியும் நம்மைத் தாக்கமுடியாது. ஆரோக்கியத்திற்கு முக்கிய காரணம் உடல் உளத் தூய்மையே ஆகும். தூய்மையாக இருக்கும் இடத்தில் நோய் அணுகாது. நாம் தூய்மையற்றவர் பலவீன மானவர் எந்த நோயும் நமக்கு வரலாம் என்ற எண்ணமே நோய்க்கான முதற்காரணம். இத்தகைய பயங்கரமான அச்சத்திலிருந்து விடுபட வேண்டுமாயின் தன்னைத் தான் அறிய வேண்டும். தான் யாரென்பதை அறியவேண்டும்.

மனித அறிவின் அதி உச்சமான அறிவு தன்னையறிதல் ஆகும். பௌதீக மாற்றம் உலகில் ஒவ்வொரு கணமும் மாறிக் கொண்டேயிருக்கும் தன்மையது. ஆனால் மூலப்பொருள் என்றும் மாறுவதில்லை. இது விஞ்ஞானிகளாலும் மெய்ஞானிகளாலும் ஏற் றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இயற்கை சூழல் மாறுதலுக்கேற்ப தொழில்நுட்ப அறி வும் மாறிக்கொண்டேயிருக்கும். இவ்வறிவு ஒருபோதும் மனிதனை நிறைவடையச் செய் யாது. இன்னும், இன்னும் வளரவேண்டும் என்று தூண்டிக்கொண்டேயிருக்கும். இத னால் நாம் வாழ்க்கையின் நிகழ்காலத்தை வீணே தொலைத்துக் கொண்டிருக்கின்றோம். என்றும் மாறாத மூலவேரைப் பற்றிப் பிடித் துக்கொண்டால் நாம் மனிதர்களாகி அன்றாட

தேவைகளை அமைதியாக நிறைவேற்றிக் கொண்டு நிம்மதியாக வாழ முடியும்.

மனித மூலம் என்ன? மனிதன் எதில் இருந்து தோன்றினான்? மனித உடம்பின் ஒவ்வொரு உறுப்பும் எவ்வாறு உருவாக்கப் பட்டுச் செயற்படும் வகையில் இணைப்புகள் தொடர்புகளை உருவாக்கி செயற்பட வைப் பது யார்? இதை யார் எவ்வாறு செய்தார் கள்? கண் பார்க்கின்றது. செவி கேட்கின்றது. வாய் பேசுகின்றது - சுவையறிந்து உண்கின் றது. உடல் தட்ப வெப்பங்களை உணர்கின் றது. மூக்கு மூச்சுக்காற்றை உள்ளிழுத்து விடுவதுடன் நாற்றத்தையும் அறிந்து கொள் கின்றது. இதயம் இடையறாது துடித்துக் கொண்டே இருக்கின்றது. மனம் கண்டது கேட்டதைப்பற்றி எண்ணிக்கொண்டேயிருக் கின்றது. மூளை செயலைத் தூண்டிக்கொண்டே இருக்கின்றது. இப்படி உணவுச் சமிபாடு கழிவு வெளியேற்றம் எல்லாம் தானாகவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவற்றை எல்லாம் மனிதன் சாதாரண விடயமென விட்டுவிட்டு உலகை அளக்க முனைகின்றான். பூமி உருண்டையா? தட்டையா? அதன் நீள அகலம் என்ன? அது எவ்வாறு சுழல்கின் றது? எந்தக் கோள் பெரியது? அதன் பரிமாணம் என்ன? எங்கே சென்றால் மனிதன் எல்லோருக்கும் தலைவனாக முதல்வனாக விளங்கலாம் என்பதைப் பற்றியே சிந்திக்கின் றான். இச்சிந்தனை மனிதனை ஆட்டிப் படைத்து எங்கெங்கெல்லாமோ இழுத்துச் செல்கின்றது. இதற்கான முடிவு பின்வருமாறு.

இத்தகைய அண்டங்களையும் பிண் டங்களையும் யார் உருவாக்கினான்? யார் இதை ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளாத வாறு இயங்கவைத்துக் கொண்டிருக்கின் றான்? இவற்றையெல்லாம் இயக்கும் இயக் குனர், கர்த்தா யார்? இதையறிவதே வாழ் வின் இலட்சியம். இதை அறிந்துகொள்ளா மல் மனிதனால் நிறைவு பெறவோ மனச் சாந்தி பெறவோ முடியாது.

இதனை யோகர் சுவாமிகள் பின்வரு மாறு பாடியுள்ளார்.

"சூரியன் வருவது யாராலே தூமதி தவழ்வதும் யாராலே
விண்மீன் மிளிர்வது யாராலே வெய்யிலெறிப்பது யாராலே
கண்ணிணை காண்பது யாராலே காற்றுமடிப்பது யாராலே
தண்ணீர் பெருகுதல் யாராலே தக்கோர் புகழ்வது யாராலே
பூமி சுழல்வது யாராலே பூக்கள் மலர்வது யாராலே
கால்கள் நடப்பது யாராலே கைகள் எடுப்பது யாராலே
எண்ணிப்பார் நீ அறிவாயே எல்லாம் சிவன் செயல் குறியாயே
சொல்லு சுதந்திரம் பெறுவாயே சுவாமி வாக்கிது தெரிவாயே"

இன்னோர் கவிஞர்,

"பூவே உன்னைப் படைத்தவர் யார்?
புதுமணம் உள்ளே வைத்தவர் யார்? என்று பாடியுள்ளார்.

இதைவிட நாயன்மார்கள் அருளிய தேவார திருவாசகங்களில், விறகிற் தீயினன், பாலிற்படு நெய்யினன் என்று இறைவன் நம் முள் மறைந்திருந்து செயலாற்றுவதை உணர்த்தியுள்ளனர். இத்தகைய அருமை யான அழகான அற்புதமான உலகத்தைப் படைத்த இறைவனின் அறிவு எத்தனை நுட்பமானது? இதை வெறும் மனித அறிவால் சாதிக்க முடியுமா? இந்த அற்புதமான உல கைப் படைத்த இறைவன் எவ்வளவு

*நல்ல நண்பர்கள் துயரத்தை எளிதாக்குகிறார்கள்.*

அற்புதமான ரசிகன். இதை உருவாக்கிய ரசிகனின் துணையோடுதான் நாம் இவ் உலகை ரசிக்க முடியும். அந்த மூலவனின் கண்களால் உலகைப் பார்க்க வேண்டும். அவன் காதால் அவன் வாக்கைக் கேட்க வேண்டும். அவனுணர்வில் நிறைய வேண்டும். அப்போதுதான் இவ்வுலகின் உண்மைத் தன்மையைப் புரிந்து ரசிக்க முடியும். யோகர் சுவாமியும் தம் பக்தர்களுக்கு "எவ்வளவு அற்புதமான உலகம் பார்" என்று அடிக்கடி கூறியிருக்கின்றார்.

இத்தகைய இறைவனைப்பற்றிய அற்புதங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். அவன் புகழை - பெருமையைப் பேசவேண்டும். அந்த இறைவனுடன் தொடர்புகொண்டால் மட்டுமே படைப்பின் இரகசியங்களை அறிந்துகொள்ளவும், ரசிக்கவும் முடியும். வெளியுலகத் தொடர்புகள் அவசியம் கருதிச் செயற்படும்போது நன்மை பயக்குமேயன்றி மற்றப்படி நம் சக்தியையும் நேரத்தையும் விரயமாக்கும். இறைவனுடனான தொடர்பு நமக்கு அருட்சக்தியாகிய ஆன்ம சக்தியை நல்குவதுடன் நம் கடமைகளை நிறைவாகச் செம்மையாகச் செய்யும் ஆற்றலையும் நமக்களிக்க வல்லது. இதற்காக நாம் செய்ய வேண்டியதெல்லாம் நம்மைப் படைத்து; வாழ்வாதாரத்திற்கான வசதிகளைச் செய்து கொடுத்து, வாழும் வழியையும் காட்டித்தந்த அந்த இறைவனை நன்றியுடன் நினைப்பதாகும்.

அவன் நமக்குச் செய்வதெல்லாம் நம் நன்மை கருதியே என்று அந்த இறைவனின் செயல்களில் பூரணமான நம்பிக்கை வைப்பதும் பிரதிபலன் கருதாத அன்பை வளர்த்துக் கொள்வதுமாகும். "அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையே" என்று இராமலிங்க வள்ளலாரும் அருமையாகப் பாடி உள்ளார். இறைவனிடம் தொடர்புகொள்ள எந்தப் புறச் சாதனங்களோ பணமோ தேவை இல்லை. அன்பு ஒன்றே போதும். இந்தத் தூய அன்பின் சக்தியை உலகில் எந்தச் சக்தியாலும் வெல்லமுடியாது.

இவ்வறிவு இறையறிவு, ஆன்மீக அறிவு, தன்னை அறியும் அறிவு என அழைக்கப்படுகின்றது. நான் ஆன்மா, நான் அன்பு, நான் தூய சக்தி என்ற எண்ணமே எமக்கு வலிமையைத் தரவல்லது. இவ்வலிமையே நம் மனதிற்கும் உடலிற்கும் நோய் எதிர்ப்புச் சக்தியை ஊட்டவல்ல வலிமையாகும். இத்தகைய வலிமையே இன்றைய இளைஞர் சமுதாயத்திற்குத் தேவையெனச் சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கின்றார். ஏனெனில் நமக்கு ஆன்மீக அறிவு இருந்தும் அதைச் செயற்படுத்தும் துணிவின்றிச் சோம்பேறிகளாக நாம் வெளிச்சக்திகளை வெல்லும் திராணியற்று இருக்கின்றோம். "விழித்தெழு, நம்பிக்கையுடன் செயற்படு வெற்றி பெறுவாய்" என்றே சுவாமி விவேகானந்தர் வீர முழக்கம் செய்துள்ளார். எங்கள் ஆன்மீக, தெய்வீக நம்பிக்கை எதனையும் எதிர்த்து முறியடிக்க வல்லது என்பதே வீரத்துறவி விவேகானந்தரின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். அவரது வரலாறுகளையும் ஆன்மீகச் சொற்பொழிவுகளையும் வாசித்தால் அதிக நம்பிக்கை நம்மிடையே உருவாகி நம்மைப் பலப்படுத்தும்.

இதை எமது சைவ சமயப் புராணங்கள் வாயிலாக அறிந்துகொண்ட சம்பவங்களோடு தொடர்புபடுத்திப் பார்க்கும்போது பல உண்மைகள் எமக்குப் புலனாகின்றன. அமிர்தம் பெறுவதற்காகப் பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தனர். மேரு மலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பை நாணாகவும் (கயிறாக) கொண்டு கடைந்தனர். வேதனை தாங்காமல் பாம்பு விஷத்தைக் கக்கியது. எல்லோரும் பயந்து

*பெரிதாக வாக்களிப்பதைவிட சிறிதளவு கொடுப்பது மேல்.*

ஓடினர். எங்கே ஓடினர்? உலகத்தின் பிதாவான (தந்தையான) அப்பன் சிவனிடம் ஓடிச் சென்று முறையிட்டனர். ஏனெனில் சிவம் அன்புமயமானதால் அனைவரையும் காத்து இரட்சிக்கும் ஆற்றல் கொண்டது. சிவபெருமானோ உலக மக்கள்மீதுள்ள கருணையால் அந்த விஷத்தைத் தானே எடுத்து வாயிற்போட்டார். அங்கிருந்த அம்மை பார்வதி அந்த விஷம் உள்ளே இறங்காதவாறு கழுத்தில் கையை வைக்க, விஷம் அங்கே தங்கிவிட்டது. அதனால் இறைவன் நீலகண்டன் ஆனார். எல்லா உயிரினங்களிலும் நானே இருக்கிறேன் என்னும் கூற்றுக்கிணங்க பாம்பும் அவனே, பறவையும் அவனே, மனிதர் விலங்கு ஆகிய எல்லா உயிரினங்களும் அவனேயாக விளங்கும்போது தனக்குத் தானே எவ்வாறு நஞ்சாக எதிரியாக இருக்கமுடியும்? நம்மிடமுள்ள எதிரிகளான வஞ்சம், பொறாமை, அவநம்பிக்கை, அச்சம், பலவீனம் ஆகிய எதிரிகளை இறைவன் காலடியிற் சமர்ப்பித்து அவனே தஞ்சமெனச் சரணடைந்தால் நாமும் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழலாம். சிவனின் திருவிளையாடல்களில் இத்தகைய தியாகத் தன்மையை நாம் புரிந்துகொள்ளாவிடில் நாம் வெறும் மூடர்களேயாவோம்.

இது இறைவன் தன்னை - தன் அன்பை வெளிப்படுத்திய திருவிளையாடல் ஆகும். இதைவிட வெளி உலகில் நடக்கின்ற பல அற்புதங்களையும் நாம் அறிந்து கொள்ள வேண்டியவர்களாகின்றோம். இன்றைய நவீன உலகில் எத்தனையெத்தனை பிரமாண்டமான கட்டிடங்கள் உயரமான கோபுரங்கள் பாலங்கள் போன்றவை எல்லாம் கட்டப்படுகின்றன. இவற்றை உருவாக்குவதற்காக விசேட பயிற்சிகள் பெற்ற பொறியியலாளர்கள் கட்டிடக் கலைஞர்கள் எல்லோரும் பாரம் தூக்கிகள் போன்ற பல மின் கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் இந்தியாவில் பழம் பெருமை வாய்ந்த கோவில்கள் கோபுரங்கள் எல்லாம் இன்றைய தொழில் நுட்ப வசதிகள் ஏதும் இல்லாத காலத்தில் எவ்வாறு கட்டப்பட்டன என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தால் மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு நன்கு விளங்கும். உதாரணமாகத் தஞ்சைப் பெரிய கோயிலை எடுத்துக்கொண்டால் அதன் கட்டிட அமைப்பு ஒரு அதிசயமாகத் தென்படுவதை அவதானிக்கலாம். மூல மூர்த்தியாகிய சிவன் வீற்றிருக்கும் கருவறையின் மேல் விதானமாக ஒரே ஒரு கல் குடைபோல் விளங்குவதைக் காணலாம். அத்தகைய அந்தப் பெரிய பிரமாண்டமான பாறையை அத்தனை உயரத்தில் சரியாகப் பொருந்தும்படி தூக்கி மேலேற்றி வைத்தது யார்? இராஜ ராஜ சோழ மன்னன் காலத்தில் இப்போது போன்ற பாரம் தூக்கிகளோ வேறு நவீன கருவிகளோ இல்லாத காலம். இது எப்படிச் சாத்தியமாயிற்று? இறைவனுக்குப் பெரிய கோவில் கட்டி அன்புடன் ஆராதித்து அவனது அருட் சக்தியை மக்கள் எல்லாரும் பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் அரசன் செயற்பட்டான். அதற்கு அவனருளையே பூரணமாக நம்பினான். இறைவனும் கட்டிடக் கலைஞனும் மனமொன்றிப் பாறையை மேலெழுப்ப முனையும்போது இறைவனின் அருட்சக்தி வெளிப்பட்டு அதை இலகுவாகச் செய்து முடித்தது. மனித முயற்சியும் இறை அனுக்கிரகமும் ஒன்று சேர்ந்தால் எந்தப் பணியையும் இலகுவாகச் செம்மையாகச் செய்து முடிக்கலாம். இந்த அரும் பெரும் கட்டிடத்தின் அற்புத மகிமையை இன்று வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்து பார்த்து அதிசயப்பட்டுப் புகழ்ந்து பேசுகின்றனர். புகைப்படங்களை எடுத்து எல்லோருக்கும் காண்பித்து அதன் மகிமையை வியக்கின்றனர். இத்தகைய

*எல்லா அதிருப்திகளின் வேர் தன்னலமே.*

தஞ்சைப் பெரும் கோயிலின் கட்டிடச் சிறப்பை விட இறைவன் ஏழைகள்பால் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தும் வகையில் ஓர் கதையும் இந்த ஆலயத்தைப் பற்றிச் சொல்கின்றது.

இராஜராஜ சோழ மன்னன் இக் கோவிலைக் கட்டி முடிக்கும் வரை பணியாளனாயிருந்து ஓய்வின்றிப் பணிசெய்து அதனை நிறைவு செய்து கும்பாபிஷேகமும் செய்து இறைவனை அக்கோயிலில் எழுந்தருளச் செய்தபின் எல்லாவற்றையும் முடித்த மனநிறைவுடன் தூங்கச் சென்றான். தூங்கு முன் இறைவா ஓய்வொழிச்சலின்றி உன் பணியைச் செய்ய வேண்டியிருந்ததால் இத்தனை நாள் வராத உறக்கம் இன்று என்னை நிம்மதியாக உறங்க வைக்கப்போகின்றதே என்று கூறி உறங்கச் சென்றான். உறக்கத்தில் சிவபெருமான் அரசன் கனவில் தோன்றி, "கிழவி கொடுத்த கல்லின் உறுதியில் நானும் நிம்மதியாக இருக்கின்றேன்" என்று கூறினார். விடிந்தபின் அரசன் எழுந்து கட்டிடக் கலைஞர்களை அழைத்துத் தன் கனவைக் கூறி, யார் அந்தக் கல் கொடுத்த கிழவி என்று விசாரித்தார். கோயில் திருப்பணி நடந்து கொண்டிருந்தபோது அவ்விடத்திற்கருகாமையில் ஒரு மூதாட்டியின் குடிசை இருந்தது. அந்த மூதாட்டி மிகவும் ஏழை உதவிக்கும் யாரும் அற்றவர். ஆனால் இறைவன்பால் அன்பும் பக்தியும் கொண்டவர். பணி செய்யும்போது எமக்குக் குடிநீர் தந்து தாகம் தீர்த்தவர் என்று கூறியதோடு ஒருநாள் நடந்த சம்பவத்தையும் கூறினர்.

ஒருநாள் அந்த மூதாட்டி இவ்விடம் வந்து இக்கட்டிடப் பணிக்கு எவ்விதப் பொருள் உதவியும் செய்ய என்னால் முடியவில்லையே என்று வருத்தப்பட்டு என்னிடம் ஒரு நீளமான கல் இருக்கின்றது அதை எடுத்துப் பயன்படுத்துங்கள் என்று கூறினார். அந்தக் கல்லே மூலஸ்தானத்தின் வாசலில் இருக்கும் படிக்கல் என்றும் கூறினார்கள். அரசன் அந்த மூதாட்டியின் பக்தியை நினைந்து தான் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து முடித்தேன் என்று நினைத்திருந்த கர்வம் ஒழிந்து அந்த மூதாட்டியின் குடிசை தேடிச் சென்று அவரை வணங்கித் தான் கண்ட கனவையும் கூறி அந்த மூதாட்டியை மகிழ்வித்தார் என்ற கதையும் கோவில் வரலாற்றில் உள்ளது. இறைவன் அன்பர்க்கு அன்பன் ஏழை பங்காளன் என்பதை இதன்மூலம் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

இன்றைய நவீன உலகில் எல்லாரும் இந்த நிறையறிவைப் பெற்று அறிந்ததை வாழ்வில் கடைப்பிடித்துச் செயற்படுத்தவேண்டும். ஏனெனில் வீட்டிற்குள் இருக்கும் பிள்ளையும் புற உலகில் எங்கும் நிகழும் நிகழ்ச்சிகளையெல்லாம் அறிந்து கொள்ளக்கூடிய காலகட்டம் இது. எங்கள் குழந்தைக்கு நாம் நல்லதைச் சொல்லிக் கொடுத்தாலும் பிள்ளைகள் வாழும் வளரும் சூழல் அதை ஏற்றுக்கொண்டால்த்தான் எந்தப் பிள்ளையும் நம்பிக்கையுடன் அதனை ஏற்றுக்கொள்ளும்.

இன்று உலகம் முழுதும் தோன்றி உள்ள மாயக் கவர்ச்சியென்னும் வலையில் சிக்கிக் கொண்டிருக்கும் மக்களை விடுவித்து இறைவனின் அன்பு வலையில் சிக்க வைக்க வேண்டும். அதற்கான ஆன்ம பலத்தை உலக மக்களிடையே தோற்றுவிக்க வேண்டும். இதற்கு மனித முயற்சியும் இறை அருளும் ஒன்றுகூடினால்த்தான் செயற்பட முடியும். "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கிணங்க நாம் முயற்சி செய்வோம். இறைவன் நமக்கு என்றென்றும் உதவி பணியை வெற்றிபெறச் செய்வான். இதற்கு முதலில் நஞ்சை அமிர்தமாக்கும் அஞ்செழுத்தை (நமசிவாயத்தை) உலகெங்கும்

*மனிதர் எண்ணத்தை மீறியும் காலச்சக்தி வேலை செய்வதுண்டு.*

ஒலிக்கச் செய்ய வேண்டும். இந்த அருமருந்தின் அருமை பெருமையை உலக மக்கள் உய்த்துணர்ந்து பேதமின்றி எல்லா மக்களும் அன்பெனும் அமிர்தத்தைச் சுவைத்து ஆனந்தமான வாழ்வை அனுபவிக்க வேண்டும் என்பதே என் அவா.

அவனருளாலே அவன்தாள் வணங்கி அவனிடமே இதைச் சமர்ப்பிக்கின்றேன். அவன் இன்னருள் சுரந்து இதனைச் செயற்படுத்துவான் என்ற பூரண நம்பிக்கையுடன் இளைய சமுதாயத்தின் மறுமலர்ச்சியைக் காணக் காத்திருக்கின்றேன்.

நம்பினோர் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பிதுவே.

## அரவணைக்கும் அரண்மனை!

அரண்மனை யொன்று
அலங்கரித்து நிற்கிறது
நகரின் நுழைவாயில்
நாவற் குழிதனிலே!

தித்திக்கும் தேனாம்
திருவாசகம் தன்னை
திக்கெட்டும் பரப்பிடவே
ஆறுமுகன் அருளாலே
அழகுற எழுந்தது பார்!

கருங்கல்லில் செதுக்கிய
திருவாசகத் துளிகள்
மொழி பெயர்ப்புகளுடன்
விழி விரிக்க வைக்கிறதே!

சைவத் தமிழ்ச் செல்வம்
சகமெங்கும் பரவிடவே
உய்ய வழி தேடும்
உன்னன்பர் உணர்ந்திடவே!

வேரறுக்க நினைக்கின்ற
வேற்று மதத்தவர்கள்
வேறெங்கோ ஓடவே
வீறு கொண்டு எழுந்ததுபார்
வியத்தகு அரண்மனையே!

- இரா. ஜெயக்குமார் -

தீய செயல்களிலிருந்து நம்மைத் தடுப்பவன் நண்பன்.

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 06. அநுபோக சுத்தி

63. தன்மை பிறரால் அறியாத தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே யென்னான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி யெந்தாய் எங்குப் புகுவேனே.

**ப-ரை:**

தன்மை பிறரால் அறியாத தலைவா- நின் தன்மை பிறர் எவராலும் அறியமுடியாத இறைவனே, பொல்லா நாயான புன்மையேனை ஆண்டு- பொல்லாத நாய்போன்ற இழிவுடைய வனாகிய என்னை ஆட்கொண்டருளி, ஐயா புறமே போக விடுவாயோ- ஐயனே என்னைப் புறத்தே செல்ல விடுவாயோ? என்னை நோக்குவார் யாரே- அங்ஙனம் விடுவாயாயின் என்னை அருட்கண்ணாற் பார்த்துப் பாதுகாப்பவர் பிறர் எவர் உளர்? எம்பெருமான் நான் என் செய்கேன்- எம்பெருமானே நான் யாது செய்ய வல்லேன்? பொன்னே திகழும் திருமேனி எந்தாய்- பொன்போல விளங்கும் திருமேனியையுடைய எந்தையே! எங்கு புகுவேன்- நின்னிடத் தன்றி வேறு எவ்விடத்து அடைக்கலம் புகுவேன்?

தன்மை பிறரால் அறியாத தலைவனே, நாய்போன்ற புன்மையையுடையவனாகிய என்னை ஆட்கொண்டருளிப் புறத்தே செல்லவிடுவாயோ? அங்ஙனம் விடுவையாயின் என்னை நோக்குவார் பிறர் எவர் உளர்? எம்பெருமானே! நான் யாது செய்ய வல்லேன்? பொன்னே திகழும் திருமேனியையுடைய எந்தையே, நின்னிடத்தன்றி வேறு எவ்விடத்து அடைக்கலம் புகுவேன் என்பதாம்.

பிறர் எவராலும் அறியமுடியாத உண்மை இயல்புகளை இறைவன் உடையனாதல் பற்றித் "தன்மை பிறரால் அறியாத தலைவா" என்றருளினார். பிறரன்றி அவன்தானும் முழுவதும் அறியான் என்பது. "தன் பெருமை தானறியாத் தன்மையன் காண் சாழலோ" (சாழல் 19) என்பதனால் விளங்கும்.

"ஞானந் தானுரு வாகிய நாயக னியல்பை
யானும் நீயுமாய் இசைத்துமென் றால்அ(ஃ)தெளிதோ
மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதுந்
தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தலைமை"

சூரன் அமைச் 128

எனக் கந்தபுராணத்து வருதலும் கண்டு அறியற்பாலது.

கேட்காமலே கொடுக்கப்படுவதைக் கொடை என்று சொல்லலாம்.

பொல்லாநாய்- தீங்குமிக்க நாய். நாயான- நாய்போன்ற "நாயான நந்தம்மை யாட் கொண்ட நாயகனை" (அம்மானை7) என வருதலுங் காண்க. புறமே போக விடுவாயோ என்றது நின்முன்னிலையிலன்றிப் புறத்தே போக விடுவாயோ என்றவாறு. ஓகாரம்- எதிர்மறை. விடுதல் நின் தகுதிக்குப் பொருந்தாது என்பது கருத்து. என்னை நோக்குவார் யாரே என் றது என்னை நோக்குவார் நின்னையன்றிப் பிறர் இல்லை என்றபடி.

பொன்னே திகழுந் திருமேனி- பொன்னைப்போல விளங்குகின்ற திருமேனி. "பொன்னை யழித்த நன்மேனிப் புகழில் திகழும் அழகன்" (குயிற் 7) "பொன்னேர் தரு திருமேனியனே" (தே.ஞான 160:1) "பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்" "பொன்னொத்த மேனி" "பொன்போல் திருமேனி யுடையான் றன்னை" (தே.நாவு 1:8; 81:9; 243:2) "பொன்னார் மேனியனே" "பொன்செய்த மேனியினீர்" (தே.சுந். 24:1; 25:1) "பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி" (பதினொராந். பொன்வண்ணத். 1) என வருவன காண்க. பொன்னே திகழுந் திரு மேனி எந்தாய் என்றது ஈண்டு ஞானாசாரியனது திருமேனியை நினைவு கூர்ந்து கூறியதாகும். எங்குப் புகுவேன் என்றது நின்பாலன்றி புகலிடம் பிறிதில்லை என்றவாறு. "போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை" (சத 62) "பொருளே தமியேன் புகலிடமே" (நீத் 17) என அடிகள் அருளியமையுங் காண்க. ஏ- ஆசை.

இதன்கண், ஆண்டு புறம்போக விடுவாயோ? என்னை நோக்குவார் யாரே? யான் என் செய்வேன்; எங்குப் புகுவேன் என்பவற்றால் நின் காட்சியை இழந்தயான் பிராரத்த வினைப் பயனை நுகரும்போது நிகழும் தீய அநுபோகங்களை நீக்கியருள வேண்டுமென்பது புலப்படுதலின் அநுபோகசுத்தி யென்னும் ஆறாம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 59.

**64. புகுவேன் எனதே நின்பாதம் போற்று மடியா ருள்நின்று**
**நகுவேன் பண்டு தோள்நோக்கி நாண மில்லா நாயினேன்**
**நெகுமன் பில்லை நினைக்காண நீயாண் டருள அடியேனுந்**
**தகுவ னேயென் தன்மையே எந்நாய் அந்தோ தரியேனே.**

**ப-ரை:**

நாணம் இல்லா நாயினேன்- என் தகுதியின்மையை நோக்கி நாணுதல் இல்லாத நாய்போன்ற கீழ்மையையுடையேன், பண்டு போற்றும் அடியார் உள் நின்று- எனக்குக் காட்சி கொடுத்த முன்னாளில் நின்னைத் துதிக்கும் மெய்யடியார் கூட்டத்துள் நடுவே நின்று, தோள் நோக்கி நகுவேன்- திருவெண்ணீறணிந்த நின்திருத்தோள்களைத் தரிசித்து மகிழ்ச்சியால் சிரிப்பேனாயினேன்; நின்னைக் காண நெகும் அன்பு இல்லை. நின்னை இடை யீடின்றித் தரிசித்துக் கொண்டிருப்பதற்குரிய மனம் நெகிழும் மெய்யன்பு என்னிடத்து இல்லை. நீ ஆண்டு அருள அடியேனும் தகுவனே- அதனால் நீ ஆட்கொண்டு திருவருள் புரிவதற்கு அடியேனும் தகுதியுடையனாவேனோ? என் தன்மையே- என் தன்மை இதுவே, எந்தாய்- என் தந்தையே, அந்தோ தரியேன்- ஐயகோ இவ்வுலக வாழ்வைப் பொறுத்திருக்க மாட்டேன்; நின் பாதம் எனதே புகுவேன்- நின்னால் யான் ஆட்கொள்ளப்பட்டமையால் நினது திருவடி எனக்குரியதே; ஆதலால் எங்ஙனமாயினும் அதனை அடைவேன்.

நாணமில்லா நாயினேன் எனக்குக் காட்சிகொடுத்த முன்னாளில் நின்னைப் போற்றும் மெய்யடியார் கூட்டத்துள் நடுவே நின்று திருவெண்ணீறணிந்த நின் திருத்தோள்களைத்

*இன்ப துன்பங்களை அனுபவிப்பது ஆன்மாவேயன்றி மனமன்று.*

தரிசித்து மகிழ்ச்சியால் நகுவேனாயினேன்; நின்னை இடையீடின்றித் தரிசித்துக் கொண்டிருப்பதற்குரிய மனம் நெகிழும் மெய்யன்பு என்னிடத்து இல்லை; அதனால் நீ ஆட்கொண்டு அருளுதற்கு அடியேனும் தகுதியுடையனாவேனோ? என் தன்மை இதுவே எந்தாய் அந்தோ இவ்வுலக வாழ்வைத் தரித்திருக்க மாட்டேன். நின்னால் யான் ஆட்கொள்ளப்பட்டமையால் நின் திருப்பாதம் எனக்குரியதே; ஆதலால் எங்ஙனமாயினும் அதனை அடைவேன் என்பதாம்.

புகுவேன் எனதே நின்பாதம் என்றது யான் தகுதியில்லாதவனாயினும் நின்னால் ஆட்கொள்ளப்பட்டமையால் நின் திருவடி எனக்குரியதாகும்; ஆதலால் அத்திருவடியை அடைவேன் என்றவாறு. போற்றும் அடியார் உள்நின்று என்றது இறைவன் ஞானாசாரியனாக எழுந்தருளிவந்து அடிகளுக்கு உபதேசம் செய்த காலத்து அவ்விறைவனைச் சூழ்ந்து நின்று துதிக்கும் மெய்யடியார் கூட்டத்துள் நடுவில் நின்று என்றவாறு. பண்டு என்றது இறைவன் அடிகளுக்கு உபதேசஞ் செய்த நாளைக் குறித்தது. அதனைப் பண்டு எனலாமோவெனின், இறைவனைப் பிரிந்த அடிகளுக்கு அப்பிரிவினாலுளதாகிய வருத்த மிகுதியால் கழிந்த நாட்கள் பன்னெடுங் காலம் போலத் தோன்றலின் அங்ஙனம் கூறினார் என்க. தோள்நோக்கி நகுவேன் என்றது நின் திருத்தோள்களை நோக்கி மகிழ்ந்து சிரிப்பேனாயினேன் அம்மகிழ்ச்சி நின்பிரிவால் இப்போது இலதாயிற்று என்றவாறு. என் தோளின் பூரிப்பை நோக்கி இறுமாந்து களிப்பேனாயினேன் என்பாருமுளர்.

நாணமில்லாமை- இறைவனை இடையீடின்றித் தரிசித்துக் கொண்டிருத்தற்குரிய மனநெகிழும் மெய்யன்பில்லாமையை எண்ணி நாணமடையாமை. நாணம் இல்லாத பிறப்புக்களுள் நாய் சிறந்தமைபற்றி "நாணமில்லா நாயினேன்" என்றார். நெகும் அன்பு- நெகுதற்குக் காரணமாகிய மெய்யன்பு. "அன்பால் நீ அகநெகவே புகுந்தருளி" (ஏசறவு 7) என வருதலும் காண்க. அடியேனும் என்பதில் உம்மை இழிவு சிறப்பு. தகுவனே என்பதில் ஏ-வினா. என் தன்மையே என்பதில் ஏ, தேற்றப் பொருளில் வந்தது. அந்தோ- இரக்கப் பொருள் குறிக்கும் திசைச் சொல் தரியேன்- இவ்வுலக வாழ்க்கையைப் பொறேன். "தரிக்கிலேன் காய வாழ்க்கை" (சத 61) என அடிகள் கூறுதலும் காண்க. "போந்தவுடல் தன்னுடனே உயிர்வாழத் தரியேன்" எனப் பெரியபுராணத்து (திருநாவு 150) வருதலுங் காண்க.

இதன்கண், அந்தோ தரியேன் என்றதனால் இவ்வுலகில் வாழுவதால் எனக்குளதாகும் அநுபோகங்கள் எனக்குத் தீமை பயப்பனவாகும். ஆதலால் அவற்றை நீக்கியருள வேண்டும் என்பது பெறப்படுதலின் அநுபோகசுத்தி என்னும் ஆறாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 60

(தொடரும்...

**மயிலேறி விளையாடும் செல்வச்சந்நிதியானே**

வாழ்க்கை என்பது வேதனைதானா? வேல்முருகா
வரும் துன்பம் யாவையும் நீ அறிவாயே
தாங்கிடும் பெரும் துயரம் கொஞ்ச மல்ல வேல்முருகா
தணித்திடவே வேல் ஏவிக் காத்திடையா
ஏங்கிடும் நெஞ்சத்துயர் என்று ஆறுமோ
ஆறுமுக அழகுடைய சந்நிதி வேலவா
மங்கிடும் வாழ்விற்கு நல் ஒளி காட்டுவாயே
மயிலேறி விளையாடும் செல்வச் சந்நிதிப் பெருமானே.

-தின்னைப்பு தனபாலசிங்கம்-

பொய்யை விட்டொழிந்தவர்கள் புண்ணியவான்கள் ஆவர்.

# விநாயகர்

– திருமதி பொ. திலகவதி அவர்கள் –

சைவத்தின் முதல் கடவுளாகவும் முதல் வணக்கத்திற்குரிய கடவுளாகவும் விநாயகர் குறிப்பிடப்படுகிறார். பிள்ளையார் கோயில் இல்லாத ஊரேயில்லை எனலாம். பிள்ளையார் மரத்தடியிலும், குளக்கரையிலும், ஆற்றோரங்களிலும் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார். இயற்கையாக அமைந்த கற்களைப் பிள்ளையார் என்று வணங்குவதை பல இடங்களிற் காணுகிறோம். விநாயகரின் உருவமும் பெரிது, மகிமையும் பெரிது. அவர் புரியும் கருணையும் பெரிது. மாசில்லா மனம் உடைய குழந்தைகளுக்கெல்லாம் தெய்வம். தன்னை அன்போடு வழிபட்டாருக்கு ஞானத்தையும் மோட்சத்தையும் கொடுப்பார். விநாயகர் வழிபாட்டை எவரும் எளிதாகச் செய்யலாம். மண், மஞ்சள் மா, பசுவின் சாணி போன்ற எளிதில் கிடைக்கும் பொருட்களால் பிள்ளையார் பிடித்து வணங்கலாம்.



விநாயகருக்குரிய நிவேதனப் பொருட்கள் அவல், கடலை, மோதகம், எள்ளுருண்டை, கற்கண்டு, சர்க்கரை, தினைமா, மிளகுசாதம், வள்ளிக்கிழங்கு, லட்டு, வடை, வெள்ளரிப் பழம், விளாம்பழம் ஆகியவை விநாயகருக்கு விரும்பிய நிவேதனமாகும். விநாயகருக்கு உகந்த இலை அறுகு, வன்னி, மாஇலை, வில்வம், மாவலிங்கம், கிளுவை, விளா, நெல்லி, வெள்ளை எருக்கு ஆகியவை சிறப்பாகும். அறுகு ஒரே காம்பில் மூன்று கூருடையதாக இருத்தல் வேண்டும். விநாயகருக்குரிய மலர்கள் மந்தாரைப்பூ, செம்பருத்திப்பூ, ரோஜாப்பூ, தாமரைப்பூ, தும்பைப்பூ, சங்குப்புஷ்பம், எருக்கம்பூ ஆகியவை சிறப்பாகும். துளசியை சதுர்த்தி அன்று மட்டும் பயன்படுத்தலாம். மற்றெல்லா மூர்த்திகளுக்கும் நிலத்தில்

*இறைவனின் நாமமாகிய மந்திரங்களின் சக்தி ஒருபோதும் குறைவதில்லை.*

விழுந்த இலைகளும் பூக்களும் உதவாதன வாகும். ஆயின் பிள்ளையார் விரும்புவது யாவரும் மிதித்து நடமாடும் புல்லாகிய அறு காகும்.

பிள்ளையாரை வழிபடும்போது மூன்று முறை நெற்றியில் குட்டித் தோப்புக் கரணம் போட்டுக் கீழே குந்தி எழுவதும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் குட்டி அடக்கி ஆள்வதையே குறிக்கும். சைவ சமயத்தில் உள்ள எல்லா மந்திரங்களுக்கும் ஆதியாய் அமைவது "ஓம்" எனும் மந்திரம். ஓம் என்ற மந்திரத்தைச் சொன்னபின்தான் "ஓம்' நமசி வாய", "ஓம் சரவணபவ" என்றே சொல்லு கிறார்கள். ஓம் என்ற சொல் மிகவும் புனித மான ஒரு மந்திரம். ஓம் என்பது பிரணவ மந்திரம். எதனையும் எழுதத் தொடங்கும் பொழுது பிள்ளையார் சுழி இடுவது நம் மரபு. அதுவும் ஓம் என்னும் சொல்லினைக் குறிக் கும் வடிவம் என்று கருதப்படுகின்றது. ஓம் என்பது எங்கும் ஓயாது ஒலிக்கும் ஓர் ஓசை யாகும்.

விநாயகருக்கு அர்ச்சனை செய்யும் பொழுது "ஓம் ஓங்கார ரூபாய நம" என்ற மந்திரமும் கூறப்படும். "ஓம்" என்னும் பிர ணவ மந்திர வடிவினருக்கு வணக்கம் என்ப தாகும். பிரணவப் பொருள்தான் என்ன "ப்ர" என்றால் விஷேசமானது "நவம்" என்றால் புதுமை அனுபவிக்க அனுபவிக்க புதுப்புது விசேஷ உண்மைகளை உணர்த்துவது பிரணவம் என்றும் வாடாமல் காலத்தால் தேயாமல் எப்போதும் புதுமையாக இருக்கும் ஆன்ம தத்துவம்தான். விநாயகர் உருவத் திலுள்ள நான்கு கரங்கள் தேவர் கூறாகவும், யானைத் தலை, தும்பிக்கை முதலியன விலங்கின் கூறாகவும் பேழை வயிறும் குறு கிய கால்களும் பூதக் கூறாகவும், ஒரு பக் கம் தந்தமின்மை பெண் கூறாகவும், இடது பக்க தந்தம் இருக்கும் பகுதி ஆண் கூறாக வும், முகம் அ∴றிணைக் கூறாகவும் கொள் ளப்படும்.

மிஞ்சிய ஆற்றல் படைத்தவர் என்ப தால் "விநாயகர்" என்றும், யானை முகத்தை உடையவராதலால் "கஜமுகா" என்றும் கணங்களுக்கு தலைவராதலால் "கணபதி" என்றும் தம்மை நினைப்பவர்களுக்கு விக்கி னங்களைப் போக்குவதால் "விக்கினேஸ் வரர்" என்றும் ஒற்றைத் தந்தம் உடையவ ராதலால் "ஏகதந்தர்" என்றும், மோதகத்தில் விருப்பமுடையவராதலால் "மோதகப்பிரியர்" என்றும், அறிவுக்குப் புலனாகக்கூடிய பிரபஞ் சங்களையெல்லாம் உண்டு தம்முள் அடக் கக்கூடிய பெரிய வயிற்றினை உடையவராத லால் "லம்போதரர்" என்றும் மூஷிகத்தை வாகனமாகக் கொண்ட காரணத்தால் "மூஷிக வாகனன்" என்றும், ஈழத்தில் தமிழர் வாழ் இடங்களிலெல்லாம் "பிள்ளையார்" என்றும் வழிபடப்படுகிறார். பிள்ளையாருக்கு உள்ள மூன்று திருக்கண்களும் இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்றையும் குறிப்பனவாகும். பரஞானத்தால் எதனையும் காண வேண்டும் என்பதைக் குறிப்பது நெற்றிக்கண். அவர் தோற்றத்தில் காணும் விரிந்த காதுகள் அன் பர்கள் கூறுவதைக் கேட்கும் ஆவல் உடை யவர் என்பதைக் குறிக்கும்.

அவர் யானை உருவத்தோடு இருக் கிறார். அது ஆனந்த தத்துவம் ஆராத ஆசை யின் தத்துவம். அவர் பிறந்ததே ஆனந்தத் தில் பண்டாசுரன் விக்னயந்திரங்களைப் போட்டு அம்பாளின் படை தன்னை நோக்கி வரமுடியாதபடி செய்தபோது பரமேஸ்வரன் அவளை ஆனந்தமாகப் பார்த்தபோது அவ ளும் ஆனந்தமாக இந்தப் பிள்ளையைப் பெற்றார். அவர் விக்கினயந்திரங்களை உடைத்து அம்மாவுக்கு சகாயம் செய்தார்.

விநாயகர் கருணையும் அன்பும் நிறைந்தவர். அவர் மெய்ப்பொருளும் மெய்யறிவும் பேரின்பமும் தருபவர். அவரைத் தூய்மையான உள்ளமும் பக்தியும் கொண்டு வணங்கினால் மனம் அமைதி பெறும், வாழ்வு வளம் பெறும், ஆன்மா ஈடேற்றம் அடையும்.

தும்பிக்கையின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அவன்தாள் பணிந்து சின்னஞ்சிறிய பாடல் பாடி ஒரு பழம் கொடுத்தால் போதும் அள்ளித் தருவான்.

யானை முகத்தான் பொருவிடையான் சேய், அழகார்
மாள மணிவண்ணன் மாமருகன் - மேல் திகழும்
வெள்ளக் குமிழ் மதத்து விநாயகன் என்
உள்ளக் கழித்தின் உளன்.

## சந்நிதியே எந்நிதியே

மனக்குறைகள் தீர்ப்பாய் என்று
மனதிலே உந்தன் நாமம்
மனமுருகி பாடி வந்தேன்
மனம் நீ இளகவேண்டும் ஐயா!

ஆதரிப்பார் யாருள்ளார்
ஆண்டவா நீயென்று - வந்துவிட்டேன்
அனுசரிப்பார் காலமெல்லாம்
நிறைவுறும் வேளை வந்து
உன்னடியை நாடி வந்தேன்

எல்லாம் உந்தன் செயலென்று
வாழ்ந்திடுவேன் காலமெல்லாம்
எனைநீயும் பாராயோ - எந்தன்
செயல் என்ன வென்று

வேண்டுவார் குறை தீர்ப்பாய்
வேண்டுகின்றேன் உன்னடியை
யாரென்ன கேட்டாலும் - உந்தன்
சந்நிதிவாசலே தஞ்ச மென்பேன்.

-எஸ். வாகீசன்-

*தீய ஆசைகளுக்கு அடிமையாகாதீர்கள்.*

[தொடர்ச்சி...

# உமாபதி சிவம்

அருளிய

# திருவருட்பயன்

[விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]



முனைவர் ஆ. ஆனந்தராசன்

### 79. மூன்றாய தன்மை தோன்றாமை

மூன்றாயதன்மை அவர் தம்மின் மிகமுயங்கித்
தோன்றாத இன்பம் அது; என் சொல்?

**பொருள்:**

சிவனும் உயிரும் ஆகிய அவ்விருவரும் தம்முள் மிகவும் கலந்து ஒன்றாய் நின்ற அந்நிலையில் உயிர் பேரின்பத்தை நுகரும். அவ்வின்ப அனுபவத்தில் அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் என்ற மூன்றும் இருந்தாலும் அம் மூன்றும் வெவ்வேறாகத் தோன்றுவது இல்லை. மூன்று பொருள் என்ற வேறுபாடு தோன்றாத ஒருமை நிலை அது. உயிர் தன்னை மறந்து, தனது அறிவை மறந்து சிவம் ஒன்றையே அறிந்து அதில் அழுந்தியிருக்கும். அவ்வின்ப அனுபவம் இன்னவாறு இருந்தது என்று எவ்வாறு சொல்ல இயலும்?

**சொற்பொருள்:**

அவர்- சிவனும், சீவனும் ஆகிய அவ்விருவரும், தம்மின் மிக முயங்கி- தம்முள் மிகவும் கலந்து (ஒன்றாய் நின்ற அந்நிலையில்), மூன்றாயதன்மை- நுகர்பவன், அவனது அறிவு, நுகரப்படும் பொருள் ஆகிய மூன்றும் இருந்தாலும் அம் மூன்றும் வேறு வேறாய் உள்ள தன்மை, தோன்றாத இன்பம்- தோன்றாத பேரின்ப அனுபவமே, அது- முந்திய செய்யுளில் 'உறுபயன்' எனப்பட்ட அப் பயனாகும், சொல் என்?- அவ்வின்ப அனுபவம் இப்படி இருந்தது என்று எவ்வாறு சொல்ல இயலும்?

**விளக்கம்:**

**மூன்றாய தன்மை:**

எந்த ஓர் அனுபவத்திலும் அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் என்ற மூன்று பொருள்கள் இருக்கும். அறிபவன் ஞாதிரு அல்லது ஞாதா எனப்படுவான். அறிவு ஞானம் எனப்படும். அறியப்படும் பொருள் ஞேயம் எனப்படும். ஞாதிரு, ஞானம், ஞேயம் ஆகிய இம்மூன்றையும் 'திரிபுடி' என்பர்.

"நான் இந்த மலரின் மணத்தை அறிகிறேன்" என்னும்போது, நான் அறிபவன் ஆகிய ஞாதா ஆகிறேன். அதற்குக் கருவியாகிய எனது அறிவு ஞானம் ஆகிறது; மலர்

மணம் அறியப்படும் பொருள் ஆகிய ஞேயம் ஆகிறது. எனவே இக்காட்சியில் இம்மூன்று பொருள்களும் உள்ளன என்பது விளங்கும். இவ்வாறு அறிகின்ற தான், தனது அறிவு, அறியப்படும் பொருள் ஆகிய மூன்றையும் அறிந்து நிற்றலைத் "திரிபுடி ஞானம்" என்பர்.

இத்திரிபுடி ஞானம் உள்ளபொழுது, அஃதாவது, அறிகின்ற தன்னையும், தனது அறிவையும், அறியப்படும் பொருளையும் வேறு வேறாகப் பகுத்துக் காணும் நிலை உள்ள பொழுது- இன்ப அனுபவத்தை முழுமையாகப் பெற இயலாது. ஒரு நிகழ்ச்சி வாயிலாக இதனை விளக்குவோம்.

நான் ஒரு தொலைக்காட்சித் தொடரைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். சிறு பிள்ளைகள் பலரும் என்னுடன் அமர்ந்து அதைப் பார்க்கிறார்கள். எனது அறிவு படத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுகிறது. "இந்தக் காட்சியை வேறு விதமாக எடுத்திருந்தால் நன்றாயிருக்குமே, இவருக்கு நடிப்பே வரவில்லையே, இவரை எப்படித் தேர்ந்து எடுத்தார்கள்? இயக்குநர் இந்தக் காட்சியில் தூங்கி விட்டாரா, என்ன?" என்று இப்படியெல்லாம் என் சிந்தனை ஓடுகிறது. நானும் என் அறிவும் படத்திற்கு வேறாக இருக்கிறோம் என்பதையே இது காட்டுகிறது. படக் காட்சியோடு ஒன்றும் போதே அதனால் வரும் முழு இன்பத்தைப் பெற முடியும். நானும் அறிவும் வேறாக நிற்பதனால் காட்சி இன்பத்தை நான் முழுமையாகப் பெறவில்லை என்பது தெளிவு.

ஆனால், அந்தச் சிறு பிள்ளைகளைப் பாருங்கள். அவர்களுக்குப் படத்தைப் பற்றிய ஆராய்ச்சி உணர்வு இல்லை. அவர்களது அறிவு படத்திற்கு அப்பால் வேறு எங்கும் செல்லவில்லை. அவர்கள் படத்தோடு ஒன்றிப் போய் விடுகிறார்கள்; மகிழ்ச்சியினால் துள்ளுகிறார்கள்; கை கொட்டுகிறார்கள்; 'ஆகா' என்கிறார்கள்; "ஐயோ" என்கிறார்கள். அவர்கள் அக்காட்சியோடு ஒன்றுபட்டு விடுவதனால் அதனால் வரும் இன்பத்தை முழுமையாகப் பெறுகிறார்கள் என்பது தெளிவு.

நான் பார்க்கும் முறையில், அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் என்ற மூன்றும் பகுத்து உணரும்படியாக வெவ்வேறாய் நிற்கின்றன. அஃதாவது ஞாதிரு, ஞானம், ஞேயம் என்ற வேறுபாடு தோன்றுவதால் திரிபுடி ஞானம் அங்கே உள்ளது. திரிபுடி ஞானம் இருக்குமானால் இன்ப அனுபவம் முழுமை பெறவில்லை என்பது பொருள்.

அந்தப் பிள்ளைகள் தம்மை மறந்து, பிறவற்றையெல்லாம் மறந்து, காணப்படுகிற அக்காட்சி ஒன்றையே அறிந்து நிற்கிறார்கள். இங்கே அறிபவரும், அறியப்படும் பொருளும் அறிவும் ஆகிய மூன்றும் வேறு பிரித்து அறியவராமல் உள்ளன. அஃதாவது அம்மூன்றும் வேறாகத் தோன்றாமையால் திரிபுடி ஞானம் இல்லை எனலாம். திரிபுடி ஞானம் நீங்கிய நிலையே முழுமையான அனுபவநிலை.

**மூன்றாய தன்மை தோன்றாத இன்பம்:**

இதுவரை உலகியல் அனுபவத்தை வைத்து விளக்கினோம். முத்திநிலையில் ஆன்மா எய்தும் சிவானுபவத்திற்கும் இது பொருந்தும்.

ஆன்மா "நான் சிவத்தை அறிந்து அனுபவிக்கிறேன்" என்று உணருமானால், தான், தன் அறிவு, அறியப்படும் பதி ஆகிய முப்பொருளையும் அந்நிலையில் உணர்கிறது என்று ஆகும். இது திரிபுடி ஞானம் உள்ள நிலையாகும்.

ஆன்மா சிவம் ஒன்றை மட்டுமே அறிந்து அதில் அழுந்தும் போதே பேரின்பம் விளையும். சிவத்தையன்றிப் பிற பொருள்களையும் அறியுமானால் ஆன்மாவிற்குப் பேரானந்தம் எப்படி உண்டாகும்? ஆன்மா

ஒன்றை அறியுங் காலத்தில் மற்றொன்றை அறிய மாட்டாது ஆகலின், முத்தி நிலையில் தன்னையும் தனது அறிவையும் அறியுமானால், சிவத்தை அறியாது மறக்கும்; அவ்வாறு மறக்குமானால் அதற்குச் சிவானந்தம் இல்லையாகும். அதனால், ஆன்மா தன்னையும் தனது அறிவையும் அறியாது, சிவம் ஒன்றையே அறிந்து நிற்றல் வேண்டும்.

இது பற்றியே, திரிபுடி ஞானம் நீங்கிய நிலையே, அஃதாவது ஆன்மா தன்னையும், தனது அறிவையும் அறிதலை விடுத்துச் சிவம் ஒன்றை மட்டும் அறிந்து அதில் அழுந்தி விடுவதே பரமசுகம் ஆகிய பேரின்ப நிலை என்று சித்தாந்த சைவம் கூறும். இதனையே மூன்றாய தன்மை தோன்றாத இன்பம் எனக் குறித்தார் ஆசிரியர் உமாபதிசிவம்.

**சொல்லொணாத இன்பம்:**

மேற்கூறியவாறு ஆன்மா தன்னை மறந்து, தனது ஞானத்தை மறந்து சிவம் ஒன்றையே அறிந்து அதில் அழுந்தி நிற்கும் நிலையை உடம்பு உள்ள காலத்தில் அடைவதே நிட்டை என்று சொல்லப்படுகிறது.

தனித்திருந்து நிட்டை கூடிச் சிவத்தில் அழுந்தி நிற்பதாகிய இச்சிவானுபவ நிலையைக் குறித்துக் கூறும்போது "சொல் என்?" என்கிறார் ஆசிரியர்.

"சொல் என்" என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் கூறுவர். அவ்விடத்துச் சொல் எழுவதற்கு வழி ஏது? என்பது ஒரு பொருள். அஃதாவது பேச்சற்று மோனமாக உள்ள அநுபூதி நிலை அது என்பதாம். இனி, "சொல் என்" என்பதற்கு மற்றொரு பொருள் அவ்வின்ப அனுபவத்தைச் சொல்லால் வெளியிட்டுரைப்பது எவ்வாறு இயலும் என்பது. அஃதாவது இன்னவாறு இருந்ததென்று சொல்ல இயலாத ஆனந்தநிலை அது என்பதாம்.

இவ்விரு பொருள்களுள் இவ்விடத்திற்குச் சிறந்தது எது? என்பதை நோக்குவோம். இவ்வாறு சிவத்தில் அழுந்தி நிற்போர் எவ்வாறு இருப்பர் என்பதை இறுதி அதிகாரத்தில் விளக்கியுள்ளார் ஆசிரியர். அவ்வதிகாரத்தின் முதற் செய்யுளில், அவர்கள் பேரின்பத்தில் திளைத்திருத்தலையன்றி வேறொன்றையறியார் எனவும் அவர்க்குச் சொல் ஏதும் உண்டாகுமோ? எனவும் கூறுகிறார். எனவே சொல் எழாமல், பேச்சற்று, இன்பத்துள் ஆழ்ந்திருப்பர் என்பது அங்கே கூறப்பட்டது. அங்கே கூறிய அதே பொருளை இன்புறு நிலையாகிய இங்கேயும் கூறினார் என்று நாம் கொள்ள வேண்டுவதில்லை.

"சொல் என்" என இங்கே கூறியதற்கும், "மற்று ஏதுண்டு சொல்" என அங்கே கூறுவதற்கும் ஒரே பொருளைக் கொள்ளாமல், இன்ப அனுபவத்தைச் சொல்வது எவ்வாறு இயலும் என இங்கேயும், இன்பத்துள் ஆழ்ந்திருப்பதால் சொல் எவ்வாறு எழும்? என அங்கேயும் பொருள் உரைப்பது பொருத்தமாகும். எனவே, மேற்காட்டிய இருவகைப் பொருள்களுள் முன்னதை விடுத்து, இரண்டாவதாகக் கூறிய பொருளே இவ்விடத்திற்குச் சிறந்தது என்று முடிவு செய்யலாம்.

ஆன்மாவை விழுங்கிப் பெருகும் வெள்ளமாகிய பரம சுகத்தை வாயினாற் சொல்லிக் காட்ட இயலாது. அது ஐந்து இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட இன்பம். இந்திரியங்களின் நுகர்ச்சியைக் கூட வாயினாற் சொல்ல முடியாது என்பார்கள். அப்படியிருக்க, இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட அதனை எப்படி வாயால் சொல்ல முடியும்?

ஒரு தாய் உலக வாழ்வில் தெரிந்து கொள்ள வேண்டிய அனுபவப் பாடங்களை எல்லாம் தன் மகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறாள். ஆனால், பக்குவம் வராத அந்தப் பெண்ணுக்குச் சிற்றின்பமாகிய அனுபவத்தை

எப்படிச் சொல்வது? அது சொன்னால் விளங் காதது. அதுபோல, இறைவனாற் பெறுகின்ற இன்ப அனுபவம் பக்குவம் இல்லாதவர் களுக்குத் தெரியாத ஒன்று. அதனைச் சொல்லிக் காட்ட முடியாது; சொன்னாலும் தெரிந்துகொள்ள முடியாது.

"எங்ஙன் இருந்ததென்று எவ்வண் ணம் சொல்லுகேன்" என்றார் இறைவனை ஆரத்துய்த்த ஓர் அடியவர். வாதவூரடிகள் சொல்லவொண்ணா அளப்பரிய பேரின்பம் தமது உள்ளத்திலும் உடலிலும் ஒரு சேர நிறைந்து ததும்பி நின்ற அதிசய நிலை யைக் குறித்து, "சொல்லுவது அறியேன் வாழி முறையோ" என்றார். இவற்றையெல் லாம் உட்கொண்டே "சொல் என்" என்றார் ஆசிரியர் உமாபதிசிவம்.

## ௮௦. அன்பும் இன்பும்

இன்பில் இனிது என்றல் இன்று உண்டேல் இன்று உண்டாம்
அன்பு நிலையே அது.

**பொருள்:**

இன்பங்கள் எல்லாவற்றிலும் இனிமையுடையது எனச் சிறப்பிக்கப்படும் முத்தியின் பத்தை இப்பிறப்பிலேயே பெறலாம். அதற்கு முன்னே ஆன்மா ஒன்றைப் பெற வேண்டும். அந்த ஒன்று எது எனில், இறைவனிடத்தில் இடையறாது அன்பு செய்து நிற்கும் நிலை யேயாகும். இந்த அன்பு நிலை இன்று உண்டானால், பேரின்பமும் இப்பொழுதே உண்டாகும்.

**சொற்பொருள்:**

அது- மூன்றாய தன்மை தோன்றாத அப்பேரின்பம், அன்பு நிலையே- இறைவனிடத்து இடையறாது அன்பு செய்து நிற்கும் நிலையில் உண்டாவதே, இன்பில் இனிது என்றல்- இவ்வின்பம் இதுவரையில் நுகர்ந்து வந்த இன்பங்கள் எல்லாவற்றினும் மிக இனியதாய் உள்ளது என்று உணரும் அன்பு, இன்று உண்டேல்- ஆன்மாவிற்கு இப்பிறப்பில் உண்டாகுமாயின், இன்று உண்டாம்- பேரின்பமும் இப்பொழுதே உண்டாகும்.

**விளக்கம்:**

**இன்பம்:**

இன்பம் என்றால் என்ன? இன்பந்தரும் பொருளினது தன்மையை உணர்தலே இன்பமாகும்.

உலகப் பொருளின் தன்மை முற்றும் உணரப்படுவது ஆகலின், அப்பொருளால் வரும் இன்பம் முடிவுடையதாய், வரையறைப்படுவதாய் இருக்கும். ஆனால், இறைவனது தன்மை அங்ஙனம் முழுதுமாக அறிய வாராதது. அதனால் இறைவனது தன்மையை உயிர்கள் உணர உணர இன்பம் புதிது புதிதாய் விளைந்து கொண்டேயிருக்கிறது. அவனது தன்மை அளக்க ஒண்ணாதது. ஆதலால் அவ்வின்பமும் வரையறைப்படாததாய் உள்ளது.

"ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே" என்பது திருவாசகத் தொடர். அளவிடப்படாத தன்மையை உடையவன் ஆதலால் அனுபவிக்க அனுபவிக்கத் தெவிட்டாத இன்பமாய் இருக்கின்றான் என்பது அதன் பொருளாகும்.

*ஒழுக்கமுள்ள நடத்தைக்கு நல்ல நண்பர்கள் தேவை.*

**உலக இன்பமும் இறையின்பமும்:**

உலக போகம் வரம்புடைய இன்பமேயாக, சிவபோகம் எல்லையற்றதாய், மேலும் மேலும் வளர்வதாய், புதுமையுடையதாய் இருத்தல் பற்றியே "கனியினும் கட்டிபட்ட கரும்பினும் பனி மலர்க் குழல் பாவை நல்லாரினும் தனி முடி கவித்து ஆளும் அரசினும் இனியன்" என்றார் திருநாவுக்கரசர்.

இன்னும், உலக இன்பம் கருவி கரணங்கள் வாயிலாக நுகரப்படுவது. சிவானந்தம் கருவி கரணங்களின் நீங்கி நின்று அனுபவிப்பது.

உலக இன்பமெல்லாம் தன்னின் வேறாகிய பொருளிடத்தினின்றும் தன்பால் வந்து பொருந்தும் செயற்கை இன்பமாகும். சிவானந்தம் அவ்வாறின்றித் தன்னுள்ளே ஒழிவற நிறைந்த பொருளிடத்தில் தான் வியாபகமாய் நின்று அனுபவிக்கும் இயற்கையின்பம் ஆகும்.

இந்த அழகான வடிவைக் கண்டு இன்புற்றேன். இந்த இனிய ஓசையைக் கேட்டு இன்புற்றேன். இத் தீஞ்சுவையை அறிந்து இன்புற்றேன் என இவ்வாறு உலக இன்பம் நம்மால் உணர்ந்து சொல்லப்படுகிறது. ஆனால், சிவானந்தம் உரையுணர்வு இறந்து நின்று அனுபவிக்கப்படுதலின் அ∴து உரைக்க வாராதது.

இறையின்பமாகிய பேரின்பம் இத்தகையது. ஆதலின் அதனைச் சுவைத்த பிறகு உலக இன்பம் அனைத்தும் சுவையற்றனவாகி விடும்.

"அரும்பும் தனிப் பரமானந்தம்
தித்தித் தறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச் செந்தேனும்
புளித்து அறக் கைத்ததுவே"

என்றார் அருணகிரிநாதர்.

இவ்வாறு இறையின்பம் எல்லா இன்பங்களிலும் இனிமை உடையது என்று சிறப்பித்துச் சொல்லப்படுதலின் அதனை "இன்பில் இனிது" என்று குறிப்பிட்டார் ஆசிரியர் உமாபதிசிவம்.

**அன்பு நிலையே இன்ப நிலையைத் தரும்:**

இந்த இன்பம் அன்பினில் விளைவதாகும். இறைவனது அடியார்கள் பெரியோனாகிய அவன் தமக்கு எளிவந்து அருள் செய்த திறத்தினை நினைந்து உருகி அவனிடத்தில் அன்பு பெருகி நிற்பர்.

"தாய் வயிற்றில் நான் உருத் தெரியாமல் கருவாய் இருந்த காலத்திலேயே உட்புகுந்து என்னை வளர்த்தான்; பின் நான் உடலெடுத்துப் பிறந்து உலகியலில் உழன்ற காலத்தும் துணையாய் நின்று கருணையோடு என்னை வளர்த்தான். தாயைப் பார்க்கிலும் மிகப் பரிவுடையவன் ஆயினான். உள்ளமேயன்றி உடலும் அன்பினால் உருகப் பண்ணினான்; உள்ளொளியாகிய தன்னை இனிது உணரச் செய்தான்; அழிவில்லாத ஆனந்தமாகிய தேனைப் பொழிந்தான்."

இவ்வாறு பெத்தத்தில் இறைவன் உயிர்க்குயிராய் நின்று உலக போகத்தினை நுகர்வித்து வளர்த்த உதவியையும் இப்போதும் அவ்வாறு நின்று சிவபோகத்தினை நுகர்வித்து வாழ்விக்கும் உதவியையும் நினைந்து மணிவாசகப் பெருமான் மனமுருகிக் கூறுவார்.

இங்ஙனம் இறைவன் செய்யும் உதவியை மறவாது உணர்தலால் அவனிடத்தே அன்பு மீதூரும். அவன்மீது அன்பு மேலிட மேலிட அவனது இன்பம் மேலும் மேலும் விளைந்து கொண்டேயிருக்கும்.

இறைவனிடத்துச் செய்யும் அன்பு அவனிடத்தே அழுந்தி இன்புற்றிருக்கும் நிலையைத் தரும் என்பது இச் செய்யுளில் கூறப்பட்டது.

(தொடரும்...

கல்வியின் பயன் அறிவும் பணிவுமாகும்.

# ஆகமம் என்ற சொல்லின் பொருளும் அவை கூறும் திருக்கோயில் வழிபாட்டு முறையும்

– திரு க. கணேசதேவா அவர்கள் –

ஆகமங்கள் சமயமாக இல்லாமல் ஆன்மீக விஞ்ஞானத்தைக் கூறும் நூலாகக் காணப்படும். மெய்யியல் விஞ்ஞானம் பற்றி ஆகமம் கூறுகிறது. ஆகமங்கள் ஆன்மீக விஞ்ஞானத்தை எடுத்துக் கூறுகிறது. ஆகமம் கூறுகின்ற வழிபாட்டில் ஆலயமே நடு நாயகமாக விளங்குகின்றது. ஆலயத்தில் நடுநாயகமாக விக்கிரகம் அமைகிறது. எனவே திருவருளை நமக்கு அருள்கின்ற இறைவன் திருவுருவில் இறைவன் அருள் அலைகள் பிரகாசித்துக் கொண்டுள்ளது. திருவருள் பிரகாசத்துக்கு மூலமாக அமைவது திருவுருவமே. இந்த திருவுருவத்தை முறைப்படி அமைக்க வேண்டும் என ஆகமங்கள் தெளிவாகக் கூறும். முறையாக அமைக்கப்பட்ட அல்லது முறையாகச் செதுக்கப்பட்ட சிலையில் இறைவனுடைய அருள் தங்கு தடையின்றி வெளிப்பட்டுத் தோன்றுகின்றது. முறையாக வடிவமைக்கப்பட்ட தெய்வத் திருஉருவில் இறைவன் தானாகவே விளங்குகின்றான்.

வட மொழியில் "வேதம்", "ஆகமம்" என்று இரண்டு வகையாக விளங்கும் நூல்கள் சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படையாகத் திகழ்வனவாகும். இவற்றுள் "வேதம்" என்ற சொல் "அறிதல்" என்னும் கருத்தை உடைய "வித்" என்னும் வினையடியாகப் பிறந்த "வேத" என்னும் வட சொல்லின் தமிழ் வடிவம் என்பர்.

"ஆகமம்" என்பது உயிர்கள் தம்முடைய மலங்கள் கெட மோட்சமாகிய வீடு பெறுவிப்பது என்று பொருள் தருவது என்பர். ஆ, க, ம, ம் என்னும் இவற்றுள் ஆ- பசு, க- பதி, ம- மலம் எனப் பொருள் கூறுதலும் உண்டு. வேதங்களையும் சிவாகமங்களையும் ஒப்பு மதித்துப் போற்றுபவர் தத்துவம் வல்லோர். வேத சிவாகமங்களுக்குப் பேதம் இல்லை. வேதமும் சிவனாற் செய்யப்படுதலின் ஆகமம் எனப்படும்.

ஆகமம் என்ற சொல் "வருவது" எனும் பொருளைத் தருவதாகும். இறைவனிடம் இருந்து வருவது, இறைவன் அருளியது என்று அதன் பொருளை விவரிப்பதுண்டு.

ஆகமம் என்ற சொல்லுக்கு முப்பொருள் உணர்த்தும் நூல் என்றும் ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணி சிவ ஞானத்தை உதிப்பித்து மோட்சத்தைக் கொடுப்பது என்றும் சைவர்கள் பொருள் கூறுவர். சைவ ஆகமங்கள் இருபத்தெட்டு என்பர். சைவ ஆகமத்தில் ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என நான்கு உட்பிரிவுகள் உண்டு.

இறைவன் தானாகத் தோன்றுகிறார். முறையாக திருவுருவை செதுக்க சிற்பி அத் தெய்வத்தின் உண்மை வடிவத்தை அன்பு செய்து தியானிக்க வேண்டும். எனவே சிற்பியின் அகத்தில் எழுந்தருளும் இறைவன் சிற்பியினால் அகத்தில் உள்ள இறைவன் புறத்திலே திருவுருவமாக உள்ளான். இதனை மகுடாகமம் கூறுகிறது.

திருஉருவில் இறைவனை விளங்க வைப்பதற்கான கலையைப் பேணுபவன் சிற்பி. தன்னுள் முறையாக உருவத்தை பேரன்புடன் தியான பாவனையால் உருவாக்கி அதனைத் திருவுருவில் தெய்வமாக விளங்க

*சுறுசுறுப்பான தேனீக்கு வருத்தப்பட நேரமில்லை.*

வைக்கிறான். சிற்பி முறையாக தெய்வத்தை வெளிக்கொண்டு வரும் வகையில் சிற்பத்தை வடிவமைக்க வேண்டும். ஆன்மீக ஞானத்தில் சிற்பி பூரணத்துவம் உடையவனாக இருக்க வேண்டும்.

மேலும் மகுடாகமத்தின் கூற்று தெய் வீகத்தை வெளிக்கொணரும் சிற்பி உணர்ந் தவன் என்ற முறையில் அவனால் அமைக் கப்படும் தெய்வம் என்பதை மகுடாகமம் எடுத்துக் கூறுகின்றது. இந்த அளவையியல் ஆன்மீகத்துக்கு முக்கியம். காலம் என்பது ஆன்மீக விஞ்ஞானத்தின் கூறாகும். இந்த அளவையியல் நிலையில் உருவ அமைப்பைக் கட்டுப்படுத்தாமல் திருவுருவில் அமையும் பிர திட்டையும் பூசை முறைகளுமே கட்டுப்பட் டவை ஆகும்.

காலதத்துவம் ஆன்மீக விஞ்ஞானத் தில் உயர்ந்த தத்துவம். எனவே இறை வனை கால காலன் என்று சொல்லப்படும். இன்ன திருவுருவத்தை கால வரையறைக்கு பிரதிட்டை செய்ய வேண்டும் என்றும், இன்ன உபசாரத்தை செய்து முடிக்க வேண்டும் என்பதும் ஆகமம் கூறும் கால தத்துவத்தில் கூறப்படும் செய்தியாகும்.

பூசைகள் தொடர்பான அளவுக் கட் டுப்பாடு சிவாச்சாரியர்களுக்கு இருப்பது போன்று தினம் செய்ய காலக்கட்டுப்பாடு ஒழுங்கு உள்ளது. ஆகமம் கூறும் திருவுருவ அமைப்பு, திருவுருவ வழிபாடு என்பது காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கு முறையாகும். திருவருளை ஆன்மீக ஒழுங் கில் பெறமுடியும் என்பதை ஆகமங்கள் கூறும். எனவே அதனைச் சார்ந்து எழுந்த சிற்ப சாத் திரங்கள் அந்த பிரமாணங்களை துல்லிய மாக எடுத்துக் கூறும். எனவே வஸ்துவில் இருந்து வாஸ்து ஒரு ஒழுங்கு முறையிலே பிரமாணத்துக்கு அமைய அருள் நிலையில் நின்று உருவாக்கப்பட்டு அருளை வழங்கு கின்றது. உருவம் வெளிப்படாத நிலையில் வஸ்து கணிதமானது மிக அற்புதமான உரு வத்தை வெளிப்படுத்துகிறது. சிற்பம் என்ற சொல்லுக்கு பல பொருள் இருந்தாலும் வெளிப் படுத்தல் என்ற பொருளும் உண்டு. சிற்பம் என்றால் வெளிப்படுத்துவது.

ஆலயங்களில் காணப்படும் முகூர்த் தம் தெய்வீகத்தை வெளிப்படுத்தி நிற்பன. எனவே அளவையியல் முறைப்படி உருவாக் கிய திருவுருவிலே இறைவன் வெளிப்படு கிறான். இந்நிலையில் அளவையியலால் தெய்வீக திருவுருவுக்கு பிரதிஷ்டை எதற் காக என்ற கேள்வி எழுகிறது. அளவையிய லால் ஏற்பட்ட சான்னியத்தை நிலைப்படுத்த பல்வேறு வகைகளிலும் பயனளிக்க வல்ல தான செயற்பாட்டு நிலையில் வைக்க பிர திஷ்டை பூசைகள் தேவைப்படுகின்றன. எனவே உயிர்க் கூட்டங்களின் நலமான வாழ் வுக்கு முறையான திருவுருவ அமைப்பு முறை யான பிரதிஷ்டை எனலாம். அளவையியலில் நேர் முறையும் மிகுதியும் பிரதிஷ்டைகளில் ஏற்படும் குறைபாடுகளும் பூசை முறைகளில் ஏற்படும் குறைகளும் குற்றங்களை ஏற்படுத் தும்.

அளவையியலில் குறை இருப்பின் பெரும் வியாபனம் ஏற்படும். சுற்றளவு குறை இருப்பின் அழிவும். அது மிகுதின் பல குறை கள் ஏற்படும். அகலமானம் குறைவுபடின் ஏழ்மையும் அதிகம் ஏற்படும். உயர்மானத் தில் குறை காணில் நாடும் நாடு ஆழ்வோ னும் குற்றத்திற்கு உட்படுவர்.

சிற்பத்துக்கு அளவுகள் பொருந்தி இருப்பின் எல்லா நன்மைகளும் அமையும். எனவே மேலும் பூசை முறையில் ஆகமங் கள் குறைபாடு ஏற்பட்டால் மரணம் ஏற்படும். செய்வோன், செய்விப்போன், செய்பவரைப் பார்ப்போன் ஆகிய மூவருக்கும் மரணம் ஏற்படும். பூசை தொடர்பான செயல்முறை

*கடவுள் நோயைக் கொடுக்கும்போதே கூடவே மருந்தையும் தருகிறார்.*

குறைந்தால் நோய்கள் ஏற்படும். எனவே மந்திரக் குறைபாடு இருத்தல் கூடாது. இறைவன் மந்திர வடிவானவன். மந்திர வடிவான இறைவனை அந்த ஒழுங்கிலே போற்றப்பட வேண்டும் என்பது ஆகம முடிவாகும்.

ஆகமங்களில் மனிதன் மந்திரக் குறைபாடு, செயல்முறைக் குறைபாடு, பூசைக் குறைபாடு அனைத்தையும் பரமேஸ்வரன் தன் கருணையால் பொறுத்தருளல் வேண்டும் என வேண்டிக் கொள்ளல் வேண்டும். வேண்டிக் கொள்ளும்போது நீங்குவதாக பூர்வ காரணாகமம் கூறுகிறது. மந்திர கீனம், கிரியா கீனம், திரவிய கீனம், துயதற்கிருதம் அனைத்தையும் பரமேஸ்வரன் பொறுத்தருள வேண்டும் என்று கூறப்படுகிறது. மனிதன் தற்செயலாக செய்யப்படும் குறைபாடுகளை இறைவனிடம் வேண்டும்போது அவை நிவர்த்திக்கப்படுகின்றன. எனவே ஆகமம் வழிவந்த ஆகம வழிபாட்டின் மூலம் மனிதன் இறை திருவருளைப் பெற்று உலகியல் வாழ்விலும் மேலான மோட்ச வாழ்விலும் கடைத்தேற முடிகின்றது.

## சந்தனு மகாராஜன்

படைப்புத் தொழிலைச் செய்யும் பிரம்மதேவர் தமது சத்தியலோகத்தில் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், அஷ்டவசுக்கள் முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள், கின்னரர், கிம்புருடர், கருடர், கந்தருவர், சித்தர், வித்தியாதரர் முதலானவர்கள் புடைசூழ சபையில் அமர்ந்திருக்கையில் வானதியாகிய கங்கையும் அச்சபைக்கு வந்தாள். அத்தருணத்தில் அங்கே ஒரு காற்று உண்டாகியது. அதனால் கங்காதேவியினது வஸ்திரம் (உடை) விலகியது. உடனே சபையில் இருந்த எல்லோரும் பதிவிரதையாகிய கங்கையினது அவயத்தை நோக்காது கண்களை மூடிக்கொண்டனர். ஆனால் மேற்கு திசைக்காவலனாகிய வருணன் மட்டும் கங்கையை நோக்கினான். அதனைக் கண்ட பிரம்மதேவர் கடுங் கோபங்கொண்டு வருணனைச் சபித்தார்.

“வருணனே மானிடரைப்போல் நடந்துகொண்டதால் பூலோகத்தில் மனிதப்பிறப்பு எடுத்து திருமணம் செய்து புத்திரர்களைப் பெற்று மீண்டும் என்னிடம் சேர்வாய்” என்றார். அதேபோல், “கங்கை தேவியே நீயும் பூலோகத்தில் பிறந்து உலக இன்பத்தைப் பெற்று மீண்டும் கங்கா நதி ஆகுவாய்” என்று கூறினார். அதன் பயனாக சந்திர வம்சத்தில் குருகுல சிகாமணியாக அரசு செய்துகொண்டிருந்த பிரதீபன் என்னும் அரசனின் இரண்டாவது மகனாக வருணன் பிறந்தான். அவனுக்கு சந்தனு என்னும் பெயரிட்டு பிரதீபனின் முதல் மகன் இளமையிலே காட்டுக்குத் தவஞ்செய்யச் சென்றதால் குணசிகாமணியாகிய சந்தனுக்கு அரசமகுடம் சூட்டி தான் தவம் செய்து முத்தியடைந்தான்.

சந்தனு மகாராஜன் தன் தந்தையைவிட பலமடங்கு நன்மைகளை செய்து நல்லாட்சி செய்துவரும் நாளில் ஒருநாள் வேட்டையாடச் சென்றான். வேட்டையாடி முடிந்ததும் தாகமிகுதியால் கங்கை நதியில் வந்து நீர்பருகினான். நதியிலிருந்து வரும்போது பகீரதியாக அவதரித்துள்ள கங்காதேவியைக் கண்டான். பேரழகியாகிய பகீரதியைக் கண்டு அவள்மேல் மோகம் கொண்டு அவளின் அனுமதி கேட்டான். அதற்குப் பகீரதி எனக்கு ஒரு சத்தியம் செய்து தருவீராயின் உம்மை மணம் முடிப்பேன் என்றாள். அதற்கு மன்னன் என்ன சத்தியம் என்று வினவ, பகீரதி “திருமணத்திற்குப் பின் நான் செய்யும் எந்தக் கருமத்திலும் தடைபோடக் கூடாது” என்றும் அப்படி நீர் என்னைத் தடுக்கும் காலத்தில் உம்மைவிட்டு நான் பிரிந்து விடுவேன் என்றும் உரைத்தாள். மோகவலையில் அகப்பட்ட சந்தனு மகாராஜன் சத்தியம் செய்துகொடுத்து பகீரதியை திருமணம் செய்து பட்டத்தரசியாக்கி இனிதே அரசாண்டு வந்தான்.

-எஸ்.எஸ். ஜஜீந்திரன்-

*நல்ல மனச்சாட்சிதான் கடவுளின் குரல்.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள் (தொடர்ச்சி...)

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

**பிறந்தநாள் விழா**

கண்ணன் பிறந்த திருநாளை கோகுலமே மகிழ்ச்சியுடன் கொண்டாடியது. கண்ணனை மகனாகப் பெற்ற பாக்கியத்தைப் பெரும் பேறாக நினைக்கிறாள் யசோதை. ஆயர்பாடியிலுள்ள பெண்களையெல்லாம் அழைத்து, கண்ணனின் திருமேனி அழகைத் திருவடிமுதல் திருமுடி வரை புகழ்ந்து அவர்களுக்கு காட்டி மகிழ்கிறாள்.

சீதக் கடலுள் அமுதன்ன தேவகி
கோதைக் குழலாள் யசோதைக்குப் போத்தந்த
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்
பாதக் கமலங்கள் காணீரே.
பவள வாயீர் வந்து காணீரே.

ஸ்ரீ கிருஷ்ணனின் அழகோ சொல்லில் அடங்காது. நீலமேக வண்ணமேனி, அழகிய சிவந்த பவளவாய், கமலச்செங்கண் மார்பிலே கௌத்துபமணி, இடையில் அரைஞாண், கையிலே குழல், தலையில் மயில் சிறகு அலங்காரம் இந்த மோகனக் கண்ணனின் அழகில் மயங்கிய யசோதை, குழந்தையின் கைகளில் காப்புப் போட்டு, பதக்கம் சூட்டி, கண்ணுக்கு மை எழுதி, விதம் விதமாக அழகு செய்து முத்தமிட்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினாள். முத்துக்கள் பதித்த தங்கத் தொட்டிலில் முத்துக் கிருஷ்ணனை வைத்து ஆய்ச்சியர்கள் தாலாட்டினார்கள்.

மாணிக்கம் கட்டி வயிரமிடை கட்டி
ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறு தொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ வையமளந்தானே தாலேலோ.

சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்
அங்கச் சரிவளையும் நாணுமரைத் தொடரும்
அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்
செங்கட் கருமுகிலே தாலேலோ தேவகி சிங்கமே தாலேலோ
மக்கட்பேறு பெற்றுமகிழும் இக்காலப் பெண்களுக்கு நல்ல வழிகாட்டி!
தாலாட்டுப் பாடலிலும் பகவத் விஷயம் கலந்திருக்க வேண்டாமா!

இப்பாடல்களையே தாலாட்டுப் பாடல்களாகப் பாடலாமே! இப்பாடல்களைக் கேட்டுப் பழகும் குழந்தைகள் பகவானின் திருவருளைப் பெறுவது திண்ணம். அவர்களுக்கு வாழ்வில்

*ஒருவனுக்கு வலிமை எது என்றால் ஊக்கமிகுதியே.*

துன்பம் ஏற்படாது என்கிறார் தெய்வ நங்கை யசோதை!

நந்தகோபர் வீட்டில் கிருஷ்ணன் அவர்களுக்கு நிறைய ஆனந்தத்தைக் கொடுத்தார். நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக கவர்ச்சியுடனும், பொலிவுடனும் வளர்ந்து வந்தார். கண்ணனுடைய விளையாட்டுகளில் மயங்கினாள் யசோதை. ஐயனே! அழகனே! இன்ப ஊற்றாக அமையும் அமுதே! ஆயர்கள் போரேறே! எனக்கொருகால் செங்கீரை ஆடுக! ஆடுகவே! என்று அந்த ஆட்டத்தினைக் கண்டு மகிழ்கிறாள். கண்ணன் இடுப்பில் கட்டிய சதங்கைகள் ஒலிக்க, தன் முத்துப் பற்களைக் காட்டி புன்முறுவல் பூத்து, பெருஞ் செயல்களைச் செய்த இரண்டு கைகளையும் சேர்த்து தட்டுகிறான்! அரிய செயலைச் செய்துவிட்டதாக நினைத்து, கைதட்டிய ஓசையைக் கேட்டு மேலும் மகிழ்கிறான். இதைக் கண்டு யசோதை; கண்ணா! மீண்டும் ஒருமுறை சப்பாணிகொட்டு உலகம் மகிழட்டும் என்று பேரானந்தம் அடைகிறாள். குழந்தையை நடக்கச் செய்து, அது தடுமாறிக் கொண்டு நடந்து வருவதைக் கண்டு மகிழ்ந்து, "கண்ணா! நீயல்லவோ நடையழகன். உன்னைச் சதுர்கதி என்று எல்லாரும் கூறுகிறார்களே! உன் மெல்லடித் தாமரைகளை தரைமீது மெல்ல வைத்து யானைக்குட்டி போல் நடந்துவா என்று அவன் நடை அழகைக் கண்டு ஆனந்திக்கிறாள். இப்படியாகக் குழந்தைப் பருவத்திலே செய்கின்ற விளையாட்டுக்களையெல்லாம் புரிந்து எல்லோரையும் மகிழ்வித்தான் ஸ்ரீ கிருஷ்ணன்.

எல்லோருக்கும் இனியவனாகவும், எளியவனாகவும், என்றும் காப்பவனாகவும் இருந்தான் ஸ்ரீ கிருஷ்ணன். அந்த ராதை நாயகன், கோதை நாயகன், சீதை நாயகன், கீதை நாயகன், பேதையின் நாயகன், தீராத விளையாட்டுப்பிள்ளை, வெண்ணெய்க் காடும்பிள்ளை, வேய்ங்குழலூதும் வித்தகப் பிள்ளை, பொல்லாத விசமக்காரக் கண்ணன், மாமாயன், அந்தக் கள்ளக் குறும்பனின் லீலைகள் கணக்கிலடங்குமோ? அந்த ஆனந்த மூர்த்தியின் அற்புத பாலகனின் திருவிளையாடல்களை அற்புத லீலா வினோதங்களின் ரசத்தினை இனிப் பருகுவோம்!

**பூதனை வதம்:**

கண்ணன் அவதாரத்தால் கோகுலமே மகிழ்ச்சியில் திளைக்க, கம்ஸன் மதுராவிலும், கோகுலத்திலும் பிறந்த சின்னஞ்சிறு குழந்தைகளைக் கொன்றுவிடும்படி பூதனை என்ற அரக்கியை அனுப்பினான். அவள் அங்குள்ள குழந்தைகளையெல்லாம் கொன்று, லட்சுமி தேவியோ என்று கோகுலத்திலுள்ளவர்களெல்லாம் மயங்கும்படி; தன் சுய உருவத்தை மாற்றி குழந்தைகளைத் தேடிச் சென்றவள் நந்தகோபனின் இல்லத்தில் நுழைந்தாள். அங்கே குழந்தையைக் கண்டாள். அது குழந்தையல்ல, தன்னைப் போன்றவர்களுக்கு யமன் என்பதை அவள் அறியவில்லை. சாதாரணக் குழந்தையென நினைத்து அருகில் போனாள். தன்னைக் கொல்வதற்காக வந்திருக்கும் அரக்கியை அறிந்தும் அறியாதவர் போன்று பகவான் இருந்தார். குழந்தையை எடுத்து தன்மடியின் மீது வைத்துக்கொண்டாள். அதில் மயங்கிய யசோதை, ரோகிணி முதலாய பெண்கள் அவளை யாரென்றும் விசாரிக்காமல், குழந்தையைத் தூக்கியதற்குத் தடை சொல்லாமல் பதுமைகளாக நின்றார்கள்.

பூதனை குழந்தையை மார்போடு அணைத்து கொடிய நஞ்சைப் பெருக்கும் தன் முலைப்பாலை ஊட்டினாள். பகவான் தன்னிரு கரங்களாலும் அவள் மார்பைப் பிடித்துக்கொண்டு, அவள் பிராணனையும் சேர்த்து உறிஞ்சினார். அவள் வலிதாங்க

*சிந்தனை இல்லாத மனிதன் பிணத்திற்குச் சமமானவன்.*

முடியாமல் அலறித் துடித்தாள். அப்படியே கால் கைகளை உதறிக்கொண்டு, வாயைப் பிளந்து கொண்டு "ஓ" வென்று அலறிக் கொண்டு தலைவிரிகோலமாக விழுந்து இறந்தாள். அவள் தன் உண்மையான உருவத்தோடு மலைபோல் இறந்து கிடந்தவளைக் கண்டு கோபர்களும், கோபிகைகளும் நடுங்கிப் போனார்கள். விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை எடுத்து, குழந்தைக்குப் பலரட்சைகளையும் செய்தார்கள்.

ஒருநாள் நந்தகோபரும் யசோதையும் குழந்தையைக் கூட்டிக் கொண்டு கோயிலுக்குச் சென்றார்கள். குழந்தைக்கு தூக்கம் வருவதைக் கண்ட யசோதை வண்டியின் கீழ் தூளியைக் கட்டி படுக்கவைத்தாள். குழந்தை கால்களை உதைத்துக்கொண்டு அழுதது. வண்டி தலைகீழாகக் கவிழ்ந்தது. எல்லோரும் ஓடிவந்து குழந்தையை எடுத்துக் கொண்டு வண்டி எப்படிக் கவிழ்ந்தது என்று தெரியாமல் திகைத்தனர். அருகிலிருந்த சிறுவர்கள் குழந்தை உதைத்துத்தான் வண்டி கவிழ்ந்தது என்றார்கள். குழந்தை நலமாக இருப்பதற்காக அபிஷேகங்கள், ஹோமங்கள் செய்தனர். பகவானுடைய லீலைகள் காதுகளுக்கு இன்பமளிப்பவைகளாகவும், மனதுக்கு ஏற்படும் சோர்வும் நீங்கி சந்தோசமளிப்பவைகளாகவும் இருக்கின்றன. பகவானிடத்தில் பக்தியும், பாகவதர்களிடத்தில் அன்பும் ஏற்படுகின்றது.

"இமைப்பொழுதும் நெஞ்சை விட்டு நீங்காத நீலவண்ணச் சிறுவனே மனதை மயக்கும் மாமாயனே யதுகுலதிலகா பேரின்பத்தின் பொக்கிஷமே, நின் துயரறு திருவடியில் வீழ்ந்தேன் என் உயிரே" (தொடரும்...

## உன் மனதைப் புரிந்துகொள்

வியாபாரி ஒருவன் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகியிருந்தான். ஆகவே அதற்குத் தீர்வு காண துறவியை சந்திக்கச் சென்றான். அப்போது துறவி தியானத்தில் இருந்தார். அந்த வியாபாரி துறவியிடம் "குருவே! எனக்கு ஒரு பிரச்சினை உள்ளது. அதை நீங்கள்தான் சரிசெய்ய வேண்டும்" என்று கூறினான். அதற்குத் துறவி "என்ன பிரச்சினை?" என்று கேட்டார். அவன் அதற்கு "நான் துன்பச்சிறையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான். துறவி "என்ன காரணம்" என்று கேட்டார். அவன் "மற்றவர்கள் எனக்கு நிறையத் துன்பம் கொடுக்கிறார்கள்" என்று சொன்னான். அதைக்கேட்ட துறவி அவனிடம் "நீ சொல்வது தவறு. உண்மையில் உனக்குத் துன்பத்தை கொடுப்பது, உன் மனம்தான்" என்று சொன்னார். "அப்படியா?" என்று சொன்ன அவன், "அப்படியென்றால் துன்பத்திலிருந்து விடுபட என்ன வழி?" என்று கேட்டான். குரு அதற்கு "முதலில் உன் மனதைப் புரிந்துகொள். துன்பம் உன்னை நெருங்காது" என்று கூறினார். பிறகு அவன் "எப்படிப் புரிந்துகொள்வது?" என்று துறவியிடம் கேட்டான். அதற்கு அவர் "துன்பம் வரும்போது நாம் முழு மனதோடு ஏற்றுக்கொண்டால் துன்பம் பறந்துவிடும். அதுவே துன்பம் வரும்போது மனம் கஷ்டமாக இருக்கும் என்று தெரிந்து, அதை ஏற்காமல் இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம்" என்று கூறிச் சென்றார்.

# தானம் செய்வோம்

– திரு யூ.பி. ஆனந்தம் அவர்கள் –

உலகில் மானிடராகப் பிறப்பதரிது. அப்படிப் பிறந்தாலும் கூன் குருடு இல்லாமற் பிறந்து தானமும் தவமுந் தான் செய்தலரிது என ஔவை மூதாட்டி கூறியுள்ளார். இதில் இருந்து என்ன தெரிகிறது? தானம் செய்வதற்கும் ஒரு கொடுப்பனை இருக்கவேண்டும். ஆகவே இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? அதே மூதாட்டி அறஞ் செய விரும்பு என்கிறார். எமக்கு அத்தகைய விருப்பம் வர இறை அருள் இருக்க வேண்டும்.

தருமர் என்பது அவரது பெயராகவே இருந்தபோதும் கூட அவர் ஒருநாள் உணவு உண்டு கொண்டிருக்கும்போது யாசகங்கேட்டு ஒருவர் வருகிறார். உடனே இடது கையால் அவர் யாசித்ததை வழங்குகிறார் தருமப்பிரபு. ஏன் இவ்வாறு செய்தீர்கள்? என சகோதரர்கள் வினவியபோது "நான் எழுந்து சென்று கை கழுவிவிட்டு வந்து வலதுகையால் கொடுப்பதற்கிடையே என் மனம் மாறிவிடலாம். அதனாற்றான் இடது கையாலேயே தருமஞ் செய்தேன்" எனப் பதில் கூறுகிறார் தருமர். தருமரே அவ்வாறு எனின்,, நாம்?

இதே தருமர் யாகஞ் செய்து பூரிப்புடன் சிறு மனக்கர்வத்துடன் அமர்ந்து இருக்கும்போது பாதி தங்க நிறமாக மாறி இருந்த அணில் ஒன்று வந்து அங்கே சிந்தியிருந்த மாவில் தன் உடலைப் புரட்டி எடுத்து முகஞ் சோர்ந்து நின்றது கண்டு காரணம் கேட்டதும், ஒரு ஏழை அந்தணர் வீட்டில் அருமையாகக் கிடைத்த மாவில் செய்த உணவை வீட்டில் உள்ளவர்கள் பகிர்ந்து உண்ண ஆரம்பிக்கும் தறுவாயில் ஒரு வயோதிபர் பசி என வந்ததும் வீட்டின் தலைவி தன் உணவை வழங்க பசி தீராதிருக்கவே தலைவனும் வழங்க மேலும் பசி அடங்காமை கண்டு வீட்டிலுள்ள சிறார்களும் தமது பங்கினை வழங்க திருப்தி காணாது வீட்டில் மிகுதியாக இருந்த வயோதிபப் பெற்றோர்களும் தமது பங்கை வழங்கியவுடனே பசி தீர்ந்து சென்றார் வயோதிபர். அங்கு சிந்தியிருந்த சிறுபகுதி மாவில் தனது உடல்படும்போது தங்கமயமாகியிருந்ததை அணில் தெரிவித்து "உமது தானத்திற்கு அந்தளவு மகிமை இல்லை" எனக் கூறிச் சென்றது. தருமரது கர்வம் பொடிப்பொடியாகியது. தன்னலங் கருதாது தான தருமஞ் செய்தலின் சிறப்பினை அல்லவா இது குறித்து நிற்கிறது.

தனக்கு மரணம் சம்பவிக்கும் எனத் தெரிந்தும்கூட கர்ணன் கவச குண்டலங்களைத் தானமாக வழங்கியுள்ளமையும் இதனையே எமக்கு உணர்த்துகிறது.

மற்றும் தானம் வழங்கும்போது வழங்குபவரது கரம் தாழ்ந்தும் பெறுபவரது கரம் உயர்ந்தும் இருக்க வேண்டுமென்பதற்காகவே தானம் வழங்கும்போது தட்டத்தில் வைத்தே வழங்குவது வழக்கமாக இருந்து வருகிறது. வலது கை கொடுப்பது இடது கைக்குக் கூடத் தெரியக்கூடாது என்பது ஆன்றோர் வாக்கு. தானம் வழங்கிய பின் அதற்கு உரிமை கோரினாலோ அல்லது பிறருக்குப் பறைசாற்றினாலோ அந்தத் தானம் வழங்கியதற்குரிய பலன் குறைந்து விடுவதாக ஓர் ஐதீகம். தானம் செய்த அக்கணமே அதை எம் நினைவிலிருந்து அகற்றி விட வேண்டும். எனவே அரிய மானிடப்பிறவி பெற்ற நாம் மேற்கூறிய விடயங்களைக் கருத்திற்கொண்டு தான தருமஞ் செய்து நற்கதி பெறுவோமாக.

*வாழ்வதில்தான் இன்பம், உழைப்பதில்தான் வாழ்வு.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| Dr க. சிவஞானசூரியர் | கொழும்பு | 6000. 00 |
| சி. சுகிர்தன் | ஏழாலை | 1மூடை அரிசி |
| மு. சிவானந்தன் | கனடா | 6000. 00 |
| வே. முருகேசுசாமியாரின் அடியார்கள் | கிளிநொச்சி | 35000. 00 |
| மு. சிவகுமார் | வவுனியா | 500. 00 |
| சு. மகேஸ்வரி நினைவாக சு. அரவிந்தன் மூலம் | வெள்ளவத்தை | 6000. 00 |
| ச. வதனி | நீர்வேலி | 2000. 00 |
| கோபிகிருஷ்ணா ஏகன் | ஊரெழு | 2000. 00 |
| சீ. தனிஸ்கா | லண்டன் | 2000. 00 |
| செல்வமணி குணரட்னம் | உடுப்பிட்டி | 500. 00 |
| திருமதி ஜெ. ரேணுகா | உரும்பராய் | 500. 00 |
| தி. ஜெயச்சந்திரன் | இணுவில் | 10000. 00 |
| பொன். பூலோகசிங்கம் | புன்னாலைக்கட்டுவன் | 2100. 00 |
| வி. அக்ஷனா | சண்டிலிப்பாய் (வைத்திய சேவைக்காக) | 10000. 00 |
| சுந்தரம் பிரதேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| ஈ. பிரவீனா, ஈ. கிஷானா | சண்டிலிப்பாய் | 5000. 00 |
| மு. ராஜேந்திரா | தும்பளை | 4000. 00 |
| ஐ. கணேசலிங்கம் | உரும்பராய் | 500. 00 |
| சி. அஷானி | கோப்பாய் | 1000. 00 |
| நா. கருணாநிதி | லண்டன் | 2000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 3பட்டி பருப்பு |
| ரிஷாந்தி நவநீதன் | ஜேர்மன் (மலையக மாணவர்களுக்காக) | 10000. 00 |
| தர்மலிங்கம் மகாலெட்சுமி நினைவாக | ஊறணி | 20000. 00 |
| M. சதாசிவமூர்த்தி | கனடா | 20000. 00 |
| திருமதி செகராஜசிங்கம் | கனடா | 2000. 00 |
| செ. அன்னலிங்கம் | தாவடி | 10000. 00 |
| K. அபிகீர்த் | லண்டன் | 5000. 00 |
| S. சிவராஜ் | கொழும்பு | 10000. 00 |
| செல்வநாயகிஊடாக பாக்கியம் பரம்சோதி நினைவாக | கரவெட்டி | 20000. 00 |
| திரு சிவஞானப்பிள்ளை | லண்டன் | 5000. 00 |
| திரு நாகநாதர் குடும்பம் | சிங்கப்பூர் | 10000. 00 |
| திரு செல்வரத்தினம் | சங்கரத்தை | 1மூடை நெல் |

அதிக ஓய்வு அதிக வேதனையைத் தரும்.

| | | |
|---|---|---|
| பாலசுப்பிரமணியம் குடும்பம், பாலச்சந்திரன் குடும்பம் | | 3500. 00 |
| த. சுதர்சன் | புத்தூர் | 500. 00 |
| செல்வமுருகன் செல்வரஞ்சினி | கரவெட்டி | 5000. 00 |
| வைஷ்ணவி நகைப் பூங்கா | நெல்லியடி | 1000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 3000. 00 |
| சக்தி ரூபன் குடும்பம் | லண்டன் | 1000. 00 |
| இ. கருணதாசன் | சுவிஸ் | 5000. 00 |
| பைங்கிளி இளஞ்சேரன் | கனடா | 20000. 00 |
| ஸ்ரீ நதியா நகை மாடம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ஆ. ஜெயகணேஷன், ஜெ. தட்ஷா, ஜெ. தருண் | கரவெட்டி | 5000. 00 |
| A.S. பூவேந்திரன் குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| சி. தர்சினி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திரு சிவானந்தன் | காங்கேசன்துறை | 5000. 00 |
| சஞ்சீவன் சோபிகா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| செல்வராசா டிலக்ஷனா | கனடா | 5000. 00 |
| ஆறுமுகம் குடும்பம் | உரும்பராய் | 1000. 00 |
| மு. சுஸ்ருதன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சர்மிளா நாராயன் | கனடா | 1000. 00 |
| பா. தெய்வநாயகி | கொழும்பு | 3000. 00 |
| யோ. இந்திரகுமாரி | திக்கம் | 11000. 00 |
| குமாரசாமி குடும்பம் | பத்தமேனி | 1000. 00 |
| சு. முத்துலிங்கம் (முத்தொளி) | கோண்டாவில் | 1000. 00 |
| பா. கௌசல்யா | லண்டன் | 1000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 5000. 00 |
| திரு பரமநாதன் குடும்பம் | | 5000. 00 |
| க. கலாபன் | சாவகச்சேரி | 1000. 00 |
| சூ. அருள்மொழி | லண்டன் | 1000. 00 |
| அருந்ததி சிவராஜா | அவுஸ்திரேலியா | 1500. 00 |
| ந. சுப்பிரமணியம் | இணுவில் | 4000. 00 |
| திரு கேதீஸ்வரன் | மட்டக்களப்பு | 5000. 00 |
| ச. ஜெயபிரதாப் | கொழும்பு | 2500. 00 |
| T.R. கனகலிங்கம் குடும்பம் | வெள்ளவத்தை | 5000. 00 |
| கா. கணேசலிங்கம் | கொழும்பு-6 | 10000. 00 |
| உ. கோபி | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| பொ. சூரியக்குமரன் | மல்லாகம் | 10000. 00 |

(தொடரும்...

*காலத்தை வீணாக்குவது என்பது தன்னைத்தானே கொள்ளையடிப்பதற்குச் சமம்.*

# சுட்டபழம் தெட்டபழம்

– ஆழ்கடலான் அவர்கள் –

சைவ இலக்கியப் பார்வையில் ஒளவையார் முருகனோடு ஊடாடிய கதையொன்று வழக்காற்றில் அமைந்துள்ளமை யாவருக்கும் பரிச்சயமானது. தமிழோடு செறிந்த முருகனுக்கும். தமிழ்மூதாட்டி ஒளவையாருக்கும் இடையே ஏற்பட்ட திருவிளையாடலில். இந்தச் சுட்டபழம் இடம்பெற்றிருக்கிறது. நன்கு பழுத்த கனிந்த பழம்தான் (நாவற்கனி) சுட்டபழம். எம்பெருமான் செவ்வேள் ஒளவையின் அருந்தமிழைக் கேட்க விழைந்து இத்திருவிளையாடலை மேற்கொண்டார். ஒளவையார் தனிவழி சென்ற மார்க்கத்தில் , இளமுருகன் ஒரு நாவல்மேல் ஏறிப் பழங்களைத் தின்றுகொண்டு இருந்தான். வெண் மணற் பரப்பான அச்சூழலின் இதங்கண்டு ஒளவையார் அம்மரத்தின்கீழ் உட்கார்ந்தார். எதிர்பாராது மேலே அண்ணார்ந்து பார்த்தார். பையன் ஒருவன் பழங்களைச் சுவைத்துக்கொண்டு இருந்ததைக் கண்டு தனக்கும் (நாவற்) பழங்களைத் தரும்படி வேண்டினாள். அப்போது அச்சிறுவன் பாட்டி, பாட்டி, உனக்குச் சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என வினாவினான். ஒளவையாரும் பழத்திற் சுட்டபழம், சுடாதபழம் என்றுவேறே இருக்கிறதா? என்ற கேள்வியோடு சுட்டபழம் தேவையென வெகு ஆவலோடு கேட்டாள். இதைச் செவிமடுத்த பாலசுப்பிரமணியனும் நன்கு பழுத்த நாவற் பழங்களைப் பறித்துக் கீழே போட்டான். மணல் பழங்களிலே ஒட்டி இருந்தமையாற் பாட்டி அவற்றைப் பொறுக்கி, வாயினால் ஊதி ஊதிச் சாப்பிட்டாள். அப்பொழுது முருகப் பெருமான் பாட்டியை விளித்து "என்ன பாட்டி பழம் சுடுகிறதா" என நளினமாகக் கேட்டான். இந்த உண்மை எனக்குப் புரியாமற் போயிற்றே என்று பின்வரும் பாடலைப் பாடினாள்.

கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்! பெருங்கானிற்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்ற
தீரிரவும் துஞ்சா தென்கண்.

ஈர்+இரவு= ஈர்இரவு (ஈர்- இரண்டு), துஞ்சுதல்- நித்திரை கொள்ளுதல், அத்தருணம் கந்தப்பிரான் தன் சுயவடிவத்தைக் காட்டி, கொடியது எது? இனியது எது? பெரியது எது? அரியது எது? எனக் கேள்வி மேற்கேள்வியாகக் கேட்டார். மெல்லிசைப் புலமை சான்ற ஒளவையார் அருமையான நான்கு பாடல்களைப் பாடினார்.

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது
இன்புற அவர் கையில் உண்பது தானே.

*கடவுளின் சட்டம் ஒருவருக்கும் தீங்கு செய்யாது.*

இனியது கேட்கின் தனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவுள் ளோரைக்
கனவினும் நினைவிலும் காண்பது தானே.

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தி வந்தோன்
கரியமாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடலோ குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானிட ராதலரிது
மானிட ராயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செய்தல் அரிது
தானமும் தவமுந் தான் செய்வராயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே.

சுட்டபழம் எப்படி முருகனோடு தொடர்புறுத்தப்படுகிறதோ அவ்வண்ணமே. ஆழ்வார்களின் அருட் செயல்களிலே "தெட்டபழ" மெனப் பாவிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பெரியாழ்வார் தந்த பெரியதிருமொழிப் பாசுரமொன்றில் "தெட்டபழம்" என்ற தொடர் இடம் பெறக் காணலாம்.

பட்டரவேரகல் அல்குல் பவளச் செவ்வாய்
பணை நெடுந்தோள் பிணைநெடுங்கண் பாலா மின் சொல்
மட்டவிழுங் குழலிக்கா வானோர் காவில்
மரங் கொணர்ந்தா னடியணைவீர் அணில்கள் தாவ

நெட்டிலைய கருங் கமுகின் செங்காய் வீழ
நீள்பலவின் தாழ்சிலையில் நெருங்கு, பீனத்
தெட்டபழம் சிதைந்து மதுச் சொரியும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மின்களே!

-பெரிய திருமொழி 3.4.8.

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர் திருமங்கை ஆழ்வார் அவருடைய பாசுரங்களைப் பெரிய திருமொழி என்பர். அவர் மங்களா சாசனஞ் செய்த திவ்விய தேசங்களிலொன்று (திருகாழிச்சீராம விண்ணகரம்) சம்பந்தரோடும் தொடர்புடையது. இறைவன் "திரி விக்கிரம நாராயணர். தாயார். லோகநாயகி, மட்ட விழும் குழலாள். பன்னிரு பெயர்கள் கொண்ட சீகாழியை வைணவர் காழிச்சீராம விண்ணகரம் என அழைக்கின்றனர். அணில்கள் அங்கும் இங்கும் தாவிப் பாய்கின்றன. அப்போ உயரிய கமுகின் செம்மையான காய்கள் உதிர்கின்றன. பலா மரங்களில் நிறைந்து நெருங்கிய பலாக்கனிகள் சிதைந்து கமகமவென வாசம் அடிக்கின்றன. இப்பழுத்த பழங்களை மங்கை மன்னன் "தெட்டபழம்" எனப் பாடியுள்ளார். தெட்டபழம்- பக்குவமான பழம், கனிந்த பழம்.

விஷ்டாத்துவத்தை உருவாக்கிய மகான் இராமானுஜர் ஒருமுறை "பெரிய திருமொழிப் பாசுரங்களுக்கு ஒரு விளக்கம் சொல்லிக் கொண்டு வந்தாராம் அப்பொழுது" பட்டரவேரகல் (3.4.8) என்ற பாடலில் வரும். "தெட்டபழம்" சிதைந்து மதுச்சொரியும், காழிச்சீராம விண்ணகரே சேர்மின்களே" என்ற வரிக்கு விளக்கஞ் சொல்ல நேர்ந்தபோது "தெட்டபழம்" என்பதற்குச் சரியான பொருள் விளங்கவில்லை என்று அருளிச் செய்து வைத்து, பின்பு ஒருதரம் யாத்திரை யாகச் சென்றபோது அங்கே, நாவல் மரங்களின்மீது சில பிள்ளைகள் (சிறுவர்கள்) ஏறிப் பழம் பிடுங்கையில், கீழே இருந்த சில பிள்ளைகள்" அண்ணே! தெட்டபழமாகப் பார்த்துப் பறித்துப்போடு என்று சொல்ல அதைத் தற்செயலாய்க் கேட்ட எம்பெருமானார். (இராமானுஜர்) பிள்ளாய், தெட்டபழம் என்றால் என்ன? என்று வினவு, அதற்கு அவர்கள் "கனியப் பழுத்த பழம்" எனச் சொல்ல உடையவரும் (இராமானுஜர்) திருவுள்ளம் உவந்து, இது ஒரு திசைச் சொல்போல் இருந்தது எனக் கூறியமை உற்று நோக்கத்தக்கது.

ஆக ஔவைக்கு வந்த அனுபவமும், இராமானுஜருக்குக் கிடைத்த அனுபவமும் ஒன்றே எனலாம்.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆகஸ்ட் | 21 | ஆவணி | 05 | செவ்வாய் | குங்கிலியக்கலயர் |
| செப்ரெம்பர் | 07 | ஆவணி | 22 | வெள்ளி | நீலகண்ட சிவாச்சாரியார் |
| செப்ரெம்பர் | 24 | புரட்டாதி | 08 | திங்கள் | கடையிற்சுவாமி |
| ஒக்டோபர் | 07 | புரட்டாதி | 21 | ஞாயிறு | அருணந்தி சிவாச்சாரியார் |
| ஒக்டோபர் | 24 | புரட்டாதி | 24 | புதன் | சங்கரபண்டிதர் |

*நன்னடத்தை உடையவனை இன்பம் நிழல்போல் தொடர்கிறது.*

# வழித்துணை 13

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 மரியாதை என்பது புரியாத புதிரன்று
கொடுக்கலும் வாங்கலும் சமமாக இருப்பதாகும்
பெரியோற்கு சிறியோரும் சிறியோற்கு பெரியோரும்
உரித்தாக்க உரித்தாகும் உயரிய பண்பாகும்.

02 கற்பூரம் உருகலாம் ஊதுபத்தி கருகலாம்
அற்புதத் தீபமதும் அணையாமல் எரியலாம்
பொற்பதம் காண்பதற்கு இவைமட்டும் போதாது
சொற்பமேனும் உடல்உள்ளம் உருகுதலும் வேண்டும்.

03 அவனென்றால் இறைவன் இவனென்றால் மனிதன்
அவனையும் இவனையும் பிரிப்பவன் நானே
நான்மெல்ல அகன்றிட்டால் அவனும் இவனும்
இரண்டறக் கலந்தே ஒன்றாகி மகிழ்வர்.

04 சிறுவரை ஆதரித்தல் சிறப்புத்தான் தவறன்று
ஆனாலும் முதியோரைப் புறக்கணித்தல் நன்றன்று
ஏனென்றால் சிறுவரொடு இளையோரைப் பெரியோரை
வாழவைக்கும் ஆத்மீகம் நிறைந்தவர்கள் முதியோரே.

05 மனிதநேயமிங்கு மரித்துப் போனதென்று
புனிதர்போல் நாமிங்கு புரிந்துணர்ந்து பேசுகின்றோம்
இனியுமதை எம்முள்ளே பிறக்கவைக்க முயலாமல்
முனிவரும் தேவரும் வருவரென்றோ காத்திருப்போம்.

06 தன்தேவை மட்டுமே தேவையென்று எண்ணுபவர்
பிறர்தேவை எதையுமே பொருட்டாக எண்ணார்கள்
பிறர்தேவை நிறைவேற்றி தன்தேவை தனையிழப்போர்
இறையருளால் இழந்தவற்றைப் பன்மடங்காய்ப் பின்பெறுவர்.

*நன்மையும் தீமையும் பிறர் தரவாரா.*

07 தாயாரின் சேவையொன்றும் பெரிதாக இல்லையென்று
சேயினர் சொத்தோடு சுகம்பெரிது என்பதுண்டு
ஆயினும் தாய்தந்த இதயத்தின் துடிப்பைவிட
தேயினும் வளரினும் மற்றவைதான் பெரிதாமோ.

08 தந்தையை வந்தனை செய்கின் பிள்ளைகட்கு
சிந்தையில் சிறந்தன வந்தே அமர்ந்திடும்
நிந்தைகள் புரியாமல் தாய்தந்தை போற்றிடில்
குருவோடு தெய்வமும் கூடவந்தே அருளுவர்.

09 எத்தனைதான் சொன்னாலும் எண்ணியதைச் செய்பவர்கள்
புத்திமதி கேளார்கள் பக்திவழி நடவார்கள்
இத்தரையில் தமக்குநிகர் தாமேதான் எனநடந்து
செத்திடுவர் செத்தபின்பு இவரையாரும் எண்ணார்கள்.

10 மெத்தப் படித்தாலும் மேன்மைகளைச் சுமந்தாலும்
பத்துப் பேரிடத்தில் பலதினையும் கேட்டறிந்து
ஒத்துப்போகின்ற உத்தம குணம் படைத்தோர்
செத்தாலும் சாகாமல் பிறர்நினைவில் தினம்வாழ்வர்.

## ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த அதியமான்

கடையேழு வள்ளல்களில் பெயர்பெறும் மற்றொரு வள்ளல் அதிகன் எனப்படும் அதியமான். அதிகர் எனும் குலத்தில் பிறந்தமையால் இவனுக்கு இந்தப் பெயர் வழங்கலாயிற்று. அதிகன், அதிகமான், அதியன் எனவும் நாமங்கள் கொண்டு அழைக்கப்படுகிறான். தகடூர் எனும் நாட்டைத் தன் ஆட்சி மையமாகக் கொண்டு ஆட்சி செய்தவன் இவன். மிகச் சிறந்த வள்ளல். தன்னிடம் எவர் வந்தாலும் இல்லையென்று சொல்லாது அவர்களுக்குக் கொடையளிப்பான். தன்னிடம் வரும் புலவர்களை அன்புடன் உபசரித்து அவர்களுடன் நெடுநேரம் இருந்து இனிமையாகக் கதைபேசிக் கொண்டிருப்பான்.

ஒருமுறை அதியமானுக்கு பெறுதற்கரிய ஒரு நெல்லிக்கனி கிடைத்தது. அதை உண்பவர் மரணமின்றி நீண்டகாலம் உயிர் வாழலாம். ஆனால் அதியமானோ, அது கிடைத்த உடனேயே அதனைத் தான் உண்டுவிடவில்லை. அந்த நிலையில் அதியமானின் அரச சபைக்கு நெடுந்தூரத்திலிருந்து ஔவையார் நடந்து வந்து சேர்ந்தார். அப்போது களைப்போடிருந்த ஔவையாரை வரவேற்ற அரசன், தன்னிடமிருந்த நெல்லிக்கனியை ஔவைக்கு அளித்தான். கிடைத்தற்கரியதும், நீண்ட ஆயுளைத் தருவதுமான அந்த நெல்லிக்கனியைத் தான் உண்ணாது தமிழுக்குத் தொண்டு செய்து தமிழ் வளர்க்கும் அந்த ஔவை மூதாட்டிக்கு உண்ணக்கொடுத்தமை அதியமானின் கொடைச் சிறப்பை உணர்த்தி நிற்கிறது.

*ஏமாற்ற நினைப்பவனைக் கடவுள் முன்பே ஏமாறச் செய்துவிடுவார்.*

# ஈழத்து ஈஸ்வரங்களும் சிவாலயங்களும்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

சிவன் சம்பந்தமுடையவன் சைவ சமயி ஆகிறான். சிவனே முழுமுதல் கடவுள் என்கிறார் நாவலர் பெருமான்.

தமிழகத்தில் கோவில் என்ற சிறப்பு உடைய தலம் சிதம்பரமாகும். இது மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சமாகிய சிறப்புக் களையுடைய பஞ்சபூதத் தலங்களில் ஆகா யத் தலமாகவுள்ளது.

சிவபெருமான் தென்தமிழ் நாட்டுக்கே சிறப்பாக உள்ளவர். இதன் காரணமாகவே "தென்னாடுடைய சிவனே போற்றி" என்று வாழ்த்தி நின்றனர் சிவநெறிச் செல்வர். இந்தியாவெங்கும் தலயாத்திரை செய்துள்ள சமயகுரவர் நால்வரும் 200க்கு மேற்பட்ட பதிகங்கள் பாடியுள்ளனர்.

இந்நிலையில் "சிவபூமி" எனப் போற்றப் படும் ஈழத்தில் உள்ள பஞ்ச (ஐந்து) ஈஸ்வரங் கள் பற்றியும் பேரருள் தரும் அற்புதமான சிவாலயங்கள் குறித்தும் கூறுதலே இக்கட் டுரையின் நோக்கமாகும். யாழ்ப்பாணம் கீரி மலையில் நகுலேஸ்வரமும் திருகோண மலையில் கோணேஸ்வரமும் வடமேற்கே பாலாவிக் கரையில் கேதீஸ்வரமும் மேற்கில் முன்னேஸ்வரமும் உள்ளன. தெற்கே தீவாந் திரமுனை எனப்படும் "டொண்டிறா" நகரில் தொண்டீஸ்வரமும் உள்ளது.

தமிழகத்திலிருந்து நகுல (கீரிமுகம்) கொண்ட முனிவர் ஒருவர் கீரிமலையின் புனித தீர்த்தத்தில் நீராடி நகுலமுகம் நீங் கியமையால் மகிழ்ந்து அருகே கோவில் அமைத்து அதற்கு நகுலேஸ்வரம் என்று பெயரிட்டார் என்பது வரலாறு. பெயரில் தலம் அமைத்து ஊரவர்களுடன் சேர்ந்து முனிவர் வழிபட்டு வந்தார் என்பது தலவரலாறு. மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஆகியவை முறை யாகவுள்ள தலம். அருணகிரி திருப்புகழ் பாடிய ஈஸ்வரம் புன்னையம்பதியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ வித்துவான் கணேசையர் இக்கோவி லின் வரலாற்றைப் பாடலாக்கிப் பொருளும் கூறிப் புத்தகமாக வெளியிட்டுள்ளார்.

கோணேசப் பெருமான்மீது ஞானசம் பந்தப் பெருமான் பதிகம் பாடியுள்ளார். கேதீஸ்வரம்மீது சம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவரும் பதிகம் பாடியுள்ளனர். இவற்றுள் கோணேசர் பதிகம் 3ஆம் திருமுறையிலும் கேதீஸ்வரப் பதிகம் 2ஆம் திருமுறையிலும் அடக்கப்பட்டுள்ளன. ஈழமண்ணில் கால் பதிக்காது இருவரும் இராமேஸ்வரத்திலிருந்தே பதிகங்கள் பாடியுள்ளதாக வரலாறு.

இராமன் இராவணனைச் சங்காரம் செய்தமையால் ராகவனைப் பிரமஹத்தி பற்றி யது. அதிலிருந்து நீங்கக் கோவில் அமைத்து லிங்கம் வைத்துச் சாந்தி செய்ய அனுமனை லிங்கம் எடுத்துவரக் காசிக்கு அனுப்பினார். இதனிடையே முகூர்த்தம் நெருங்குவது கண்ட சீதாபிராட்டி வெண்மணல் எடுத்து சிவலிங்கம் உருவாக்கித் தர அதனை வைத்துக் கிரிகை ஆரம்பமானபோது அனுமன் சிவலிங்கம் தந்து நின்றான். அதனையும் வைத்துப் பூஜை செய்து பிரமஹத்தி நீங்கி யாவரும் வழிபட்டு மகிழ்ந் தனர். இரண்டு லிங்கங்கள் கருவறையில் பிரதிட்டை செய்யப்பெற்ற விசேடமுடைய கோவில் இராமேஸ்வரம்.

இவ்வாறு பாடல்பெற்ற தலங்களை வியாபார நோக்கில் ஐரோப்பாவில் இருந்து வந்த ஒல்லாந்தர் போர்த்துக்கீசர் ஆகியோர்

அரச அதிகாரம் பெற்று தமது மதங்களைப் பரப்பும் நோக்கில் சைவ ஈஸ்வரங்களை இடித்தனர். வாழையிலையில் உண்பதையும் வீட்டில் பிதிர்க்கடன் தர்ப்பணம் ஆகியவை செய்வதையும் தடுத்தனர்.

கிராமம்தோறும் பாடசாலைகள் கட்டி உணவு உடை புத்தகம் இலவசமாக வழங்கித் தம் மதங்களைப் பரப்ப முயன்றனர். தமது மத அனுட்டானம் பெற்றவருக்கு வேலைகளும் வழங்கினர். இதனால் ஆசிரியர் ஆனவர் பலர்.

இந்நிலை கண்டு கொதித்தெழுந்தார் நாவலர் ஐயா. இவர் யாழ் மத்திய கல்லூரியில் தமிழ் ஆசிரியராக இருந்தவர். கிறிஸ்தவ எதிர்ப்புப் பிரசாரத்தைத் தனியொருவராக நின்று பேச்சாலும் துண்டுப் பிரசுர மூலமாகவும் பத்திரிகை வாயிலாகவும் எதிர்த்து நின்று தேசிய வீரரானார். கத்தோலிக்க கிறிஸ்தவ மதங்களைத் தடுத்துச் சைவத்தையும் தமிழையும் பாதுகாத்து 5ம் குரவர் ஆனார். இயலுமான இடங்களில் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை அமைத்தார். அவற்றுள் ஒன்று 1852இல் கோப்பாயில் அமைக்கப்பட்ட கிறிஸ்தவக் கல்லூரிக்கு அருகில் 1872இல் அமைத்ததே நாவலர் இந்து தமிழ்க் கலவன் வித்தியாலமாகும். நாவலர் பெருமான் போன்ற பெரியார்களின் பாதம்பட்ட மண்மூலம் கல்வி வளர்கிறது.

முதல் மூன்று ஈஸ்வரங்கள் பற்றிக் கூறினோம். மேற்கொண்டு அடுத்து இரண்டு ஈஸ்வரங்கள் பற்றி நோக்குவாம். மேற்கில் உள்ள சிலாபப் பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேஸ்வரம் மிகவும் தொன்மை வாய்ந்த ஆலயமாகத் திகழ்கிறது. மாயவனாறு தீர்த்த வாரியாக உடைய தேவஸ்தானம் மூர்த்தி தலம் தீர்த்தம் விருட்சம் ஆகிய சிறப்புக்கள் உடையதாகத் திகழ்கிறது. ஜாதி, இன, மத வேறுபாடுகளின்றி யாவரும் வழிபடும் தலமாகவுள்ளது. சமய பீடங்கள் அறுபத்து நான்கில் இதுவும் ஒன்று. வழிபடும் பக்தரும் தேங்காய் வியாபாரிகளும் வாசலில் தேங்காய் உடைத்து வழிப்பட்டுச் செல்வர். ஆகம நெறிமுறை தவறாது அபிடேக ஆராதனை மற்றும் விழாக்கள் நடைபெறுகின்றன. விழாக் காலங்களில் ஈஸ்வரன் ஈஸ்வரியுடன் வீதிவலம் வரும்போது 63 நாயன்மார்களின் சிலைகள் முன்னாகக் கொண்டு செல்லப்படுதலும் பின்னாக அடியவர் பஜனை செய்வதும் விசேட அம்சமாகும்.

அடுத்துத் தென் மாகாணத்தில் "டொண்டிறா" என்ற பிரதேசத்திலமைந்துள்ள தொண்டீஸ்வரம் மிகவும் பிரபல்யமானது. முழுவதும் சிங்களவர் நிறைந்துள்ள இடம் ஆகையால் அவர்களே பூசை வழிபாடுகள் ஆற்றுகின்றனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் உள்ள சிவாலயங்கள் பற்றி நோக்குவோம். இங்கு நல்லூர் சிவன் கோவில், வண்ணை வைத்தீஸ்வர ஆலயம், திருநெல்வேலி சிவன் கோவில், பரமேஸ்வரன் கோவில், கொழும்புத்துறை யோகர் சுவாமிகளது சிவன், ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் காரைநகர் சிவன், இருபாலை சிவன், சுன்னாகம் கதிரமலைச் சிவன், புத்தூர் சோமாஸ்கந்த சிவன், ஆவரங்கால் நடராச ராமலிங்க சிவன், வல்வெட்டித்துறைச் சிவன் என்பவை குறிப்பிடக் கூடியவையாகும்.

இவற்றுள் நல்லூர் சிவன் கோவில் கூழங்கை ஆரிய சக்கரவர்த்தி இந்தியாவில் இருந்து சிலை தருவித்துப் பிரதிட்டை செய்யப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. மூர்த்தி தலம் தீர்த்தம் விருட்சம் ஆகிய விசேடங்கள் கொண்ட தொன்மை வாய்ந்த தேவஸ்தானம். "வேண்டுவார் வேண்டுவதை" ஈய்ந்து நல் அருள் பாலிக்கும் அற்புதம் நிறைந்த ஆலயம். அங்கு விழாக்கள் விரதங்கள் யாவும்

*அறிவின்மை இழிவானது. அதைவிட இழிவு அறியமனமில்லாமை.*

ஒழுங்காக நடக்கின்றன. கோவிலின் அருகே நல்லை ஆதீனம் நிறுவப்பட்டு அருள் பொழிகிறது.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் செட்டிமாரது நிவந்தமாக அமைந்ததாகும். நாவலர் பெருமான் பிரசங்கமும் புராணபடனமும் நிகழ்த்தியுள்ள தலமாகும். மூர்த்தி தலம் தீர்த்தம் விருட்சம் ஆகிய சிறப்புக்களும் நிறைந்து அருள்பாலிக்கும் தலத்தில் சகல விழாக்களும் விரத நியமங்களும் ஆகம நெறிமுறை தவறாது நடத்தப்படுகின்றன. ஊரவர் திரளாக வந்து வழிபடுவது கண்கூடு.

சேர். பொன் இராமநாதன் அவர்களால் அமைக்கப்பட்ட பரமேஸ்வரக் கல்லூரியின் பரமேஸ்வரன் கோவில் தற்போது பல்கலைக்கழகத்தோடு இணைக்கப் பெற்று உள்ளதால் அங்கு பயிலும் சைவ மாணவர் வழிபாடாற்றிப் பயனடைகின்றனர். இவர் வேண்டுவார்க்கு அருள்பவர்.

யாழ்ப்பாண ஆட்சியரான பறங்கியர் தமது உணவுக்கு வீட்டுக்கொரு பசு தர வேண்டுமென்று கட்டளையிட்டனர். அவரது தண்டனைக்குப் பயந்து மக்கள் கோமாதாவை அனுப்பி வந்தனர்.

இந்நிலையில் திருநெல்வேலி சிவன் கோவிலருகில் வாழ்ந்த ஞானப்பிரகாசர் எனும் சிவநெறியாளர் தமது ஒரேயொரு பாற்பசுவையும் பால்குடிக் கன்றினையும் அனுப்ப வருந்தி முதல் நாளிரவு பசுவுடன் கன்றையும் கோவில் வீதியில் விட்டுப் படகு மூலம் தமிழகத்தை அடைந்து திருவாவடுதுறை ஆதீன சுவாமிகளிடம் ஞானதீட்சை பெற்று ஞானப்பிரகாச சுவாமிகளானார் என்பது வரலாறு. இங்கு அரிய உபதேசங்களையும் அரும் பெரும் நூல்களையும் கற்றுப் பெரும் புலமையாளரானார். பசு வராமை கண்டு கோபமுற்ற பறங்கி உதவியாளை அனுப்ப அவன் சென்று வீட்டில் எவருமில்லாமை கண்டு ஏமாற்றிவிட்டான் என்று சினந்து திரும்ப, கோவிலுக்குள் பசு கதறும் சத்தம் கேட்டு அதனைப் பிடிக்கப் பறங்கி ஓடினான். வேற்றாளைக் கண்டு மிரண்ட பசு தனது கொம்பினால் பறங்கியின் வயிற்றைக் குத்திக் கிழித்தது. இவ்வதிசயம் கண்ட மக்கள் ஆச்சரியமுற்றனர். மாடு பிடிக்க நுழைந்த பறங்கி "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என ஓடியதாக ஐதீகம்.

ஈழத்துச் சிதம்பரம் என யாவராலும் போற்றப்படும் காரைநகர் சிவன் விசேட தலமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஆகிய விசேடமுடையது. காரைநகர் முழுமையும் சைவ சமயத்தவர் மட்டுமே வாழ்வதால் சைவ ஆலயங்கள் பல திகழ்கின்றன. ஈழத்துச் சிதம்பரத்தில் பல நிகழ்வுகள் வருடம் முழுவதும் நடத்தப்படுகின்றன. மார்கழியில் நிகழும் திருவாசக விழா மணிவாசகர் மணிமண்டபத்தில் நடைபெறும் பெருவிழாவில் மண்டபம் அடங்காத மக்கள் மத்தியில் உள்ளூரிலும் தமிழகத்திலுமிருந்தும் கலந்து கொண்டவர்களின் சொற்பொழிவுகள் செவி நுகர்கனிகளாகும். விழா முடிவில் படைக்கும் அன்னம் தேவாமிர்தம்.

சுன்னாகம் பதியமர்ந்த கதிரைமலைச் சிவன் ஆலயம் மூர்த்தி தலம் தீர்த்தம் விருட்சமாகிய சிறப்புக்களுடையது. கோவில்களில் நடைபெறும் நிகழ்வுகள் யாவும் இங்கும் நடைபெற்று வருவது கண்கூடு.

கொழும்புத்துறையிலே தவத்திரு யோகர் சுவாமிகள் வழிபாட்டின் பொருட்டு வைத்திருந்த சிவலிங்கத்தில் உண்டான ஓம்! எனும் ஒலி ஹவாய் தீவில் இருந்த சுப்பிரமுனிய சுவாமிகளின் செவியில் நுழைய அவரும் சீடர்களும் யோகர் சுவாமிகளது சீடர்கள் ஆகினர் என்பது வரலாறு. நல்லூரை இராசதானியாகக் கொண்டு யாழ்ப்பாணம்

*பார்வை நேராக இருந்தால் பாதையில் தடையிருக்காது.*

முழுவதும் அரசாண்டவன் சங்கிலி மன்னன். தனது பாதுகாப்பின் பொருட்டும் வழிபாட்டுக் காகவும் கோப்பாய் கிராமத்தின் இருபாலை கிழக்கில் கொடிக்காட்டு மூலையில் சிவன் கோவில் அமைப்பித்தான். பூஜைக்காகத் தனக்கு நம்பிக்கையான சுப்பையாக் குருக் களை நியமித்தான். காலை மாலை வேளை களில் கோப்பாய் வயல்வெளியூடாகச் சென்று பூஜை நியமங்களைச் செய்து வந்ததாக வரலாறு. மன்னன் தனது பேராயுதங்களை முனியப்பர் கோவிலிலும் வீரபத்திர கோவில் அருகிலுள்ள வன்னிமரப் பொந்திலும் ஒழித்து வைத்திருந்ததாக ஐதீகம்.

புத்தூரில் மழவராய முதலியின் நிவந்தமாக அமைந்துள்ளது சோமாஸ்கந்த ஆலயம். இது அருகிலமைந்துள்ள கல்லூரி மாணவ மாணவியரின் வழிபடு தலமாகவும் உள்ளது. சோமாஸ்கந்தன் என்பது முருகன், தாய் தந்தையர் நடுவில் அமரும் சிறப்புடை யது. சூழவுள்ள பெற்றாரும் பிள்ளைகளும் இணைந்து விழாக்காலங்களில் நிகழ்த்தும் பஜனை வழிபாடுகள் மிகவும் சிறப்பானவை. இது பல அற்புதம் நிகழ்த்திய தலமாகும். ஆலயத்துக்குரிய மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் ஆகிய சிறப்புள்ளது.

ஆவரங்கால் நடராச இராமலிங்கர் ஆலயம் அதே பெயர் கொண்ட இருவராலும் கட்டப்பட்டதாக ஐதீகம். வருடாந்த நிகழ்வு கள் யாவும் வெகுசிறப்பாக நடைபெறுகின் றது. பெற்றோரும் பிள்ளைகளும் பஜனை வழிபாடுகளில் பங்குகொண்டு நல்லொழுக்க சீலராக வளம் பெற்றுள்ளனர். கோவில்களில் நடைபெறும் அனைத்து விழாக்களிலும் மக் கள் கலந்து இன்புறுவது கண்கூடு. இக் கோவில் அறங்காவலர் ஆதரவு பெற்ற சிவ நெறியாளர் ஆளுகையிலுள்ளது.

வல்வெட்டித்துறையின் சிவனாலயம் கடல் வணிகரின் காவல் தெய்வமாகவும் கலங்கரை விளக்காகவும் திகழ்பவராவர். மிகவும் அற்புதமான ஆலயம் அற்புதங்களை விரிக்கில் பெருகும். கோப்பாய் வெள்ளெரு வைப் பிள்ளையார் கோவிலின் ஆதீனகர்த்தா வாரீசுதாரரே இங்கு பூஜை புரிகின்றனர். தற் போது பிரதம குருவாகத் திகழ்பவர் இந்து மத குருமார் ஒன்றியத் தலைவரும் சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் போஷகருமாகிய கிரியா கலாப முத்தாமணி பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்களாவர். கோவில் நிர்வாகத்துக்கெனப் பலம் வாய்ந்த அறங்காவலர் சபை உள்ளது. இங்கு ஆகம நெறிமுறை தவறாது அனைத்து விழாக்களும் விரத நியமங்களும் நடந்து வருவது கண்கூடு.

ஈழநாட்டின் யாழ்ப்பாணம் தவிர்ந்த மறு பாகங்களை நோக்கும்போது சோழப் பேரரசன் இலங்கையைக் கைப்பற்றிப் பொல நறுவையை இராசதானியாக்கிச் சிவன் கோவில் அமைப்பித்து அதற்கு "சோழீச்சரம்" என்று பெயருமிட்டான். இங்கு ஜாதி மத இன வேறுபாடுகளின்றி பொங்கல் பூசை நேர்த்தி வழிபாடுகள் செய்துவருவது கண் கூடு. மூர்த்தி தலம் தீர்த்தம், விருட்சமாகிய சிறப்புடைய தலமாகும்.

சேர். பொன். இராமநாத வள்ளலினால் முழுவதும் கருங்கல்கொண்டு கட்டுவிக்கப் பெற்ற பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் கொழும்பு வாழ் சைவ சமயத்தவரது விசேட வழிபாட்டுத் தலமாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சமாகிய விசேடங்கள் பொருந் திய பரிவார மூர்த்திகள் அடங்கிய தலம் ஆகும். சிவனுக்குரிய சகல விழாக்கள் விர தங்கள் விசேடமாகக் கொண்டாடப்படுகின்றது.

வடகொழும்பு முகத்துவாரம் அருணா சலேஸ்வரர் ஆலயம் வடகொழும்பு இந்து பரிபாலன சபையினரின் ஆளுகையில் உள் ளது. ஈசன் மிக அற்புதமானவர். அங்கு

*நடக்காதவன் கால்களில் சிலந்தி கூடுகட்டும்.*

அடியேன் பலமுறை சமயப்பிரசாரம் செய்துள்ளேன். குருக்களின் பூஜைகள் கிரியைகள் மிக விசேடமானவை. சகல விசேடங்களும் பொருந்தியுள்ளமை கண்கூடு.

மலையகத்தின் தொழிலாளர் வழிபடு தலமாகவுள்ளது இரத்தினபுரி சிவன் கோவில். மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரியது. தெனவக்கைத் தோட்டக்கிளாக்கர் தர்மகர்த்தாவாக இருந்த எனது மைத்துனர் முறையானவர் அமரராக அவரது மக்கள் பரிபாலித்து வருகிறார்கள். தோட்ட மக்கள் மதுவின் பிடியிலிருந்து விடுபட்டு ஆசாரசீலராகக் கோவிலுக்கு பொழுதுபோக்காக வருகை தந்து பஜனை கூட்டு வழிபாடுகளில் பங்குகொண்டும் சைவ சமயநெறி பற்றிய அறிஞர்களின் பிரசங்கங்களைக் கேட்டும் தம்மை நல்வழிப்படுத்திக் குடும்ப உறவுடன் பிள்ளைகளின் கல்வி மேம்படவும் உழைப்பது கண்கூடு.

அடுத்தபடி தென்மாகாணத்தை நோக்கினால் காலி மகா நகருக்குள் உப்பிலி அப்பன் எனும் பெயரில் ஒரு சிவன் கோவில் அமைக்கப்பட்டுள்ளது. காலியில் வியாபாரம் செய்துவரும் தமிழரும் செட்டிகளும் இணைந்து அமைக்கப்பட்டதாக ஐதீகம். சகல மத இன மக்களும் வழிபடும் தலமாக உள்ளது. மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதாகவுள்ளது. மூர்த்தி தலம் தீர்த்தம் விருட்சம் ஆகிய சிறப்புக்களுடைய அற்புத தலம்.

தெனியாய போன்ற மலைப்பிரதேசங்களின் தொழிலாளரது வழிபாட்டுக்காக அம்மன், சிவன், விநாயகர், முருகன் ஆகிய தெய்வங்கட்குச் சிறு சிறு கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் மதுபோதையினாலும் சமய வழிபாடு குறைந்து காணப்படுகிறது. மாணவர்களை மதமாற்றம் செய்யும் முயற்சி மதுபானம் மூலம் இலகுவாக நடைபெறுகிறது. இவற்றைத் தடுப்பதற்கு அங்கு கற்பித்து வந்த சைவாசிரிய நண்பனுடன் சேர்ந்து அரும்பாடுபட வேண்டியதாயிற்று. முதலில் மதுவொழிப்பு. மதுபாவனையாளர் கூட்டங்களுக்கு வருவதில்லை. சமூகமளித்த மகளிர்மூலமும் மாணவர் வழியாகவும் குடியின் கொடுமை குடிமனைக்குச் சென்று தலைமகள் செவியில் நுழைந்தது. கோவில்கட்கு வருகை தந்து கூட்டுவழிபாடுகளில் ஈடுபட்டனர். ஈடுபட வைத்தமை இறைவனது அற்புதத் திருவிளையாடலே என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை மதுவுக்குச் செலவான பணம் பிள்ளைகளது கல்விக்குச் செலவாவது கண்டு மகிழ்ந்தோம். ஆசிரியர்களும் இலவச உதவிகளை நிர்வாகத்திடம் பெற்றுதவினார்கள்.

அடுத்து கீழ்மாகாண சிவாலயங்களை நோக்குவோம். தனியூற்று தான்தோன்றி ஈஸ்வர ஆலயம் அற்புதமானதாகும். சுயம்பு லிங்கமாக வெளிப்பட்டமையே சிறப்புக்குரிய முக்கிய காரணமென்பர். காலத்தால் முந்திய கோவிலின் வரலாற்றின்மூலம் பல அதிசய செய்திகளை அறியமுடிகிறது என ஊரவர் கூறுவர். மூர்த்தி தலம் தீர்த்தம் விருட்சமாகிய சிறப்புக்களை உடைய தலம் ஆகம நெறிமுறை தவறாது நடைபெறுகிறது. ஈஸ்வரனுக்குரிய விரததின விழாக்களில் அபிடேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. மக்கள் முறையாக விரதமனுட்டித்து வாழ்வும் வளமும் பெற்று வன்முறையகற்றி வாழ்கின்றனர். சிறுவர் சிறுமியரும் ஆலய வழிபாடு பஜனை கூட்டு வழிபாடுகளில் ஈடுபட்டும் பிரசங்கம் புராண படனம் ஆகியவை கேட்டு நல்வழிபட்டுக் கல்வியில் சிறந்து விளங்கிவருகின்றனர்.

கொக்கட்டிச்சோலை மாமாங்க ஈஸ்வரன் ஆலயம் கொண்டல் மரச்சோலை சூழ்ந்த தலமாகும். வழிபடுவோரின் வினைகளை நீக்கி நல்லருள் பாலிக்கும் தலம்.

தம்பலகாமத்தில் அமைந்துள்ள இராவண ஈஸ்வரம். சுவையான வரலாறுடையது. இராவணனின் தாய் தினமும் காலைக் கடன் முடித்து நீராடி ஆசாரசீலராய் வெண் மணல் எடுத்துச் சிவலிங்கம் அமைத்துப் பூசை வழிபாடு செய்து திருமுறை ஓதி நைவேத்தியம் படைத்து தூபதீபம் காட்டி முடிவில் ஓடும் கங்கையில் சேர்த்த பின்பே உணவு உண்டு மறு கருமங்களைக் கவனிப்பது வழக்கம். சிவலிங்கங்களைச் சுமந்து சென்ற காரணமாக நதி மகாலிங்க கங்கை எனப் பெயர் பெற்றிருந்ததென ஆய்வாளர் கூறினர். மகாலிங்க கங்கை என்பது மருவி மகாவலி கங்கை ஆயிற்று என்பது வரலாறு.

தாயாரது கஷ்டநிலை கண்டு கவலை கொண்ட மகனாகிய இராவணன் கைலையங் கிரியையே பெயர்த்து வந்து தாய்முன் வைத்துவிட்டால் அவரது வழிபாடு சீக்கிரம் முடியும் என்றெண்ணிக் கைலைக்குச் சென்றவன் சிவனை நினையாது தனது புயபல பராக்கிரமத்தை முற்றுமுழுதாக நம்பி மலையைப் பெயர்த்தான். அதன் அசைவில் பயந்த பார்வதியம்மை சிவனைக் கட்டி அணைக்க அஞ்சாதே! அவன் எனது அன்பன். சிறிது விளையாட்டுக் காட்டுகிறேன் பார் என்று கூறித் தனது காற்பெரு விரலினால் சிறிது நெரிக்க நெரிபட்டவன் கதறினான்.

இராவணன் தனது கையிலிருந்து நரம்புகளை எடுத்து வீணையாக்கி இனிய சாமவேத கீதம் இசைத்தான். அதுகேட்டு மகிழ்ந்த பார்வதி பரமேஸ்வரன் அவன் முன் தோன்றி வழிபாட்டுக்காக ஒருசிறிய சிவலிங்கமும் ஒரு வாளும் கொடுத்து அனுப்பியதோடு வீடு செல்லும்வரை "லிங்கத்தை நிலத்தில் வைக்கக்கூடாது" என்னும் நிபந்தனையும் விதித்து அனுப்பி வைத்து மறைந்தருளினார்.

மிக்க மகிழ்ச்சியுடன் சிவலிங்கம் பெற்றுக்கொண்டு வந்த இராவணன் தம்பல காமம் வருமிடத்து அவசரமாகச் சிறுநீர் கழிக்க வந்ததால் அங்கு நின்ற சிறுவனிடம் "தம்பீ" இதைச் சிறிது நேரம் வைத்திரு தரையில் வைத்துவிடாதே. சிறுநீர் கழித்து வருகிறேன்" என்றவனிடம் வாங்கிய சிறுவன் "மிகவும் கனக்குது. விரைவில் வந்து வாங் காட்டித் தரையில் வைத்து விடுவேன்" என்றவன் கொடுத்தவன் சற்று மறைய லிங்கத்தை வைத்துவிட்டு ஓடினான். அவன் விரைந்து வந்து பார்க்க லிங்கம் தரையிலிருப்பது கண்டு பதறி அதை எடுக்க முயன்றான். எடுபடாமையால் அவ்விடத்தில் தலம் அமைத்து "இராவனேஸ்வரம்" மக்களின் வழிபாட்டுக்கு வகை செய்தான். மூர்த்தி தலம், தீர்த்தம், விருட்ச விசேட தலத்தில் ஜாதி, இன, மத வேறுபாடின்றி யாவரும் இணைந்து பொங்கல் பூசை வழிபாடுகளாற்றி வருவது கண்கூடு. இங்கு சர்க்கரைக்குப் பதில் கரும்பம் சாறு விட்டுப் பொங்குதல் விசேட அம்சமாகும். மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதாகவுள்ள அற்புத ஆலயம். விழாக்கள் விரத காலங்களில் வழிபடுவோர் நோய் நொடியகன்று ஒழுக்க சீலராக வாழ்வதுண்மை.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்  
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்  
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்  
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மா நிலத்தே"

(தொடர்ச்சி...

# மண்டூர்க் கந்தசுவாமி கோயில்

-திரு மூ.சிவலிங்கம் அவர்கள்-

## மண்டூர் கந்தசுவாமி கோயிலின் இன்றைய தோற்றம்

மண்டூர் தில்லை மரத்தில் தங்க வேல் அமைந்தபோது தெற்கு நோக்கியே அமைந்ததில் பல அற்புதங்களை அறியலாம். தெற்கு நோக்கியமை இயம கண்டத்திலிருந்த மக்களைக் காப்பதற்கென்றும் கூறுவர். கதிர்காமத்தை நோக்கினார் என்றும் கூறுவர். அவரின் சித்தப்படி எவரும் காணாதபடி மறைவிலிருந்தே அருவமாக அருளாட்சி செய்கிறார்.

இதற்கமைவாக பிற்காலத்தில் முருகனின் தடையேதுமின்றி இன்றைய கட்டுமானம் ஆயிரமாண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது. முன் பக்கம் குகைக்கோயில் வடிவில் அமைந்துள்ளது. வெளியே அடைப்புகளோ கதவுகளோ இல்லை. நடுவே சுவாமி போய் வரும் பாதை விட்டு இருபுறமும் ஓரடி உயரமான திண்ணை பத்தடிக்கு மேலாக இருபுறமும் அமைந்துள்ளன. இதனை வெளி மண்டபமென அழைப்பர். வாசலால் வடக்கே சென்றால் நேரே கருவறையுடனமைந்த மண்டபம் தெரிகிறது.

தங்கவேல் தங்கியமைந்த தில்லை மரம் ஆயிரம் வருடங்களுக்கு முன் கட்டடமாக அமைக்கப்பட்டபோது முருகப் பெருமானின் அருட் சித்தப்படி வேல் தங்கிய மட்டத்தில் மேற்புறம் அகற்றப்பட்டு யாவும் எவரும் காணாதவாறு மூடிக்கட்டப்பட்டுள்ளது. பூசை செய்யும் கப்புகனார் மட்டும் உட்சென்று பச்சரிசியால் தயாரிக்கப்பட்ட திருஅமுது மற்றும் தேன் வதை, பழவகைகளை கருவறையில் வைத்துப் பூசை செய்ததும் வெளியே வருவார். கருவறையுடன் அமைந்த சிறு மண்டபம் வேறொருவரும் உட்செல்லாதவாறு அமைத்து வாசலில் திரைச்சீலை மறைத்திருக்கும். இத்திரைச்சீலையில் விநாயகரும் வள்ளி தேவசேனா உடனமர்ந்து ஆறுமுகப்பெருமான் தமது மயில்மீது காட்சி தருகிறார்.

பூசை வேளைகளில் இத்திரைச்சீலையில் அமைந்துள்ள ஆறுமுகப் பெருமானுக்கே உரிய பூசை நடைபெறுகிறது. இப்பூசை மண்டபம் சற்று விசாலமாக அமைந்துள்ளது. இதனைச் சந்தன மண்டபமென்பர். இம்மண்டபத்தில் பூசை வழிபாட்டிற்குரிய சகல தீபங்கள் மற்றும் சகல தளபாடங்களும் வைக்கப்பட்டுள்ளன. பெருவிழாக் காலத்தில் சுவாமி வெளிவருவதற்கென நடுத்தர உயரங்கொண்ட ஏடகத்தின் அமைப்பில் அழகிய சித்திர வேலைப்பாடுகளுடனமைந்த ஊர்தி உள்ளது. இதனை அவ்வூரில் தேர் என அழைப்பர். மற்றும் பூசைகள் விழாக்களுக்குரிய அத்தியாவசியப் பொருட்களும் வைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தினுள் பூசை செய்யும் கப்புகனார் மற்றும் உதவியாட்கள் ஆலய நிர்வாகப் பணியாளர் தவிர வேறெவரும் அனுமதிக்கப்படுவதில்லை. இம்மண்டபத்தினுள் கிழக்கில் வெளியேயுள்ள தீர்த்தக் கிணற்றுக்குச் சென்று வருவதற்காக வாசல் அமைக்கப்பட்டுள்ளது. தெற்கிலும் அகலமான பாதையும் வாசற் கதவும் அமைந்துள்ளது.

இதன் முன்னால் தவில் மண்டபம் அமைந்துள்ளது. இதனுள் பூசை வேளை

*இறைக்க ஊறும் மணற்கேணி, ஈயப் பெருகும் செல்வம்.*

அடிக்கப்படும் இரு மேளங்கள் சுவரில் மாட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும். கோயிலார் என்னும் பணியாளர் பூசை நேரத்தில் தவில் அடிக்கும் பணி செய்வார். எதிர்த்திசையில் ஐந்து சுற்று மணிகள் கொண்ட மணியும் அமைந்துள்ளது. இம்மணிகள் பூசை நேரங்களில் ஒலித்துப் பூசைக்கு அணி செய்யும். இம்மண்டபத்திலும் எவரும் அணுகுவதில்லை. இம்மண்டபத்தின் முன்பாக கிழக்கு மேற்கு நோக்கிய நீண்ட மண்டபம் அமைந்துள்ளது. மேற்கூறிய மண்டபங்களை மூடியவாறு உள் வீதியாக அமைந்துள்ளது. இம்முன் மண்டபம் வழிபடுவோரின் வசதிக்காக வெண் மணல் பரவப்பட்டுள்ளது. உள்வீதியின் மேற்கில் விநாயகர் சந்நிதி அமைந்துள்ளது. அருகே விநாயகர் முருகன் வீதியுலாவரும் எலி மற்றும் மயில் வாகனங்கள் பாதுகாக்கப்படுகிறது.

உள்வீதியின் வடமேல் மூலையில் கப்புகனார் முருகனுக்கு திருவமுது பொங்கும் இடம் யாரும் காணாதபடி நன்கு மூடி அடைக்கப்பட்டுள்ளது. அங்கு கப்புகனார் மட்டும் செல்லலாம். இவ்வாலயத்தின் வடகிழக்கு வீதியில் குமாரத் தம்பிரான் சந்நிதி அமைந்துள்ளது. பூசை மண்டபத்தின் நேரே கிழக்கு வீதியில் புனிதமான தீர்த்தக்கிணறு அமைந்துள்ளது. இக்கிணற்று நீர் ஆலய பூசைக் கருமங்களுக்கு மட்டும் உபயோகப்படுகிறது. வேறெவருக்கும் அனுமதியில்லை. உள்வீதியில் வடகிழக்கில் வைரவர் மற்றும் நாகதம்பிரான் சந்நிதியும் அமைந்துள்ளன. மேலும் உள்வீதியில் எட்டுத் திசையிலும் வள்ளியின் சகோதரர்களான வேடர் எட்டுப் பேர் காவலர்களாக எண்ணி இரண்டடி உயரங் கொண்ட எட்டு பலிபீடக் கற்கள் அமைக்கப்பட்டுள்ளன. பூசை ஒழுங்கில் இக்கற்களிலும் பூசைகள் நடைபெறும் இதனைப் பின்னர் அறிவோம்.

மேற்கூறிய விபரங்கள் யாவும் கருவறை முதல் ஆலய மண்டபங்கள் உள் வீதியிலமைந்த சந்நிதிகள் பற்றி அறிந்தோம்.

## மண்டூர் கந்தசுவாமி கோயில் அமைப்பில் வெளிவீதி

மண்டூர் கந்தசுவாமி கோயிலின் சிறிய அமைப்பிற்கேற்ப உள்வீதி சிறியதாக அமைந்தபோதும் வெளிவீதி நன்கு விசாலமாக அமைந்துள்ளது. ஆலய முன் வாசல் தெற்கில் வழிபடுவோரின் வசதிக்கேற்ப போதியளவு வீதி அமைந்துள்ளது. தெற்கே மட்டுவாவி சிறுதொலைவில் உள்ளது. ஆலயத்தின் முன்புறமாக பல்லின மரங்கள் வளர்ந்து நிழல் தருகின்றன. இவற்றுள் தில்லை மரங்கள் முன்பு போலன்றி அருகி வருகின்றன. முன் பக்கத்தில் பல தில்லை மரங்களைப் பெரியதும் சிறியதுமாகக் காண முடிகின்றன.

வெளிவீதியில் தென்மேல் திசையில் வள்ளியம்மன் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. கிழக்கு வீதியில் தெய்வானை அம்மன் சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. வள்ளி அம்மன் சந்நிதிக்கருகே வீதியில் வெளிவீதி வரும் சுவாமி அமர்ந்துவரும் வாகனபீடம் தரித்து நிற்கவென இரண்டடி உயரத்தில் அமைந்த கட்டுமானம் உள்ளது. மேற்கு வீதியில் மடங்களும் தண்ணீர் எடுக்கும் கிணறும் அமைந்துள்ளன. வடக்கில் ஆலய வளாகத்தின் வடக்கெல்லையில் ஆலய வரவேற்பு வளைவு அமைந்துள்ளது. இப்பாதை மண்டூர் நெடுஞ்சாலையுடன் இணைகிறது. இப்பாதையே இவ்வாலயத்தின் பிரதான பாதையாகும். ஆலய வளாகத்திற்கப்பால் புனிதமான குடியிருப்பு வீடுகள் அமைந்து உள்ளன. நான்கு வீதியும் இருபதிற்கும் மேற்பட்ட வாகை, இலுப்பை, வேம்பு, வம்மி, அரசு, தில்லை போன்ற தெய்வீக சக்தி

*குறிக்கோள் உடைய வாழ்வே நல்வாழ்வு.*

உடைய பல்லின நிழல் தரும் மரங்கள் அமைந்தமை முருகனின் பழமுதிர்சோலையை நினைவூட்டுகின்றன.

## மண்டூர் கந்தசுவாமி கோயிலின் அற்புதங்கள்

இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில் சைவ சமயச் சிறப்பால் ஆலயங்கள் முக்கிய பங்கை வகித்தன. இதனால் சைவ சமயம் பிரகாசித்தது. இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் தமது மத வளர்ச்சிக்காக சைவ ஆலயங்களை இடித்தழித்து எமது சமயத்திற்கு இடையூறு நடந்தவேளை மண்டூர் முருகனாலயத்தையும் அழிக்கும் நோக்கில் (17ஆம் நூற்றாண்டு) போர்த்துக்கேயப் படை துவக்குகள், நெடிய வாள்களுடன் படை பட்டாளமாக முன்னேறினார்கள்.

மூவுலகையும் அழித்த சூரனையும் படைகளையும் சம்காரம் செய்த முருகனுக்கு போர்த்துக்கேயரின் படை எம்மாத்திரம். மண்டூர் முருகன் தான் முன் செல்லாது தமது படைவீரர்களைக் கருங்குளவி வடிவில் அனுப்பி வைத்தார். புற்றீசல் புற்றிலிருந்து புறப்படும் வேகத்தில் கருங்குளவிகள் பல்லாயிரக்கணக்கில் வந்து பறங்கிப் படைகளைக் கொட்டித் துன்புறுத்தின. குளவிகளின் கொடுமை தாங்காத யாவரும் துவக்கு, வாள் ஆகிய ஆயுதங்களுடன் வந்தவர்கள் தமது உயிர் தப்பினாற் போதுமென்ற அழிவுறு நிலையில் ஒரு நெடிய துவக்கையும் நாலடி நீளமும் ஒன்றரை அங்குல அகலமுங் கொண்ட அதியுயர் சிறப்பான உருக்கினால் ஆன நெடிய வாளையும் (உறையுடன்) தவற விட்டுச் சென்றனர்.

கூலிப்படைப் படையினருக்கஞ்சி ஓடி மறைந்த மண்டூர் மக்கள் திரும்ப வந்தபோது அவ்விடத்திற் கண்ட நெடிய துவக்கையும் வாளையும் எடுத்து ஆலயத்தில் வைத்துக் கொண்டனர். தமக்கு இடையூறு தரவந்த ஐரோப்பிய படையினர் மண்டூருக்கு வந்ததையும் அவர்களுக்கு முருகப் பெருமான் தந்த தண்டனைக்கான நினைவுச் சின்னத்தையும் இவ்வாலயத்தின் அதி அற்புதமான பேரருளையும் வியக்காதாரில்லை. இவ்விரு ஆயுதங்களும் மண்டூர் கந்தசுவாமி கோயிலின் கருவறைக்கு முன்னாலுள்ள பிரத்தியேக மண்டபத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கின்றனர். பல நூற்றாண்டுகள் கடந்தும் இவ்விரு ஆயுதங்களும் இன்றுவரை பழுதடையாமல் இருக்கிறது. இவ்வாலய தரிசனையின்போது அவ்வூர்ப் பெரியார்கள் ஆலய வரலாற்றுத் தகவல்களுடன் இவ்விரு ஆயுதங்களையும் காண்பித்தனர். எம்பெருமானின் கருணையை நேரிற் கண்ட பேறு எனது 85ஆம் வயதில் எமக்குக் கிடைத்தது.

## இவ்வாலயத்தின் இரண்டாவது அற்புதத்தையும் அறிவோம்

மண்டூர கந்தசுவாமி கோயில் பெருவிழாக்காலத் தீர்த்தத் திருவிழா வருடா வருடம் ஆவணி மாத பூரணை தினத்தன்று நடைபெறும். இவ்வாலயத்தில் முருகப் பெருமான் வீதியுலா வரும்போது வள்ளியம்மன் சந்நிதியில் தங்கிப் பூசைகளை ஏற்ற பின்பே உலாதொடரும். தொடர்ந்து தெய்வானை அம்மன் ஆலயத்தை நோக்காது செல்வது தெய்வானை அம்மனுக்குக் கோபத்தை ஊட்டும் பெருவிழாக்காலம் முழுவதுமன்றித் தீர்த்த விழா வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம்.

வீதியுலாவரும்போது வேடரொருவர் (இன்று உடை நடை பாவனை மாறினாலும்) அன்றைய வேட்டைக்குச் செல்லும் கோலத்தில் கையில் வில், அம்பை ஏந்திய வண்ணம் காவல்காரனாக சுவாமி ஊர்வலத்தின் முன் செல்வார். அதே சமயம் சிறு பெண்கள்

*படிக்கும் பழக்கம் ஒரு மனிதனை முழுமைபெறச் செய்யும்.*

ஆராத்தித் தீபமேந்தி முன் செல்வர். இவ்வாறு பல சீர்வரிசைகளுடன் முருகப் பெருமானின் ஊர்வலம் வீதிவழியே செல்லும் இவ்வூர்வலம் தெய்வானை அம்மனின் சந்நிதியைக் கடக்கும்போது வில்லேந்திய வேடனும், ஆராத்திப் பெண்களும் மயக்கமுற்று வீழ்வர். அச்சமயம் உடன் நிற்போர் மயங்கி வீழ்ந்த யாவரையும் தூக்கிச் சென்று வள்ளி அம்மன் சந்நிதியில் தங்கவைப்பர். சில மணிநேரத்தில் முருகப்பெருமானுடன் வள்ளி அம்மனும் காட்டும் கருணையினால் மயக்கம் தீர்ந்தெழுவர். இவ்வற்புதம் வருடா வருடம் பெருவிழாக்கால தீர்த்தத் திருவிழாவிலும் நடைபெறுவதை அறியலாம்.

தொடரும்...

## பொங்கு கடலூடறுக்கும் தொண்டைமானாற்றுப் புனிதவேல்



அறிவு போலடர்ந்தெழுந்த வறியாமைப் பெருவலிப்பிடியால் யாமே
சிறியேனாய்ச் செயலற்று என்னகப் பிரமஞ்சிந்தித்து மிகத்துன்புற்று
மறியுமாபவக்கடலின் மறியாமைக் கரைபுரண்டெழுந்து மாற்றா
நெறியித்ாமெனக் காட்டிநின் மலனின்திருவடியின் வேலேபோற்றி!

அடியேனாயளவன்றி ஆச்சிரமத் தொண்டுற்றுவுளங்கனியும் மோகனசுவாமிபோல்
படியிலா நெடும்பணிப்பொருளும் பதியவரும் அவர் நெடுங்கருணையீகையும்
நெடியேனார்க்கு நின்னொடுயர்வெய்தயின் மலமாய்யன்றும் நிலையிலாவுவமைகாட்டி
முடிவிலாப்பதஞ் சேரமுன்னிலையான செல்வச்சந்நிதியானே போற்றி!

இருள்முழ்குகண்ணின் மலகேவலத்தினிதமின்றிநின்ற எமக்கென்றும்
குருவாதிமுன்று முனமுய்த்தவற்றினுளதாம் மெய்ஞான மோகனசுவாமியுளமாய் நின்று
இருவேறுகன்ம மாயைப்பசியை நீத்துமிறையோனான சந்நிதிவேலால் சமிக்ஞை செய்ய
பெருமாயை மலந்நீத்த திருமேனி கொண்டவடியார் விழிகாணசந்நிதி வேலன்வருவார்!

யோகத்தினாலும் முணரப்படாதபுன்திருமேனி ஞானயோகத்தினாலெமை
பாவத்தினால் ஒன்றுந்தரியாது நின்று பாதங்காட்டிய சதுர்முக வேலே!
பேதத்தினால் ஒளிப்பயனுந் துறக்கமெளியேற்கு நல்குந் தானமிதமாகச் செய்தவேல்!
போகத்தில் மல்காவிடரின்றி நம்மை புகழோடுஆளும் சந்நிதியானே!

முன்னேயெமக்கு மறையோனான மோகனதாஸ் மொழிகின்ற தானசாரமந்திரத்தை நினை!
என்னாதரத்திலும் பாங்காயமர்ந்தவாற்றிடை மந்திரவேலோங்க பதம்காட்டுவதும் மோகனதாசிடத்தே!
என்றும் போதங்கடந்து துரியங்கடந்து மலபாசம் கொள்ளும்நாமேயென்றும் ஆற்றிடையானையணுக அணைத்திடும் கரமே
நின்ற வேதங்கடந்து திருமேனி காணாத்துயருற்றுளரும் போகிகள் சேர்வதும் எந்நிதி தரும் சந்நிதிவேலே!

இசையால் இறைவன்புகன்றவரமும் சிறக்க இடரின்றி நாளும் அடியார்தானம் பகிர்ந்தார் மயில்வாகனனே!
நிறையக் கொடுத்து மலரப்புசிக்க தொண்டர் குழாத்துள் நின்றார் மோகனதாஸ் சுவாமிகள்!
குறைவுபடாது மந்திரதானம் மலரப்புசிப்பீரெனச் சாத்வீகமாக ஆச்சிரமவேலினை பூஜித்துக் கொள்வார்!
நிறைவானவருளால் விளங்கும் ஒளியாகியெங்கும் அசைவுறாத் தொண்டரடியார் ஞானமே சந்நிதி வேலன்!

-க. தெய்வேந்திரம்-

எவன் துணிகின்றானோ அவன் வெல்கின்றான்.

# சிவபெருமான் சோதிப் பிழம்பாய் வெளிப்பட்டு நின்ற தலம் திருவண்ணாமலை

-திரு காரை எம்.பீ. அருளானந்தன் அவர்கள்-

பஞ்சபூதத் தலங்களுள் மணிபூரகத் தலம் எனவும், சிவபெருமான் சோதிப் பிழம்பாய் வெளிப்பட்டு நின்ற தலம் எனவும் திருவண்ணாமலை பெரிதும் புகழப்படும் திருத்தலமாகும்.

திருவண்ணாமலையை அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர் என்னும் சைவ சமய குரவர்கள் தமது திருப்பாடல்களில் போற்றித் துதித்துள்ளனர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் இத்தலத்திலே தோன்றி வாழ்ந்து அருள் பெற்று விளங்கியவராவர். குகை நமச்சிவாயர், குரு நமச்சிவாயர் முதலிய அருட்பெருஞ் சான்றோர்களும் இங்கு வாழ்ந்து இத் தலத்தைப் போற்றியிருக்கின்றனர். இங்கு ஈசானிய மடம் என்பது அமைந்து சிறந்து விளங்கி வருகின்றது. குன்றக்குடி ஆதீனத்தில் முதற்பெரும் குரவராகிய தெய்வ சிகாமணி தேசிகர் இந்தத் தலத்திலேயே தோன்றியவராவர்.

மேலைநாட்டுப் பேரறிஞர்கள் பலரும் வியந்து போற்றி மகிழ்ந்த சிறப்புடையவராகிய ஸ்ரீ ரமண மகரிஷி அவர்கள் வாழ்ந்து அமைத்த ரமணாசிரமும் இத்தலத்திற்கு ஒரு பெரும் சிறப்பை அளிப்பதாகத் திகழ்ந்து வருகின்றது.

இத்தலத்திலே மொத்தம் 360 தீர்த்தங்களும், 400 இலிங்கங்களும் உள்ளன என்பர். திருவண்ணாமலையின் தன்னிகரற்ற பெருஞ் சிறப்பினை நம் சமயச் சான்றோர்கள் பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். பிறக்க முத்தி தருவது திருவாரூர், தரிசிக்க முத்தி தருவது சிதம்பரம், இறக்க முத்தி தருவது காஞ்சி ஆனால் நினைத்த அளவிலேயே முத்தி தருவது திருவண்ணாமலை என்பது நம் பண்டைப் பெரியோர்களின் நம்பிக்கை.

துலக்கற அறிந்து பிறக்கும் ஆரூரும்
துயர்ந்திடாது அடைந்துகாண் மன்றும்
உவப்புடன் நிலைத்து மரிக்கும் ஓர் பதியும்
ஒக்குமோ நினைக்கும் நின் நகரை?"

என திருவண்ணாமலையின் சிறப்பினைத் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திறந்தெரிந்து புகழ்ந்து பாடித் துதித்து மகிழ்ந்துள்ளார்.

திருவண்ணாமலைக் குன்றின் சிகரத்திற் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் சுடரானது புற இருளை மட்டுமேயன்றி, அதனைக் கண்டு வழிபடும் அன்பர்களின் அக இருள் ஆகிய அறியாமையையும் போக்கி மெய்யுணர்வு ஒளியை நல்கி நலம் புரிந்து விளங்குகின்றது.

கார்த்திகை மாதத்தில் முழுநிலா நாளில் மலையுச்சியின்மீது பேரொளி சுடர் ஏற்றப்படும் இனிய காட்சியானது எவருள்ளத்தையும் கவர்ந்து கொள்ளை கொள்ளும் மாட்சிமை உடையதாகும். மலை உச்சியில் தண்மை மிக்க முழு வெண்ணிலாத் தோன்றித் திகழ்தலும், அதன் அருகே செழுஞ் சுடர்ப் பேரொளி சுடர் விட்டு எரிதலும் கவின் மிகுந்து காண்பவர் உள்ளத்தைக் களிதுளும்பச் செய்யும். திருவிளக்கின் ஒளிச் செழுஞ்சுடர் செந்தாமரை மலரைப் போலவும், அதனை அடுத்து விளங்கும் முழு வெண்ணிலாவின் தோற்றம் அத்தாமரை

*எதிர்பார்ப்பு குறைவாக இருந்தால் ஏமாற்றமும் குறைவாகவே இருக்கும்.*

மலரின் அருகு சென்று அணையும் அழகிய வெள்ளை அன்னம் போலவும் அமைந்து காணப்படுகின்றது.

திருவண்ணாமலைக் கார்த்திகை விளக்கு ஒரு கலங்கரை விளக்குப்போல, உயர்ந்து எரிந்து ஒளிதந்து விளங்குகின்றது. அது பிறவி ஆகிய கடலைக் கடந்து வீடுபேறு ஆகிய கரையினை அடைய விரும்புபவர் வழிதெரியாமையால் ஏற்படும் திகைப்பு நீங்கித் தவவொழுக்கம் ஆகிய கப்பலைச் செலுத்தி உய்யும்படி செய்து உதவுகின்றது.

இத்தகைய பல சிறப்புக்களை உடைய திருவண்ணாமலையையும், அங்கு நிகழும் கார்த்திகை விளக்கீட்டு விழாவினையும் நாம் அனைவரும் அன்புடன் கண்டு வழிபட்டு அண்ணாமலை அண்ணலின் அருள்பெற்று வாழ்வோமாக.

## அருள்மாரி பொழிந்திடவா!

**பல்லவி**

உன்னைத் தினந்தினம் உருகித் தொழுகின்ற
என்னை நீ பாராயோ? ..... முருகா! (உன்னைத்)

**அநுபல்லவி**

கன்னற் தமிழினில் கவிதொடுத் துனைப்பாட
கந்தா வந்தருளாயோ? (உன்னைத்)

**சரணம்**

என்ன குறை செய்தேன்? என் மனங் குளிர்ந்திட
இரங்கி நீ வாராயோ?
சந்நிதி வேலவனே! சங்கரன் பாலனே!
சந்தோசம் தாராயோ? (உன்னைத்)

அருணகிரி நின் புகழை அழகுதமிழில் பாட
அடியெடுத்தே கொடுத்தாய்!
பெருகிடும் துன்பத்தை தீர்த்திடத் தேவர்க்காய்
பெருமானே! போர் புரிந்தாய்!! (உன்னைத்)

அற்புதங்கள் செய்து அடியோர் மனங்களில்
ஆழப் பதிந்த முருகா!, நின்
பொற் பதங்களை வேண்டிப் பூசிக்க, அருள்மாரி
பொழிந்திட வா குமரா! (உன்னைத்)

-கி. குலசேகரன்-

*வறுமையில் இருந்து கவலைப்படாதே, அதிலிருந்து மீளப்பார்.*

# விதி

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

கிடைத்தற்கரியது மானிடப்பிறவி. இது நிஜம். இதுபற்றி மனிதனுக்குப் பெருமை வேறு. ஆனால் எந்த அளவுக்கு யாம் இறைவன் எமக்களித்த இந்தப் பிறவியினைப் பயன் படுத்துகிறோம் என்று வினாவினால், அதற்குச் சாதகமான பதில் கிடைக்கவே கிடைக்காது. பதில் சொல்வதில் தயக்கம்தான் கிடைக்கும். இதுவும் நிஜமே.

மனித சரீரம் எமக்குக் கிடைத்ததே, மனிதன் இறையை வணங்கி நல்வாழ்வு வாழ்ந்து தருமங்கள் செய்து ஈற்றில் இறைபதம் அடைவதற்கேயாம். இவ்வண்ணம் நல்லை நகர் தந்த நாவலர் பெருமான் கூறியுள்ளார்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தாதார்
இறைவன் அடி சேராதார்"

என்பது வள்ளுவம் தந்த வாக்கு. இதன்படி இகத்தில் இன்பத்தையும் பரத்தில் முத்தியையும் பெற யாம் ஆத்மீகத்தில் தவ றாது ஈடுபட்டாக வேண்டும். இப்போது என்ன அவசரம் வயதுவரப் பார்ப்போமே என்று அலட் சியமாக இருந்து விடக்கூடாது. எல்லாம் விதிப் படி நடந்தேறும்தானே என நாம் வாளாவிருக் கக் கூடாது. விதி என்பது விதிக்கப் பெறுவது ஆகும். அப்படியாயின் இது யாரால் யாருக் காக எப்போது எதற்காக விதிக்கப் பெறுகிறது? என்ற வினா நிச்சயம் எம்மிடையே எழலாம். சுருங்கக்கூறின், விதி என்பது யாம் முற்பிறவி யில் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ப இப்பிறப்பில் அனுபவிக்கும் பொருட்டு ஈசன் வகுக்கும் வாழ்க்கை நியதி என்று கூறலாம். இது இந்து மதக் கொள்கையும் ஆகும். இஃது இறைவனது விருப்பு வெறுப்புக்கேற்ப விதிக்கப்படுவதல்ல. எமது பாவ புண்ணிய பலன்கள் தாமாக இயங்கி உரியவரைச் சென்றடையமாட்டா. அவற்றை உரியவர்களி டம் உரிய காலத்தில் உரிய முறைப்படி சேர்த்து வைப்பவனே இறைவன். இதுவே விதியின் தன்மை.

எனவே எமது முன்ஜென்மச் செயற் பாடுகளின் பிரதிபலன்களே இப்போது எமக் குக் கிடைத்திருக்கும் வாழ்க்கை. எமது குலம், கோத்திரம், தோற்றம், வசீகரம், அழகு, பெற்றோர், உடன்பிறப்புக்கள், கல்வி, செல்வம், தாரம், புத்திரபாக்கியம், தொழில் நிம்மதியான வாழ்க்கை யாவுமே யாம் கடந்த ஜென்மங் களில் செய்த செயற்பாடுகளின்படியே எம்மை வந்தடைகின்றன. எமது விருப்பு, வெறுப்புக் களுக்கேற்ப இவற்றை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. கருணைக்கடலும் நீதவானுமாகிய ஈசன் பாரபட்சமின்றி எம் பழைய வினைகட் கேற்ப இப்பிறப்பில் எமக்கு வாழ்வைத் தந்துள் ளார். எனவே இந்த உண்மையை மனதில் கொண்டு யாம் இப்பிறப்பில் ஆராய்ந்து நிதான மாக நல்லவற்றை எண்ணவும், பேசவும், ஆற்றவும் முயன்றாக வேண்டும்.

எமது வாழ்க்கையின் இரு பக்கங் கள் ஆவன, ஆன்மீகம், லௌகீகம் என்பன வாம். இல்லறமல்லது நல்லறமன்று என வகுத்த முன்னோர்கள்தான் எமது ஆன்மீக

உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்கள்.

செயற்பாடுகளையும் வலியுறுத்தியுள்ளனர். எமது இல்லற வாழ்க்கையைத் தளமாக வைத்தே எமது ஆன்மீகப் பங்கினை யாம் ஆற்றமுடியும், ஆற்றி ஆக வேண்டும்.

இதனை இவன் இவ்வாறு செய்தாக வேண்டும். நுகர்ந்ததாக வேண்டும் என எல்லாம் வல்ல ஈசன் வகுத்துள்ளான். எனக் கூறுகின்றது வள்ளுவம்.

இளமைத் துடிப்பும், இளமை வசதியும் கொண்ட சிலர் விதியை மதிப்பதில்லை. விதியை நம்புவதாக இல்லை. பணமும், பலமும் இருப்பின் எதையுமே சாதித்து விடலாம் என எண்ணுகிறார்கள். ஆனால் சான்றோர்கள் அருளாளர்கள் விதியை, விதியின் செயற்பாட்டை விதியின் வலிமையை ஏற்கத் தான் செய்கின்றார்கள். ஆனால் விதியைச் சாடுபவர்களும், விவாதிப்பவர்களும் தாம், விதியின் கரங்களில் அவஸ்தைப்படும்போது தான் விதியின் பலத்தை, தன்மையை, இயல்பை விளங்கிக் கொள்கிறார்கள்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்.

விதியின் வேகமும் செயற்பாடும் அத்தகையது. எனவே எமது மறு ஜென்மத்திற்கு நல்ல விதி சமைக்க, நாம் இப்போதே செயற்படுவோம். செய்வோமா?

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

## எதனாலும் அடங்காது ஆசை

துறவி ஒருவர் அந்த நகரத்திற்கு வந்திருந்தார். அவருடைய அறிவுரையைக் கேட்பதற்காக மக்கள் பலர் கூடி இருந்தார்கள்.

"எந்த நிலையிலும் ஆசை கொள்ளுதல் கூடாது. ஆசைப் படப்படத் துன்பங்கள் வந்துகொண்டே இருக்கும். ஆசையை விட விட மகிழ்ச்சி நிலவும்" என்றார் அவர்.

கூட்டத்தில் இருந்த ஒருவர், "துறவியாரே! நான் ஒரு பொருளுக்கு ஆசைப்படுகிறேன். அந்தப் பொருள் எனக்குக் கிடைக்கிறது. அதனால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆசையினால் எனக்கு எப்படித் துன்பம் வரும்? ஏன் ஆசையை விட வேண்டும்?" என்று கேட்டான்.

அதற்குத் துறவி, "கிடைத்த பொருளோடு ஆசை நிற்பது இல்லை. மேலும் மேலும் பொருள்களின்மீது ஆசைப்பட்டுக்கொண்டே இருக்கும். கடல் நீரைக் குடித்துத் தாகத்தைப் போக்குவது போன்றது நாம் நினைத்த ஆசைகள் நிறைவேறுவது. நாம் மேலும் மேலும் தாகத்தால் துன்பப்படுவோமே தவிர தாகம் அடங்காது" என்று விளக்கம் தந்தார்.

*சிந்திக்கச் செயற்படு அது உனக்கு நன்மையைத் தரும்.*

(தொடர் -10)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

அழகை ரசிப்பது மனிதத் தன்மை. அது துறவிகளுக்கும் உண்டு. அஜந்தா ஓவியங்களும் எல்லோரா சிற்பங்களும் துறவி களால் படைக்கப்பட்டவை என்பதைப் புரிந்து கொண்டால் இந்த உண்மை விளங்கும். துறவிகள்கூட பற்றை விட்டவர்களே தவிர வாழ்க்கையை வெறுத்தவர்கள் அல்லர்.

இறைவன் படைத்த இயற்கையை ரசிக்காமல் இறைவனை உணர்வது சாத்தியம் இல்லை. துறவிகளே அழகு ரசனை கொண்ட வர்கள் என்றால், இல்லறத்தில் வாழ்கின்றவர் களுக்கு அந்த ரசனை இன்னும் மிகுதியாக இருத்தல் வேண்டும்.

வாழ்க்கைச் சுகத்தை அனுபவிப்பதோ, புலன் இன்பங்களை நுகர்வதோ வெறுக்கத் தக்க விடயங்கள் அல்ல. வாழ்வதற்கு ஆசைப் படவேண்டும் என்று சமயம் சொல்லுகிறது. இந்து இதிகாசங்களையும் புராணங்களையும் படித்தால் இந்த உண்மை நன்கு விளங்கும்.

சிவனும், விஷ்ணுவும், பிரம்மாவும் திருமணம் செய்துகொண்டு வாழ்கின்றவர் களாகத்தான் இந்துமதம் சொல்லுகிறது. பார் வதி பரமசிவன் காதல் விடயங்கள் காவியங் களாகவே உருப்பெற்றிருக்கின்றன. திருமால் தன்னுடைய அவதாரங்களில் காதல் செய் திருக்கின்றார். கிருஷ்ணாவதாரத்தில் அவர் செய்த காதல் அளவற்றவை.

அநேகமாக எல்லாக் கடவுள் கதை களிலும் காதல் வருகிறது. கல்யாணம் நடக் கிறது. கணவனும் மனைவியும் சண்டை போட்டுக்கொள்கிறார்கள். பிரிந்து வாழ்கிறார் கள். பிரிந்தபின் கூடி மகிழ்கிறார்கள்.

இதெல்லாம் கற்பனைக் கதைகள் என்பது யாவரும் அறிந்தது. ஆனாலும் வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை, சம்பவங்களைக் காட்டி நிற்கும் அழகிய கற்பனைகளாகும். "கடவுள் திருமணங்கள்" வாழ்க்கைத் தத்துவத்தை எடுத்துக் காட்டு வதற்காக உருவாகிய கதைகள் என்பதை ஒவ்வொருவரும் நன்கு அறிந்து கொண்டு, சைவ சமயம் ஒவ்வொருவருடைய கடமை களையும் தெளிவாகக் கூறியுள்ளது என் பதை அறிந்துகொள்ள வேண்டும்.

மனித வடிவெடுக்கும் தெய்வ அவ தாரங்கள் மனிதர்களாகவே வாழ்கிறார்கள். மனித ஆசா பாசங்களுக்கு உள்ளாகிறார்கள். மனித பலவீனங்களுக்கு ஆட்பட்டுத் தவிக் கிறார்கள். சமயம், இம்மாதிரியான கற்பனை களில் ஈடுபட்டதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. தெய்வங்களின் வாழ்க்கையை மனித வாழ்க்கை போலவே சித்தரித்ததன்மூலம் வாழ்க்கையின் எந்த இன்பங்களையும் மனி தன் ஒதுக்கி வாழவேண்டியதில்லை என்பதை உணர்த்தினார்கள்.

ஆலயங்களில் காணப்படும் சிற்பங் களும் ஓவியங்களும் தெய்வங்களின் காதல் காட்சிகளைச் சித்தரிப்பதாகவே அமைந்துள் ளன. ஆண் பெண் உறவு இன்பத்தைத் தெய்வ நிலைக்கு உயர்த்தியவர்கள் இந்துக்கள்.

இந்த இடத்தில் அடியேன் ஒரு விடயத்தைக் குறிப்பிட நினைக்கிறேன். நமது சமயக் கோட்பாடுகளுக்கு இழுக்கு ஏற்படு வதற்கு "சில சமயிகளே" காரணமாவார்கள். சமயச் சொற்பொழிவு, பிரசங்கம், மற்றும்

*முயற்சியே மனிதனை இறைவனின் முன்னால் எடுத்துச் செல்கிறது.*

உள்ள கலைவடிவங்களைப் பயன்படுத்தி சமய நிகழ்வுகளில் ஈடுபடுபவர்கள், சைவ சமயத்தின் அடிப்படைக் கோட்பாட்டை நன்கு அறிந்துகொள்ள வேண்டும். ஒருவர் பிரசங்கம் செய்யும்போது "முருகனே இரண்டு பெண்டாட்டிக்காரன்தானே! என்று அவையின் தனது எண்ண நிலையை பிரதிபலித்துக் கொண்டார். இதனைக் கேட்கும் பாமர மக்கள் என்ன நினைப்பார்கள் என்று கடுகளவும் சிந்திக்காது பேசுவது வருந்தத்தக்கது மட்டுமல்ல கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இன்பத்தை இரண்டு பிரிவுகள் ஆக்கினார்கள். சிற்றின்பம் என்றும் பேரின்பம் என்றும் அவற்றுக்குப் பெயர் கொடுத்தார்கள். சிற்றின்பம் என்பது கேவலமானது என்றோ, பேரின்பம் என்பது எவருக்கும் கிடைக்க முடியாத ஒன்று என்றோ அவர்கள் சொல்லவில்லை.

சிறிது காலமே நிலைக்கக் கூடியதைச் சிற்றின்பம் என்றும், நிலையாக நீடிக்கக் கூடியதைப் பேரின்பம் என்றும் சொன்னார்கள்.

ஆணும் பெண்ணும் சேர்ந்து அனுபவிக்கின்ற இன்பத்தைச் சிற்றின்பம் என்றார்கள். அந்த இன்பம் சில நிமிடங்களே நீடிக்கக் கூடியது என்பதால் சொன்னார்கள். இளமைப் பருவத்தில் மட்டும்தான் அது உச்சமானதாக இருக்கிறது. வயதாக வயதாக அதன் வேகம் குறைந்து போகிறது. ஆகவே அது சிற்றின்பமாயிற்று. (விதிவிலக்காக சிலர் இருக்கலாம்)

இறைவனை உணர்வதால் ஏற்படுகின்ற இன்பத்தை பேரின்பம் என்றார்கள். அந்த இன்பத்திற்கு வயது காரணமாக இருப்பதில்லை. மூன்று வயது ஞானசம்பந்தராலும் அதை அனுபவிக்க முடிகிறது; எண்பது வயது அப்பராலும் அதை அனுபவிக்க முடிகிறது. ஆகவே அது பேரின்பமாயிற்று.

சிற்றின்பம் வேண்டாம் என்று சைவ சமயம் சொல்லவில்லை. மாறாக சிற்றின்பத்தோடு நின்றுவிடாதே என்று சொல்லுகிறது. சிற்றின்பமயமான லௌகீக வாழ்க்கை வாழ்கின்றபோதே, பேரின்பத்தை உணர்கின்ற முயற்சிகளை மேற்கொள் எனச் சொல்லுகிறது, அவ்வளவுதான்.

பெண்டாட்டிக்குத் துரோகம் செய்கிறவன் பாவியாகத்தான் கருதப்படுகிறான். கணவனுக்குத் துரோகம் செய்கிற மனைவி கீழ்மகள் என்றே மதிக்கப்படுகின்றாள். சிற்றின்பம் என்பது கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் மட்டும் நிகழவேண்டிய ஒன்று என்றுதான் சமயம் வழிகாட்டுகிறது.

ஆசைகளை மண்ணாசை, பொன் ஆசை, பெண்ணாசை என மூன்றாக வகைப்படுத்தி சமயம் எங்கே சொல்லியிருக்கிறது என்று அடியேனின் சிற்றறிவுக்கு விளங்கவில்லை. மண்ணோடும் பொன்னோடும் பெண்ணையும் ஒரு பொருளாக மதிக்கச் சொல்லி இந்து மதம் சொல்லியிருக்க வழியில்லை எனக் கருதுகிறேன்.

தாசிகளின் சகவாசத்தால் கெட்டலைந்து ஞானம் பெற்ற சிலர் கோபத்தில், மண்ணோடும் பொன்னோடும் பெண்ணையும் சேர்த்திருக்க வேண்டும். சில சித்தர்கள் பெண்களைக் கடுமையாகச் சாடி பாடியிருக்கிறார்கள் என்பது உண்மை. (அது பற்றிப் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் ஆராயலாம்)

மகாகவி பாரதியும் ஒரு சித்தனாக வாழ்ந்தவர்தான். "உண்டாக்கிப் பாலூட்டி வளர்த்த தாயை உமையவள் என்று அறியீரோ, உணர்ச்சி கெட்டீர்!" எனக் கேட்கிறார்.

பெண்களை இழித்தும் பழித்தும் பாடிய பட்டினத்தார்கூட, தன்னுடைய தாய் இறந்த சமயத்தில், பெண்ணின் பெருமைகளைச் சொல்லிப் புலம்புகிறார்.

இந்து மத மையக்கோட்பாடு எதிலும் பெண் கேவலப்படுத்தப்படவில்லை. பல உபநிடதங்களை பெண்கள் இயற்றியதாக

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். ஆணும் பெண்ணும் சேர்ந்த வடிவம்தான் அர்த்த நாரீஸ்வரர். வழிபடும் தெய்வங்களைப் பெண் ஆக்கிவிட்டு, அந்த தெய்வங்களைச் சக்தி வாய்ந்த கடவுள்களின் மனைவியும் (சக்தி) ஆக்கிவிட்டு, அவர்களுக்குப் பிறகு குழந்தை களையும் வணங்கத் தகுந்த தெய்வங்கள் என்று சொல்லிவிட்டு, பெண்ணாசையைக் கேவலம் என்று சொல்ல இந்து மதத்தில் வழி எங்கேயிருக்கிறது? (வழி இல்லை)

இல்லற வாழ்க்கை வாழ்கின்றவனின் நான்கு நிலைகளாக பிரம்மச்சரியம், கிருகஸ் தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்று சொன்ன இந்துமதம், பெண்ணாசை இல்லா மல் குடும்பம் நடத்தச் சொல்லி இருக்கும் என்று எண்ணுவதற்கு வழி எங்கேயிருக்கிறது? (வழி இல்லை)

பல்வேறு சிந்தனைகள் நமது மதத் தில் கிளைகளாகப் பரவிப் படர்ந்ததால், சிலருடைய சுய அனுபவ வெளிப்பாடு தவ றாகப் பொருள் கொள்ளப்பட்டதால் தோன் றிய குழப்பங்களே இவை. இந்து சமயத்தின் மைய நீரோட்டம் எப்போதும் தெளிவான தாகவே இருந்து வந்திருக்கிறது.

பெரிய ஆலவிருட்சத்தில் சில விழுது கள் தரையைத் தொடாமல், தொடமுடியா மல் ஊசலாடிக்கொண்டிருக்கலாம். அந்த விழுதுகள் மட்டுமே இந்து சமயம் என்கிற ஆலவிருட்சமாகிவிடாது. புலன்களால்த்தான் இன்பத்தை உணர்கிறோம். ஐம்புலன்களும் ஒருங்கே உணர்கின்ற இன்பம் காம இன்பம் தான் என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்.

வாத்சயாயனர், கொக்கோவநர் போன்ற ரிஷிகள் காம இன்பத்தைப்பற்றி விரிவான சாத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆணும் பெண்ணும் உறவுகொள்ளவேண்டிய முறை கள், பெண்ணின் உடலில் உள்ள இன்பப் பகுதிகள் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் அவர்கள் விளக்கமாகவே சொல்லியிருக் கிறார்கள். இந்து மதத்தில் எல்லாப் பாடங் களும் உண்டு. பௌதிகம் உண்டு, இரசா யனம் உண்டு, மருத்துவம் உண்டு, கணிதம் உண்டு, வான ஆராய்ச்சி உண்டு, காமம் பற்றிய ஆராய்ச்சியும் உண்டு.

வாழ்க்கையின் முழு அழகையும் சித் தரித்துக் காட்டியது நமது மதம். அது எந் தத் துறையினையும் விட்டு வைக்கவில்லை. சிற்றின்பத்தைப் பற்றி விளக்கமாகச் சொல் லிய இந்துமதம் பேரின்பத்தைப் பற்றியும் பேசியது. பிரபஞ்சம் எங்கும் வியாபித்திருக் கின்ற இறைவனுடைய சக்தியுடன் நம் முடைய மனம் ஐக்கியப்படுகின்றபோது பேரின்பத்தை அனுபவிக்க முடியும்.

(தொடரும்...

## சைவத்தின் முழுமுதல் சிவனே ஆவார்

சைவத்தின் முழுமுதல் சிவனே ஆவார்
சைவத்தின் பின்வந் தமதங் களெல்லாம்
சைவத்தின் மகிமையும் பெருமையும் அறியும்
சைவத்தின் சிறப்பு எல்லாம் அந்தச்
சைவத்தைக் கடைப்பிடிப் போர்கள் கண்ட
சைவத்தின் சித்தாந் தமாகும் என்பர்
சைவத்தைக் கடைப்பிடித் துவாழ்ந்து பாரும்
சைவத்தின் தத்துவம் எல்லாம் புரியும்

-வ. யோகானந்தசிவம்-

*உலகப்பற்று காரணமாக ஞானம் மங்கிவிடுகிறது.*

# ஆடிப்பிறப்பன்று, கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம் ஓடி வாருங்கள் தோழர்களே!

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

ஆடிமாதம் பிறக்கப் போகின்ற நாள் வரமுன்னமே நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஊரெங்கும் வந்துவிடுவார். அந்த அளவுக்கு ஆடிப்பிறப்புப் பாடல் களைகட்டி தாத்தா பாட்டி குஞ்சு குருமன் வாயெல்லாம் புலவர் ஆனந்தமாக வாழ்ந்து நடமிடுவார்.

தமிழர்களுக்கு ஆடி மாதப்பிறப்பு பெரும் பேறுகளைத் தருவதனால் மாதங்களுள் ஆடிக்கு முதன் மரியாதை அளிக்கப்படுகிறது. தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவர் அவர்கள் இத்தகு நிலையினை உணர்ந்து ஆடிப்பிறப்பன்று தேவர்களும் மானிடர்களும் சந்தோஷிக்கும் வண்ணம், ஓர் அற்புதமான பாடலை அருளி இருக்கின்றார்.

இந்தப் பாடல்தான், “ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே” என்ற பிரபல்யமான பாடலாகும். இந்தப் பாடலுக்கு இணையாக இதுவரை எந்தவொரு பாடலும் படைக்கப்படவில்லை. ஆதலால் வீடு தொடக்கம் நாடுவரை இப்பாடலை தூய அன்போடு யாம் பாடினால், அத்துடன் கூழையும் காய்ச்சிப் படைத்துக் குடிப்போமாக இருந்தால் சகல சௌபாக்கியங்களும், ஐஸ்வரியங்களும் வீட்டிலும் நாட்டிலும் பெருகும் என்பது மிக மிக உண்மையானது என்பதை அதன்பின் உணரலாம்.

இல்லறம் சிறப்பதற்கும், ஈடிலாத கல்வி நிறைவதற்கும், நல்லறம் வளர்வதற்கும், நாடு அமைதி பெறுவதற்கும் ஆடிப்பிறப்பு வரமாக அமைகிறது. அல்லாமலும் தேவர்களும், வானவர்களும். பூமிக்கு வருகைதந்து மக்களோடு மகிழ்வுறும் பொன்னான நாளும் ஆடிப்பிறப்பாகும். ஆடிப்பிறப்பு அன்று உடம்பும், உயிரும், இயற்கையும், பூமியும், ஜீவராசிகளும் இரட்டிப்பான உயிர்ப்புப் பெற்று விளங்குவதனால் ஆடிப்பிறப்பு ஒரு கனத்த நாளாகும்.

எனவே அந்தக் கனத்த நாளினைச் சமாதானம் செய்வதாகவே “ஆடிக்கூழ்” கொழுக் கட்டைப் படையல் நிவேதனமாக்கப்படுகிறது. ஆடிப்பிறப்பன்று காய்ச்சப்படும் கூழ் எப்படி ஆக்கவேண்டும், எப்படிக் குடிக்கவேண்டும் என்பதுபற்றி நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அற்புதமாக இயற்றியருளி உள்ளார்.

**பாடல்**

1) ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே,
கூடிப் பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

2) வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சர்க்கரையுங் கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவையதிற் கொட்டிச்
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு,

*பெரிதும் அமைதி நிறைந்த வாழ்வே மகிழ்ச்சியான வாழ்வாகும்.*

3) வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித் தட்டி
வெல்லக் கலவையை உள்ளே யிட்டுப்
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே.

4) பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டைப் பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்க வாயூறிடுமே.

5) குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து,
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப்படைப்பும் படைப்போமே.

6) வன்னப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக் கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே.

7) வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்,
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே!

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே.

மணக்க மணக்க வாயூறும்படி, அடுப்பில் காய்ச்சிய மேற்படி அம்சங்களோடு, இலக்கிய இரசனையையும் சேர்த்து, வன்னப் பலாவிலை கொண்டு கோலி அதில் குடிக்கும் பொழுது அடேயப்பா, ஆடிக் கூழுக்கு நிகரேது? வாயிலே தேனூறும்; வயிற்றிலே தமிழூறும்; விடியவே உடலாறும்; கொடியவை விட்டோடும்; கோபங்கள் பணிந்து பின்வாங்கும்; குடும்பங்கள் ஒன்று சேரும்; தேசங்கள் நீடுவாழும்; திக்கெல்லாம் தமிழ் கமழும்! மேற்படி பாடலானது தமிழ்மண்ணின் சொத்து. பாடிக் குடிக்க வாருங்கள்!

*உறுதியைப்போல உழைப்பும் இருந்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.*

(கட்டுரைத்தொடர் - 44)

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## அருளம்பல சுவாமிகள்

இவர் வடமராட்சிப் பிரதேசத்தின் வியாபாரிமூலையில் வாழ்ந்த வேலுப்பிள்ளை இலட்சுமி அம்பாள் தம்பதிகளின் புதல்வராக 1880ஆம் ஆண்டு சித்திரை மாதத்து ரேவதி நட்சத்திரத்தில் (07.05.1880) இல் அவதாரம் செய்தார். இவர் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் நான்கு ஆண்டுகள் வரை ஆரம்ப கல்வியைப் பெற்றிருந்தார். 01.08.1890இலிருந்து 23.10.1894 வரை இங்கே கல்வி கற்றார் என்பதைப் பாடசாலைக் குறிப்புக்களிலிருந்து அறிய முடிகிறது. இங்கு கல்வி கற்கும் காலத்தில் சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை இங்கு ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார். சுவாமிகள் தனது ஆசிரியராகிய கதிரவேற்பிள்ளையுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தார் என அறிய முடிகிறது. ஐந்தாம் வகுப்பு சித்தி அடைந்த நிலையில் சுவாமிகள் பாடசாலைக் கல்வியில் நாட்டமின்றி தான் பாடசாலையை விட்டு வெளியேறியதாக "அருவாசகதேவ ஆரம்" என்ற நூலின் முகவுரையிலே குறிப்பிட்டுள்ளார். "தனது நடை வழிக்கு அந்நாளைய கல்வி நடப்பு ஒத்துவராததால் அது தன்னில் ஏறவில்லை" என எழுதியுள்ளார். பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்தியபொழுதும் அவர் பின்பு பல நூல்களைத் தானாகவே தேடிக் கற்றிருந்தார். பல பாடல்களைப் பாடிய புலமையினைச் சுவாமிகள் கொண்டிருந்தார்.

சந்தேக நிவர்த்தியில் வருகின்ற இவர் அருளிய பாடல்களை நோக்கும் பொழுது இவர் இராமாயணம், மகாபாரதம், புராணங்கள், திருமந்திரம், அருணகிரிநாதர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், மூவர் தமிழாகிய தேவாரம், திருக்குறள், சித்தர் பாடல்கள், வேதாந்த சித்தாந்த நூல்கள் ஆகிய அனைத்தையும் கற்றறிந்திருந்தார் என்பது தெளிவாகிறது.

கல்வியானது மெய்ப்பொருளாகிய இறைவனை அறிந்து கொள்வதற்கு வழி காட்ட வேண்டும் என்ற கருத்து இவரிடம் வலுப்பெற்றிருந்தது. கல்வியின் பயனால் இறைவன் தாள்களை வணங்குவதுடன் அவ்விறைவன் யாரென அமையும் தத்துவ விசாரத்தினையும் தரவேண்டும் என்பதை,

"கற்றதனாலய பயன் கணித்து நிற்கும் வாலறிவு
நற்றாளைத் தொழுவதெனின் நற்றாள் யார் வாலறிவார்"

எனக் கூறியுள்ளார்.

இவர் தனது இளமைக் காலத்தில் பல சோதனைகளையும் வேதனைகளையும் எதிர்கொண்டார்.

"கொடிது கொடிது வறுமை கொடிது
அதனிலும் கொடிது இளமையில் வறுமை"

என்ற தமிழ் மூதாட்டி ஔவையாரின் வாக்கிற்கு அமைய வறுமைத் துன்பத்தை நேரடியாக அனுபவித்தார். விவசாயம் செய்வதற்கும், வாணம், மத்தாப்பு போன்ற சிறு தொழில் செய்வதற்கும் பிறருக்கு உதவியாக இருந்தார். கம்பளையில் வாழ்ந்த தமது உறவினர் பரமுப்பிள்ளையின் பல சரக்கு கடையில் சிறிது காலம் வேலை செய்தார். சில காலத்தின் பின்னர் கம்பளையை விட்டுத் தனது சொந்தக் கிராமமாகிய வியாபாரிமூலைக்குத் திரும்பி வந்தார். தான்

*முடியாது என்பது சோம்பேறிகளின் வார்த்தை.*

கம்பளையில் கடையில் பெற்றிருந்த வியாபார அனுபவத்தை வைத்துக் கொண்டு தனியாக ஒரு கடை வைத்துத் தொழில் செய்ய விரும்பினார். தனது பூர்வீகச் சொத்துக்களை ஈடுவைத்தும் விற்றும் மட்டக்களப்பில் புகையிலை வியாபாரம் செய்தார். ஆனால் சுவாமிகள் எதிர்பார்த்த வகையில் தொழில் வளர்ச்சியடையாது வீழ்ச்சியடையவே பெரும் துன்பத்திற்கும் ஏமாற்றத்திற்கும் உள்ளானார்.

அருளம்பலம் துன்பங்கள், துயரங்களைத் தொடர்ந்து எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. தொழில் முயற்சிகளில் ஏமாற்றம் அடைந்த நிலையில் உடலில் நோய்களும் ஏற்பட்டுத் துன்பங்களை எதிர் கொண்டார்.

“நோய் கொண்டே தேகமெங்கும்
மான்படு புள்ளிபோல வடுக்
கொண்டே வருத்த முற்றேன்”

என நாகை நீலலோசினி அம்மை ஊஞ்சலிலும்

“என்னரசே யான்படும் பாட்டை யார்க்குரைப்பேன்! யார்க்குரைப்பேன்!
மின்னலான தேகத்துள் வெந்து துள்ளியாடுகின்றேன்
இன்னலெனைத் தீர்த்தென்னை யிச்சிறைச்சாலையில் நின்று
பின்னலற நின் கருணைப் பேர் நோக்காற் பிரிப்பாயே”

என அருவாச தேவ ஆரத்திலும் சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.

தொழில் முயற்சிகளில் தோல்வியும் உடலில் நோயும் ஏற்பட்ட பின்பு இவருடைய உலகியல் நாட்டம் இறையியல் நாட்டமாக மலரத் தொடங்கியது. உள்ளூர் ஆலயங்களை வழிபட்டதோடு, பாடல்பெற்ற தலங்களாகிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கதிர்காமம் ஆகிய தலங்களுக்கும் சென்று சுவாமி தரிசனம் செய்து வந்தார். வியாபாரிமூலையில் தனது உறவினர் ஒருவரின் வீட்டு முற்றத்தில் சில கோலங்கள் வரைந்து பூக்கொண்டு தினமும் பூசை செய்து வழிபட்டு வந்தார்.

“தலமெல்லாம் சுற்றியாடித்
தாள்வலி கொண்டலைந்தேன்
நிலமெல்லாம் மெழுகிய பூசை
நிவேதனம் படைத்து நின்றேன்
கலமெனக் காட்டும் யோகக்
கடுநடை கொண்டே யேங்கி
உலகெங்கும் பழிப்பதாக
வுன் மத்தனாயலைந்தேன்”

எனத் தான் செய்த இறை பூசை, தலயாத்திரை என்பவற்றைப் பற்றியெல்லாம் மேற்கூறிய பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்து வயதிலிருந்து முப்பது வயதுவரை தான் இறைவனை பக்தி சிரத்தையோடு வணங்கி வந்தேன். தனக்கு இல்லற வாழ்வை இறைவனே தரவில்லை என நையாண்டி செய்வதுபோலப் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

*நீர் அமைதியாக இருப்பதனால் முதலைகளே இல்லை என்று எண்ணிவிடாதே.*

"மங்கையாள் பாகமென்றும் மதிச்சடையோர் பெண்ணென்றும்
சங்கையாயுள்ள தென்ற சங்கர முர்த்தியாரே
பாங்காக வுலகருக்குப் பதியாளை நீக்குமென்னப்
பொங்கவே வுரைத்தவுன்றன் புதுமையே தாகுமையா"

நமது முன்னோர்கள் ஒருவன் முப்பது வயதினுள் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களின் பிடியிலிருந்து விடுபட்டு உண்மைப் பொருளான இறைவனைத் தன்னுள்ளே நாடுதல் வேண்டுமெனக் கூறி வைத்தனர். அவ்வாறு செய்ய முடியாத தனது இயலாமையினைக் கேள்விக் கணையாகத் தொடுத்து இறைவனையே உதவுமாறு அழைக்கின்ற பாங்கினைப் பின்வரும் பாடல்களாகத் தான் அருளிய சீலதரிசியில் குறிப்பிட்டுள்ளார்.

01) "முப்பதான வாண்டினுக்குள் மூன்றுவிட வேணுமென்றாய்
தப்பான மும்மலத்தை தள்ளிற்தேகம் நின்றிடுமோ"

02) "பஞ்சகீர்த்யம் செய்பவனே படித்த கல்வி வீரங்கொண்டு
மிஞ்சுங்காம மடக்கமாட்டேன் மீறிலடக்கிடுவாய் நீயே"

03) என் செயலால் முடியாதவை யென்னைச் செய்ய சொல்வாயானால்
உன் செயலால் முடியாதென் உரைத்திட்டாயோ வாகமத்தில்"

அருளம்பல சுவாமிகள் 1910ஆம் ஆண்டளவில் தனது முப்பதாவது வயதில் ஆத்ம ஞான ஈடேற்றத்தின் பொருட்டு சிதம்பரம் செல்ல எண்ணங்கொண்டு இந்தியா புறப்பட்டார். சிதம்பரம் போக இருந்த சுவாமிகள் நாகை நீலாச்சி அம்பாளின் திருவருளினால் 1910ஆம் ஆண்டிலிருந்து 1914ஆம் ஆண்டு வரை அங்கே தங்கியிருந்தார். நாகை நீலலோசனி அம்மன் தோத்திரத்தின் முகவுரையில் சுவாமிகள் தமது நிலையைப் பின்வருமாறு விளக்கியுள்ளார். "நாகபட்டணம் மவுன சாமி எனப் பெயர் பூண்ட நான் யாழ்ப்பாணம் அல்வாய் வடக்கு என்னும் தலத்திலிருந்து புலன்பொறி கரணம் சீறியாடும் நிலைப்படி காவடியாக அலைந்து திரிந்தபோது தன் நிலை படியாததால் நிஷ்டை நிலையைப் படிக்கவேணும் என எண்ணிச் சிதம்பரம் போவதாக நாகபட்டணம் வந்தேன் என எழுதியுள்ளார்.

1914ஆம் ஆண்டில் நாகபட்டிணத்தில் இருந்து புறப்பட்ட சுவாமிகள் வேதாரணியம், மாயவரம், சிதம்பரம், காரைக்குடி, பாண்டிச்சேரி (புதுவை) முதலிய இடங்களுக்குச் சென்றிருந்தார். நாகபட்டிணம், புதுவை ஆகிய இடங்களில் அதிககாலம் வாழ்ந்தார் என அறியமுடிகிறது. அருளம்பல சுவாமிகள் நாகபட்டிணத்திலே அதிக காலம் வாழ்ந்தமையினால் நாகபட்டிணம் சுவாமி எனவும், நாகையில் மௌனத்தில் ஆழ்ந்திருந்த காரணத்தினால் நாகை மவுனசுவாமி எனவும் மௌன குரு எனவும், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தமையால் யாழ்ப்பாணத்து சுவாமி எனவும் அழைக்கப்பட்டமையை அறிய முடிகின்றது.

நாகையில் சுவாமிகள் இருந்தபொழுது அவரைப் பலரும் மதித்து நடந்தார்கள். வைத்திலிங்கச் செட்டியார் இவருக்குப் பெரிதும் துணையாக இருந்தார். சுவாமிகளே

*வேலை செய்யாமல் ஒருவனிடம் பணம்பெறுவது பிச்சையேயாகும்.*

ஓரிடத்தில் தன்னைப் பலரும் சாமியென மதித்தார்களேயன்றி பைத்தியக்காரன் எனத் தூற்றவில்லையென்று குறிப்பிடுகின்றார். நாகையில் நிஷ்டையை ஆரம்பித்த காலத்தில் அவரது உண்மைநிலை புரியாத சிலர் இவரை வேடதாரி, பொய்ச்சாமி என எண்ணித் தகாத செயல்கள் செய்ததாகவும் அறிய முடிகிறது. ஒருமுறை தீயில் காய்ச்சிய இரும்பினை அவரது பாதத்தில் சுட்டபோது சுவாமி மௌனமாக இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

சுவாமிகள் நிஷ்டை கூடியிருந்த ஆரம்ப நாட்களில் நீலலோசினி அம்மன் ஆலய குரு இவர்மீது சினமுற்று இருந்தார். கொட்டிலில் இருந்த சுவாமிகளைத் தரிசிக்க வந்த பெண்மணி வழமையாகக் கண்கள் மூடியிருக்கும் சுவாமிகளின் கண்கள் திறந்திருந்தமை கண்டு ஐயரிடம் சென்று கூறினார். ஐயர் வந்து பார்த்தபொழுது கண் பழையபடி மூடியிருந்தது. இவர் வேடதாரி எனக் கருதிய ஐயர் தாசிகளை இவரது குடிசைக்கு அனுப்பினார். தாசிகள் வந்தமையால் சுவாமிகள் வேறிடம் சென்றார். ஐயர் சுவாமிகள் இருந்த கொட்டகையைத் தீமூட்டி எரித்தார். சுவாமிகள் பெண்களைப் பார்க்கின்றார் எனப் பொலிஸில் முறைப்பாடு செய்தார். பொலிஸார் சுவாமிகளைத் தாம் இருந்த இடத்துக்குக் கூட்டிச் சென்று ஓர் அறையில் பூட்டி வைத்தனர். சிறிது நேரத்தில் அவர் அறையில் இல்லாமையையும் கடற்கரை ஓரத்தில் நிஷ்டையில் இருந்தமையையும் குதிரையில் பவனி வந்த நீதிபதி கண்ணுற்று இவரது உண்மை நிலையை உணர்ந்து கொண்டார். நீதிபதி அவரை எவரும் தொந்தரவு செய்யக்கூடாது என்று பணிப்புரையையும் விடுத்தார். இந்நிகழ்வினைச் சுவாமிகள் தான் அருளிய நொண்டிச்சிந்துப் பாடலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"கொட்டகை சுட்டபழிக்கு - சிறையிட்டும்
கூடலாய் நிற்குது சாமீ என்று
செட்டியார் பாதுகாப்புள்ளே எமன் வந்து
சேட்டைகள் செய்திட முடியாது"

ஈழத்தவர்களும் தமிழகத்தவர்களும் பல துறைகளில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நெருங்கிய தொடர்புகள் கொண்டவர்களாக விளங்கினர். திருநெல்வேலி ஞானப்பிரகாசர் நல்லை நகர் ஆறுமுக நாவலர், குப்பிளான் காசிவாசி செந்திநாதையர், புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை போன்றவர்கள் தமிழகத்தில் புகழ்பெற்ற அறிஞர்களாக மதிக்கப்பட்டார்கள். இதேபோலச் சித்தர்களில் பலருக்கும் ஈழத்தோடும், தமிழகத்தோடும் நெருங்கிய தொடர்பு இருந்தது. யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் எனப் போற்றப்பட்ட அருளம்பல சுவாமிகள் தமிழக மக்களால் பெரிதும் போற்றப்பட்ட சித்தபுருஷராக மிளிர்ந்தார். உலகப்பெரும் கவிஞர்களில் ஒருவராகப் போற்றப்படும் மகாகவி பாரதியார் தனது பாரதி அறுபத்தாறு என்னும் பாடலில் யாழ்ப்பாணத்துச் சாமி எனக் குறிப்பிட்டு அருளம்பல சுவாமிகளைப் போற்றிப் பாடியுள்ளார். பாரதியார் தனது அகக் கண்ணைத் திறந்த ஞானகுருவாக அருளம்பல சுவாமிகளைப் போற்றுகின்றார்.

01) "கோவிந்தசாமி புகழ் சிறிது சொன்னேன்
குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்
தேவிபதம் மறவாத தீரஞானி
சிதம்பரத்து நடராஜ மூர்த்தியாவான்

பாவியரைக் கரையேற்றும் ஞானத்தோணி
பரமபத வாயிலெனும் பார்வையாளன்
காவிவளர் தடங்களிலே மீன்கள் பாயும்
கழனிகள் சூழ்புதுவையிலே அவனைக் கண்டேன்"

02) தங்கத்தாற் பதுமை செய்தும் இரதலிங்கம்
சமைத்துவமற் றினிலீசன் தாளைப் போற்றும்
தங்கமுறு பக்தர் பலர் புவிமீதுள்ளார்
தோழரே எந்நாளும் எனக்குப் பார்மேல்
மங்களஞ் சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்
வானவர்கோன் யாழ்ப்பாணத்தீசன் தன்னைச்
சங்கரனென் றெப்போதும் முன்னே கொண்டு
சரணடைந்தால் அதுகண்டீர் சர்வசித்தி

குவளைக் கண்ணன் புகழ் கூறும் அடுத்து வரும் பாடல்களிலும் யாழ்ப்பாணத்துச் சுவாமி பற்றிய செய்தியைக் காணலாம்.

03) "மகத்தான முனிவரெல்லாம் கண்ணன் தோழர்
வானவரெல்லாங் கண்ணன் அடியாராவார்
மிகத்தானு முயர்ந்த துணிவுடைய நெஞ்சின்
வீரப்பிரான் குவளையூர்க் கண்ணன் என்பான்
ஜகத்தினிலோர் உவமையிலா யாழ்ப்பாணத்துச்
சாமிதனை யிவனென்றான் மனைக் கொணர்ந்தான்
அகத்தினிலே அவன் பாதமலரைப் பூண்டேன்
அன்றேயப் போதே வீடதுவே வீடு"

சுவாமிகள் எழுதிய நூல்களில் பல இலகுவானதாகவும் எளிதில் விளங்குவதற்குரியதாகவும் அமைந்திருந்தன. இவரால் எழுதப்பெற்ற சந்தேக நிவிர்த்தி, பரவெளித் தத்துவம் முதலான நூல்கள் நுட்பப் பொருள்கள் பலவற்றை விளக்கி நிற்கின்றது. கற்பு நிலை, கற்புநிலைச் சுருக்கம் ஆகிய நூல்கள் ஆண் பெண் உறவுமுறைகளைத் தாந்திரீக தத்துவப் பாணியில் விளக்கும் நூல்களாக அமைந்துள்ளன.

ஏகாந்த நிலையில் மௌனமாக இருப்பதுவே ஆன்ம ஞானத்தைப் பெறுவதற்குரிய சிறந்த வழியென்பதைச் சுவாமிகள் உணர்ந்திருந்தார். இப்போக்கே இவரை இலங்கையிலும், இந்தியாவிலும் வாழ்ந்த காலங்களில் பெரிதும் மௌனமாக இருக்கத்தூண்டியது எனலாம். உலகியல் பற்றுக்கள், ஆசைகள் என்பன மனத்தை விட்டு அகன்று விட்டால் பேசா நிலையாகிய மௌன நிலை தானாகவே தோன்றிவிடும் என்பதை,

"ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அனுபூதி பிறந்ததுவே"

என அருணகிரிநாதர் தான் அருளிய மந்திர மாலையாகிய கந்தர் அநுபூதியில் குறிப்பிடுகின்றார்.

*பிரம்மத்தை அறிந்தவன் அனைத்தையும் எய்தி இன்புறுகிறான்.*

சுவாமிகள் 1929ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்து ஈழமணித் திருநாட்டுக்குத் திரும்பி வதிரியிலும், வியாபாரிமூலையிலும் தங்கி இருந்தார். வதிரியில் சகோதரி சின்னப் பிள்ளையுடனும், வியாபாரிமூலையில் பெரும் பொழுதை சித்திவிநாயகர் ஆலயத் தெற்கு வீதியில் உள்ள மகிழ மரத்தின் கீழும் கழித்தார். சித்திரம் வரைதலில் சிறுவயதில் இருந்து ஈடுபாடு கொண்டிருந்த சுவாமிகள் ஆலய வசந்த மண்டபச் சுவரில் தெய்வப் படங்கள் சிலவற்றை வரைந்தார். இக்காலப் பகுதியில் சுவாமிகளிடம் பலர் தங்கள் குறை களைக் கூறித் தீர்வுகாண விரும்பிச் சென் றார்கள். சுவாமிகள் அன்பர்களின் வேண்டுதல் களைத் தான் இறைவனிடம் சமர்ப்பிப்பதாகக் கூறுவார். சுவாமிகளிடம் பலர் தங்கள் அன் றாடப் பிரச்சினைகள், எதிர்கால நிலைமை கள் பற்றிப் பல கோரிக்கைகளை விடுப்பது உண்டு. சுவாமிகளை நாடிவந்த பலருடைய குறைகள் நீங்கப்பெற்றன. சில அன்பர்களின் பிற்காலம் பற்றிச் சுவாமிகள் கூறிய வாக்கு கள் பலித்தன. சுவாமிகள் தன்னை நாடி வரும் அடியவர்களின் வேண்டுதல்களுக்கு "என் செயலால் நடப்பது ஒன்றுமில்லை; எல்லாம் இறைவன் செயல்; நான் ஒரு கருவி யாக இருந்து உங்கள் வேண்டுதல்களை இறைவனிடம் சமர்ப்பிக்கின்றேன் என்று கூறு வாராம். சுவாமிகளின் உறவினர்கள், அன்பர் கள் சிலர் தற்போதும் தாங்கள் வணங்கும் இதர தெய்வப் படங்களுடன் சுவாமிகளின் புகைப்படத்தினையும் வைத்துப் பூசித்து வருகிறார்கள்.

சுவாமிகள் ஒருநாள் பொலிகண்டிக் கடலில் தீர்த்தம் ஆடச் சென்றபோது கடல் நீரில் பல்வேறு இடங்களிலும் தமது தோற் றத்தைக் காட்டினார் என்றும் அடியார்கள் கடல் நீரில் நின்றபொழுது சுவாமி மேற்பரப் பில் காட்சி கொடுத்தார் என்றும் இதனை நேரில் கண்டவர்கள் கூறினார்கள். ஆனால் சுவாமிகள் சித்துக்கள் செய்வதில் அதிகம் நாட்டம் கொண்டவராக இருக்கவில்லை.

சுவாமிகளின் அடியார் கூட்டத்தில் செல்வந்தரான சிவப்பிரகாசபிள்ளையவர்கள் நீண்டகாலமாக சுவாமிகளின் அன்பராக இருந் ததுடன் பல வகைகளில் சுவாமிகளுக்கு வேண்டிய உதவிகளையும் தாமே முன்வந்து செய்து உதவினார். நாகபட்டிணத்தில் காணி வேண்டிச் சுவாமிகள் தங்குவதற்கு மடம் ஒன்று கட்டிக்கொடுத்தார். 1942ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி சுவாமிகள் அன்பர் சிவப்பிரகாசத்தோடு இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்தார். வியாபாரி மூலையில் சிவப்பிரகாசம் அவர்களின் இல் லத்திலேயே தங்கியிருந்தார். சுவாமிகளின் இன்னொரு சீடராகிய சபாபதிப்பிள்ளை "புற்றளைக்கரசே" "குழந்தை அருளம்பலம்" "அம்பலமே" என்னும் பாடல்களைச் சுவாமி களை நோக்கிப் பாடியுள்ளார்.

சுவாமிகள் 1942ஆம் ஆண்டு மார்கழி மாதம் மூன்றாம் திகதி அத்த நட்சத்திரத்தில் நிஷ்டையில் இருந்தபடியே மகாசமாதி அடைந் தார். அவரது பூதவுடல் மார்கழி மாதம் ஐந்தாம் திகதி முறைப்படி வியாபாரிமூலை வீரபத்திர சுவாமி கோயிலுக்கு ஈசான திசை யில் சமாதி வைக்கப்பட்டது. இதர சமாதி ஆலயங்களிலிருந்து வேறுபட்ட அமைப்புடன் பெருங்கற்களால் சமாதி ஆலயம் அமைக்கப் பட்டது. இச் சமாதி ஆலயம் அமைப்பதில் சிவப்பிரகாசபிள்ளையவர்கள் முன்னின்று செயற்பட்டார். மார்கழி அத்தத்தில் இவ ருடைய குருபூசை மிகச் சிறப்பாக இங்கே வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகிறது.

(தொடரும்...

*நல்ல நண்பர்களின் நட்பு நல்லொழுக்கத்தைக் கொடுக்கும்.*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆச்சிரமத்தில் இடம்பெறும் விசேட நிகழ்வுகள்

**12.08.2018 ஞாயிற்றுக்கிழமை 2ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

விடயம் :- "பஜனை"

வழங்குபவர்கள் :- வடபிராந்திய சாயி சமித்தி நிலைய அன்பர்கள்

**13.08.2018 திங்கட்கிழமை 3ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஐம்பொறிகள் கொடுப்பதும் கெடுப்பதும்"

வழங்குபவர் :- திருமதி பரமேஸ்வரி சிவனொளிபாதம் அவர்கள்

(இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்)

**14.08.2018 செவ்வாய்க்கிழமை 4ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "இந்துமதம்"

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை)

**15.08.2018 புதன்கிழமை 5ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "அடையா வாயில்"

வழங்குபவர் :- ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள்

**16.08.2018 வியாழக்கிழமை 6ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவர்களின் மீட்சி"

வழங்குபவர் :- திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள்

(சைவப்புலவர்)

**17.08.2018 வெள்ளிக்கிழமை 7ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "உய்வாய் மனனே"

வழங்குபவர் :- திரு ச. லலீசன் அவர்கள்

(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

*ஒருவரின் உள்ளத்தை நீ அறியுமுன் உனது உள்ளத்தை அவர் அறிந்தது உனக்குத் தெரியாது.*

**18.08.2018 சனிக்கிழமை 8ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "திருவடியின் பெருமை"

வழங்குபவர் :- திரு க. கைலநாதன் அவர்கள்

(சைவப்புலவர்)

**19.08.2018 ஞாயிற்றுக்கிழமை 9ம் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "அருணகிரிநாதரின் அநுபூதி நிலை"

வழங்குபவர் :- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்

**20.08.2018 திங்கட்கிழமை 10ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "சமயமும் வாழ்வும்"

வழங்குபவர் :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

(இளை. அதிபர்)

(பூங்காவனம்)

**21.08.2018 செவ்வாய்க்கிழமை 11ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "இறை சிந்தனை"

வழங்குபவர் :- திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள்

(சைவப்புலவர்)

**22.08.2018 புதன்கிழமை 12ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தபுராணக் கவிநயம்"

வழங்குபவர் :- சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்கள்

**23.08.2018 வியாழக்கிழமை 13ந் திருவிழா முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "முப்பொருள் தத்துவம்"

வழங்குபவர் :- சிவஸ்ரீ கு. சுமீகலிங்கம் அவர்கள்

(சைவப்புலவர்)

| | | | |
|---|---|---|---|
| 24.08.2018 | வெள்ளிக்கிழமை | சப்பறம் | இரவு 7.30 மணி |
| 25.08.2018 | சனிக்கிழமை | தேர் | காலை 8.00 மணி |
| 26.08.2018 | ஞாயிற்றுக்கிழமை | தீர்த்தம் | காலை 8.30 மணி |

# படங்கள் தரும் பதிவுகள்



ஆனி மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...




மனச்சாட்சி என்பது இறப்பரைப் போன்றது. அதை வளைக்கலாம் ஒடிக்க முடியாது.



ஆனி மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



*சபலம் பிறக்கும்போது எவனுக்கு வைராக்கியம் பிறக்கின்றதோ அவனே ஞானியாவான்.*



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சமுதாயப் பணிகளின் வரிசையில்
வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கும் மூன்று மாணவர்களுக்கும்
மற்றும் கல்விகற்பிக்கும் ஆசிரியைக்குமாக நான்கு
துவிச்சக்கரவண்டிகள்
ஆச்சிரமத்தினால்
வழங்கப்பட்டது.

நியாயம் இரு பக்கங்களிலும் உண்டு. ஆனால் நீதி ஒரு பக்கம்தான் உண்டு.

# ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமிகள் குருபூசை

– வல்வையூர் அப்பாண்ணா –



யார் இந்த மயில்வாகனம் சுவாமிகள்? இன்றைய தலைமுறையினருக்கு சுவாமிகளைத் தெரிந்திருக்க வாய்ப்பேயில்லை. ஆனால், நாட்டில் ஏற்பட்ட நீண்ட யுத்தகாலத்தின் முன்பு செல்வச்சந்நிதியின் தென்புறமாக நீண்ட - பரந்த தென்னஞ்சோலையின் நடுவே நிமிர்ந்து நின்று தன்னை நோக்கி வரும் அடியவர்களுக்கு அன்னமளிக்கும் பணியினை ஆற்றிவந்த ஆனந்தாச்சிரமமும் அதனை நிர்வகித்த மயில்வாகனம் சுவாமிகளையும் மறந்திருக்க மாட்டார்கள். ஆனந்தமான சூழல் - வயிறு குளிர அன்னம் வழங்கும் ஆனந்தமான அன்னதான மடம். அதனால் "ஆனந்தா ஆச்சிரமம்" என்று பெயர் நிலையாயிற்று.

இன்று எந்தக் கோவில் திருவிழாவாயினும் அன்னதானம் வழங்குவது வழமையாகி விட்ட நிலையில் அன்று சந்நிதி என்றாலே அன்னதானம் என்றும்- அன்னதானம் எனில் சந்நிதி என்றும் பொருள்பட ஆற்றங்கரையில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் முருகன் "அன்ன தானக் கந்தன்" எனும் சிறப்புப் பெயர் தாங்கி தன்னை நாடிவரும் அடியவரை அரவணைத்து



பசியாற்றி அனுப்பிவரும் பணியில் ஆனந்தா ஆச்சிரமமும் - மயில்வாகனம் சுவாமிகளும் முதன்மைபெற்று விளங்கினர். அத்துடன் ஜேர்மன் சுவாமிகள், ஆனைக்குட்டிச் சுவாமிகள், பன்றிக் குட்டிச் சுவாமிகள் முதலான வெளிநாட்டவர்கள் உட்பட எமது நாட்டைச் சேர்ந்த அருளாளர்கள் அனைவரையும் அரவணைத்து உதவிகள் அத்தனையையும் செய்துகொடுத்தவர் அவர்.

1985இல் மயில்வாகனம் சுவாமிகள் சமாதி அடையும்வரை தனது அன்னப்பணியினை ஆற்றிவந்த பின்னரும் மிகக் குறுகிய காலம்வரை ஆனந்தாச்சிரமத்தில் அன்னப்பணி தொடர்ந்தாலும், இறுக்கமான யுத்த சூழல் செல்வச்சந்நிதிச் சுற்றாடல் முழுமையாக இடம் பெயர்ந்தபோது, ஆச்சிரமமும் தரைமட்டமாகிப்போனது உண்மை. மயில்வாகனம் சுவாமிகள் அன்னப்பணி ஆற்றிய வேளையில் அவருக்கு வலமும் இடமுமாகவிருந்து உதவிபுரிந்த அன்றைய இளைஞர்களுள் முதன்மையானவர் இளைஞன் மோகனதாஸ். அவர்தான் இன்றைய சந்நிதியான் ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகள். இளைஞர் மோகனதாஸ் அன்று மயில்வாகனம் சுவாமிகளிடம் கற்றுக்கொண்டது தனியே சாதம் வடித்து அன்னப்பணியாற்றுவது மட்டுமல்ல. சிறந்த நிர்வாக முறைமைகளையும் கற்றுத் தெளிந்தார். இன்றும் அதே நிர்வாகக் கட்டமைப்புக்கள்-

*கஷ்டங்களை முன்கூட்டியே கற்பனை செய்தாயானால் நீ தற்கொலை பற்றி எண்ணமாட்டாய்.*

ஆச்சிரமப் பணிகளில் பரவலாகி- நாடு முழுவதும் பல்வேறு வடிவங்களில் பரந்து விரிந்து உள்ளமையை நாம் காண்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் தன் குருநாதர் மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை தினத்தை ஆண்டு தவறாது நன்றியோடு நினைவு கூர்ந்து வருகிறார் மோகன் சுவாமிகள். சந்நிதியான் ஆச்சிரம மாதாந்த ஆன்மீக வெளியீடான "ஞானச்சுடர்" சஞ்சிகையின் அட்டையின் வலது பக்க மேல் மூலையில் மயில்வாகனம் சுவாமிகளின் பொலிவான முகத் தோற்றத்தினை முன்னிறுத்தி வெளிவந்து கொண்டிருப்பது மோகன் சுவாமிகள் - மயில்வாகனம் சுவாமிகள் மீதுகொண்ட குருபக்தியின் வெளிப்பாடேயாகும்.

மயில்வாகனம் சுவாமிகளின் 33ஆவது குருபூசை தினம் 20.07.2018 வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. மலர்மாலை அலங்காரங்களுடன் மயில்வாகனம் சுவாமிகளின் திருவுருவப் படம் மேடையில் ஒளிபெற நிகழ்வுகள் மண்டபத்தில் நடந்தேறின. வழமையாக வாராந்த வெள்ளி நிகழ்வுடன், மயில்வாகனம் சுவாமிகளின் நினைவுகளை நினைவு கூர்ந்து உரையாற்ற இருவர் அழைக்கப்பட்டிருந்தனர். ஒருவர் ஓய்வுநிலை அதிபர் திரு ஆ. சிவநாதன் அவர்கள். மற்றவர் கவிமணி அன்னைதாசன் அவர்கள். திரு ஆ. சிவநாதன் அவர்கள் கூறிய கருத்துக்கள் சில.

"அறம் - பொருள் - இன்பம் எனும் நியதிகளுக்கப்பால் வீடுபேற்றினை நாம் பெற வேண்டுமாயின் நாம் ஒரு குருவைத் தேட வேண்டும். வாதவூரருக்கு திருப்பெருந்துறையில் இறைவன் குரு வடிவந்தாங்கி ஆட்கொண்டமைபோல, மயில்வாகனம் சுவாமிகளும் திருவண்ணா மலையில் ரமண மகரிஷி எனும் மனித வடிவில் குருவாகி ஆட்கொள்ளப்பட்டார். அக்குருவின் பணிப்பில் நாடு திரும்பி சந்நிதியில் ஆச்சிரமம் அமைத்து அமைதியான அன்னப்பணி புரிந்தார். ரமண மகரிஷி எனும் விளக்கில் ஏற்றப்பட்ட விளக்கு மயில்வாகனம் சுவாமிகள். மயில்வாகனம் சுவாமிகள் எனும் விளக்கில் ஏற்றப்பட்ட விளக்கான மோகனதாஸ் சுவாமிகள் கடமையே கண்ணென சந்நிதியான் ஆச்சிரமத்தினைக் கட்டிக் காத்து வருகிறார். "குருவருள் கிடைத்தால் திருவருள் கிடைக்கும்" எனக் கூறி தனது உரையினை நிறைவுபடுத்தினார் திரு ஆ. சிவநாதன் அவர்கள்.

அடுத்து உரையாற்றிய கவிமணி அன்னைதாசன் அவர்கள், தமது இளமைக் காலத்தில் ஆனந்தாச்சிரமத்தில் மயில்வாகனம் சுவாமிகளுடனான அனுபவங்களை சுருங்கக் கூறியதுடன், அழகான ஒரு கவிதையினையும் சபையில் சமர்ப்பித்தார். அக்கவிதை இது:

அந்தநாள் முதல் இந்த நாள் வரை
ஆண்டி போலுந்தன் அடியார்கள்
இந்த வீதியில் திரிகின்றார் - முருகன்
என்றும் எம்மோடு இருக்கின்றான்
சொந்தமும் ஒரு பந்தமும் இன்றி
கந்தனே தஞ்சம் என்றெண்ணி

சிந்தையில் எந்த வஞ்சமுமின்றி
கந்தனோடிங்கே வாழ்கின்றார்
அந்த வரிசையில் வந்தவரே எங்கள்
தங்க மயில் வாகனனாரையா
இன்றும் அவர்பணி செய்து மகிழ்கிறார்
எங்கள் மோகன் சுவாமிகள்.

மயில்வாகனம் சுவாமிகள் திருநாமம் என்றும் வாழ்க!

*நீ நீதியாக நடக்கலாம். ஆனால் மற்றவருக்கும் அது நீதிதான் என்பதைத் தெரியப்படுத்து.*

# வட இந்திய யாத்திரை - 05

(தொடர்ச்சி...

– மோகனதாஸ் சுவாமிகள் –

24.11.2016 வியாழன் காலை 8 மணி அளவில் காசியை சுற்றிப் பார்ப்பதிலும் சூழவுள்ள ஆலயங்களைப் பார்ப்பதிலும் ஆவல் கொண்டு எமது குழுவினர் காசியின் காவல் தெய்வமாக விளங்கும் கால பைர வரை தரிசிக்கும் எண்ணத்துடன் ஆலயத்தை அடைந்தோம். ஆலயம் அமைந்த பகுதி யானது மக்கள் குடியிருப்புக்களின் மத்தியில் அமைந்துள்ளது. நம்மூர் ஆலயங்களைப் போலல்லாது சிறு ஆலயமாகவும், பல சந்து பொந்துகளுக்கிடையில் இருக்கின்ற காரணத் தால்த்தான் முஸ்லீம்களின் படையெடுப்புக் காலத்தில் தப்பித்தது ஆலயம் என்று கோயில் வரலாறு சொல்கின்றது. ஆலயம் சிறிது என்றாலும் கீர்த்தி பெரிது என்பதை அங்கே வணங்கவரும் அடியார்கள் கூட்டத்தினை வைத்து கணக்கிடக் கூடியதாக இருந்தது. எமது குழுவினரும் கூட்டத்தோடு கூட்டமாக கலந்து பைரவ தரிசனத்தை முடித்தார்கள். தரிசனத்தின்போது திருடர் பயமும் இருந்தது. அதனை நாம் எம் குழுவினருக்கு வலியுறுத்தி மிகக் கவனமாக தரிசனத்தை முடித்து சார நாத்தை நோக்கி எமது பயணம் ஆரம்பம் ஆயிற்று.

சாரநாத் காசியிலிருந்து 6மைல் தூரம் வடக்கே உள்ளது. இது புத்த மதத்தின் தாய்வீடு என்று வர்ணிக்கப்படுகிறது. சாரநாத் பௌத்த கோயில் கி.மு. 5ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக அறியமுடிகிறது. புத்தர் இங்கே சாதாரண குடிசையில் இருந்து தவம் செய்ததனால் இந்த இடம் புனிதம் அடைந்து உள்ளது. பிற்காலத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட ஆலயத்தை நாமும் வணங்கி காசிராஜாவின் அரண்மனையைப் பார்வை யிடும் வண்ணம் அவ்விடத்தை அடைந்தோம்.

காசிராஜாவின் அரண்மனை கங்கை நதிக்கரையின் தெற்குப் புறமாக அமைந்துள் ளது. அரண்மனையின் ஒரு பகுதியை நூதன சாலையாக மாற்றியுள்ளார்கள். ராஜா பாவித்த அத்தனை பொருட்களும் காட்சிக் காக வைக்கப்பட்டுள்ளன. அப்பொருட்கள் வைத்திருந்த நேர்த்தி மிக அழகாகவும் அதற்கு உரிய விளக்கங்களும் எழுதப்பட்டிருந்தமை எல்லோரையும் கவர்ந்திருந்தது. ஈற்றில் நிலமட்டத்தின் கீழ் அமைந்துள்ள சுரங்கத் தினூடாக உள் நுழைந்து கோட்டையின் மேற்புறம் வர, அங்கிருந்த ஒரு சிறிய சிவன் ஆலயம் எம்மைக் கவர்ந்தது. ஒருபுறம் கங்கை நதி நீரோட்டமும் மறுபுறம் படிக் கட்டுக்களும், அமைதியான சூழலும் மன தில் ஒருவித அமைதியைத் தோற்றுவித்தது. இவற்றைப் பார்வையிட இருபது ரூபாய் செலுத்தி அனுமதிச் சீட்டும் பெற்றுத்தான் பார்வையிட வேண்டும் எனும் நியதி அங்கே கடைப்பிடிக்கப்படுகிறது.

தொடர்ந்து காசி ராஜாவினால் வழங் கப்பட்ட பனராஸ் இந்து பல்கலைக்கழகத் தைப் பார்வையிடும் வண்ணம் அவ்விடத்தை அடைந்தோம். காசி ராஜாவினால் அன்பளிப் பாக வழங்கப்பட்ட 1300 ஏக்கர் நிலப்பரப்பில் இப்பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. மிகப் பெரிய பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவு களுக்கான வளாகங்கள் தனித்தனியே காணப் படுகின்றது. வளாகத்துள் காணப்படும் பெரிய கட்டிடங்களும் அவற்றின் அழகும் பார்ப் போரைப் பிரமிக்க வைத்தது. சமஸ்கிருத

*பணிவு என்பது ஒரு பண்புதானே தவிர, அடிமைச் சின்னத்தின் அடையாளமல்ல.*

வளாகத்தில் அழகிய விஸ்வநாதர் ஆலயம் ஒன்றைக் கட்டியுள்ளார்கள். ஆலயம் கட்டப் பட்டுள்ள நேர்த்தியும் பளிங்குக் கல்லினா லான தள விரிப்பும் மூல மூர்த்தியாக விளங் கும் விஸ்வநாதரும் பரிவார மூர்த்திகளின் சிறப்பும் எல்லாவற்றுக்கும் மேலாக அங்கே இடம்பெற்ற அமைதியான வழிபாடும் எங்குமே காணமுடியாததொன்று.

அவ்வழிபாட்டை முடித்து சங்கடம் தீர்க்கும் ஆஞ்சநேயரைத் தரிசித்தோம். ஆல யம் இருக்கும் பகுதியைச் சூழ இராணுவ முகாம் அமைந்துள்ளபடியால் முதலில் வழி படப் போவோர் அச்சம் கலந்த உணர்வுடன் தான் போகவேண்டி இருந்தது. வழிபாட்டுக் குப் போகின்றவர்கள் தொலைபேசி, புகைப் படக் கருவி போன்றவற்றை உட்கொண்டு செல்லுவதற்குத் தடை போட்டுள்ளார்கள். ஆனாலும் முதியவர்கள் போவதற்காக வாகன வசதி இலவசமாக செய்துள்ளார்கள். அதன் பிரகாரம் எமது குழுவினரில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் வாகனத்தில் சென்று ஆஞ்சநேயரை வணங் கினார்கள். இவ்வழிபாடுகளில் நாம் ஒன்றைக் கூறத்தான் வேண்டும். தென் இந்திய யாத் திரையின்போது நாம் காணாத அமைதியுட னான வழிபாடு வட இந்திய தல யாத்திரை யில் காணக்கூடியதாக இருக்கின்றது. எவ் வளவு கூட்டமாக இருந்தாலும் வழிபடும் இடம் ஒரு அமைதி சூழ்ந்த இடமாகவும் வணங்குவோரின் மனதில் ஒரு அமைதியை யும் தோற்றுவிக்கிறது என்பது உண்மையே. இதை நாம் அனுபவிக்கும்போது இங்கேயே இருந்துவிடலாம் எனும் எண்ணம் எம் எல் லோர் மனத்திலும் தோன்றும். (தொடரும்...

## கண்ணீர் அஞ்சலி

1988ஆம் ஆண்டு காலப்பகுதியில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆரம்பித்த அன்னதானச் செயற்பாட்டினை ஊக்குவித்து ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை ஆச்சிரமத்தோடு இணைந்து தன்னாலான ஆதரவினை வழங்கிக்கொண்டிருக்கும் நெல்லியடி மருதம் ஸ்தாபனத்தின் உரிமையாளரான திரு ஐயாத்துரை சிவநாதன் அவர்களது துணைவியார் திருமதி கிருத்திகா சிவநாதன் அவர்கள் 23.07.2018இல் இறைபதம் அடைந்தார். அன்னாரின் மறைவினையிட்டு எமது மனத்துயரினை அமரரின் குடும்பத்திற்குத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சந்நிதி வேலவனின் பாதாரவிந்தங்களை அடையவேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றோம்.

சுபம், சாந்தி.

-சந்நிதியான் ஆச்சிரமம்-

*பொறாமையுடன் போட்டி இருக்கிற வரையில் யாருக்கும் மனநிறைவு உண்டாகாது.*

# ஆவணி மாத வாராந்த நிகழ்வுகள்

03.08.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "யோகாசன தியானம்"

வழங்குபவர்கள் :- பரமானந்தா ஆச்சிரம முதியோர், சிறுவர் நிகழ்வு

---

10.08.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "இறவாத இன்ப அன்பு"

வழங்குபவர் :- திரு ஆறு. திருமுருகன் அவர்கள்

(தலைவர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்)

---

17.08.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "உய்வாய் மனனே"

வழங்குபவர் :- திரு ச. லலீசன் அவர்கள்

(பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)

---

24.08.2018 வெள்ளிக்கிழமை உற்சவகால நிகழ்வு

சப்பறத் திருவிழா

---

31.08.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

ஞானச்சுடர் ஆவணி மாத வெளியீடு

248ஆவது மலர்

வெளியீட்டுரை :- திரு க. ஸ்ரீச்சந்திரன் அவர்கள்

(ஆசிரியர் அ.மி. கல்லூரி)

மதிப்பீட்டுரை :- திரு க. நடேசன் (தெணியான்) அவர்கள்

(இளை. அதிபர்)

பதிவு இல. QD/49/NEWS/2018

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

